# செம்மண்

நிலம் 1 துகள் 36 வள்ளுவர் ஆண்டு 2052, 20 - 26 பங்குனி 2021 வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-




## உலகமே கொண்டாடும் தமிழ்ப் பாடல்

# என்ஜாய் எஞ்சாமி!

**ஒரு தமிழ்ப் பாடல் உலகம் முழுவதையும் தன் இசையால் வண்ணத்தால் கட்டிப்போட்டிருக்கிறது.**

**யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று இந்த உலகத்திற்கே வகுப்பெடுத்தவன் தமிழன். அந்த வழியில் இந்த உலகம் மனிதர்களுக்கு மட்டுமல்ல எல்லா உயிரினங்களுக்குமே சொந்தமானது என்ற பொதுக் கருத்தை வலியுறுத்துகின்றது இந்தப் பாடல்.**

யுடியூப் தளத்தில் வெளியாகி இரண்டு வார காலத்திற்குள் 75 மில்லியன் (7 கோடி 50 லட்சம்) தடவைகள் பார்க்கப்பட்டு சாதனை படைத்திருக்கிறது என்ஜாய் எஞ்சாமி என்கிற தமிழ்ப் பாடல்.

தமிழ் மொழி அறிந்தவர்களால் மட்டுமல்ல தமிழே தெரியாதவர்கள்கூட, யுரியூப்பிலே சுயாதீன விமர்சகர்களாக இருப்பவர்கள்கூட இந்தப் பாடலை உலகத் தரம் வாய்ந்ததொரு படைப்பு என்று கொண்டாடுகின்றார்கள்.

கூக்கூ... கூக்கூ...

என்ஜாய் எஞ்சாமி, வாங்கோ வாங்கோ ஒன்னாகி என்கிற இந்தப் பாடல் மொழிகளைக் கடந்து மனிதர்களை இணைக்கும் அற்புதத்தை நிகழ்த்திக்கொண்டிருக்கின்றது.

தமிழ்த் திரைப்படப் பாடல்களுக்கு வெளியே தனியன்களின் (தனிநபர்கள்) இசை முயற்சிகள் இவ்வளவு பெரிய வரவேற்பைப் பெற்றிருப்பது இதுவே முதற்றடவை.

சுயாதீனத் தனியன்களான இசைக் கலைஞர்களின் முயற்சிகளை வெளியுலகுக்குக் கொண்டுவரும் முயற்சியாக இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் மற்றும் சில கனேடியர்களால் உருவாக்கப்பட்ட மஜா நிறுவனத்தின் சார்பில் இந்த மாதம் 7ஆம் நாள் வெளியிடப்பட்டது இந்தப் பாடல்.

10 நாட்களுக்குள் 27 மில்லியனுக்கும் மேற்பட்ட பார்வைகளைப் பெற்று சாதித்திருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக என்ஜாய் என்கிற ஆங்கில வார்த்தையைத் தவிர்த்து இந்தப் பாடலில் உள்ள அனைத்து வார்த்தைகளும் தமிழ் மட்டுமே என்பதும் சிறப்பு.

ரஷ்ய நாட்டு யுரியூப்பர் ஒருவர்கூட இதனைக் கோடிட்டுக் காட்டிருக்கிறார். தமிழ்ப் பாடல்களில் அதிகமாக ஆங்கிலச் சொற்கள் கலந்திருக்கும், ஆனால் இந்தப் பாடல் தமிழ் மொழியில் இருப்பது சிறப்பு என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார். அத்தோடு இது உலகத் தரம் வாய்ந்த ஒன்று என்றும் சிலாகித்திருக்கிறார்.

இந்தப் பாடலை பிரபல திரை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**

# காணி - நிலம் வேண்டும்

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இருந்த வடக்கு மாகாணக் காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவின் ஆவணங்களை அநுராதபுரத்துக்குக் கொண்டுசென்ற விடயம் தமிழர்கள் மத்தியில் பெரும் பேசுபொருளாக இருந்தது. அநுராதபுரத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட அந்த ஆவணங்கள் போனவேகத்திலேயே யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்குத் திரும்பி வந்தன. மாவட்ட செயலகத்தில் இருந்தால் என்ன, அநுராதபுரத்தில் இருந்தால் என்ன அவற்றை முழுவதுமாகத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கும் அவை மீது அதிகாரம் செலுத்துவதற்கும் கொழும்பு அரசால் முடியும். ஆதலால் அந்த ஆவணங்கள் இடம்மாறிப் பேணப்படுவதால் எவ்வித நன்மை - தீமையும் இல்லை.

இந்தக் காணி ஆவணங்கள் அங்குமிங்கும் அலைத்தெடுக்கப்படுகின்ற அதேநேரத்தில் மாவட்ட செயலகத்தின் பணிப்பில் பிரதேச செயலகங்கள் தமது எல்லைக்குட்பட்ட காணிகளைக் கணக்கெடுக்கின்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றன. காணித் துண்டங்கள்; ஒவ்வொன்றையும் கிராம அலுவலர் பிரிவுகளின்படி பதிவு செய்வதுடன் அந்தக் காணித் துண்டங்களின் தற்போதைய நிலை, அவற்றின் தன்மை மற்றும் புவியியல் அமைவிடம் எனக் கூர்மைப்படுத்தப்பட்ட தகவல்களாகக் காணிகள் குறித்த பதிவுகளை அரசு முன்னெடுக்கிறது. இந்தக் காணிப் பதிவுகள் தமிழர் பிரதேசங்களைக் குறிவைத்தே முன்னெடுக்கப்படுகின்றன என்பது ஒருசாராரின் கருத்து. அவை தமிழர் பிரதேசங்களைக் குறிவைத்துச் செய்யப்படுகின்றனவோ, இல்லையோ தமிழர்களின் வசமிருக்கின்ற ஏராளம் காணித்துண்டுகளில் தமிழர்கள் இல்லை என்கிற யதார்த்தமும்கூடத் தமிழர்களின் காணிகள் மீது அரசின் கழுகுக் கண் விழுவதின் பின்னுள்ள காரணங்களில் ஒன்று.

வடக்கில் மக்கள் செறிந்து வாழ்கின்ற நகர்ப்புற மற்றும் ஒரு சில கிராமப் புறங்களைத் தவிர்த்து ஏராளம் காணித் துண்டங்கள் பயன்பாடற்றவைகளாகவும், உரிமையாளர்களைத் தொலைத்தவைகளாகவுமே இருக்கின்றன. பற்றை மண்டிச் சீர்கேடான விடயங்களுக்கு வழிகோலுவதுடன் உரிமையாளர்கள், பராமரிப்பாளர்கள் இல்லாமல் கிடப்பதால் உரிமம் கொண்டாடும் மற்றும் காணித் தகராறுகள் சிலவற்றுக்கும்கூட வழியேற்படுத்துபவையாக இருக்கின்றன. போர் காரணமாகப் புலம்பெயர்ந்துள்ள பலரின் காணிகள் ஒதுக்குப்புறங்களாகியிருக்கின்றன. அந்தக் காணிகளில் அவர்கள் வாழ்ந்த காலத்தில் அமைக்கப்பட்ட பழம் பெரும் வீடுகள், கட்டடங்கள் என்பன சிதைந்துபோன நிலையில் கிடந்து சமூகச் சீர்கேடான விடயங்களுக்கு வழிகோலுகின்றன.

களவாக மாடுவெட்டும் சம்பவங்கள், கசிப்புக் காய்ச்சும் சம்பவங்கள் தொடங்கி மாணவி வித்தியா கொலை வரைத் தொடர்ந்த புங்குடுதீவில் இந்தத் தன்மையை அதிகம் காணலாம். காணி உரிமையாளர்கள் அனைவரும் புலம்பெயர் தேசங்களில் நகரக் காற்றைச் சுவாசிப்பவர்களாக இருக்க, இங்கு அவர்களின் காணிகள் பற்றைகளாகத் தூர்நாற்றம் வீசுகின்றன. காணிகள் இங்கேயும் அதன் உரிமையாளர்கள் வேறொரு இடத்திலும் இருப்பதற்குக் காலச்சூழல் காரணமாக இருந்தாலும் தற்போதைய இயல்பு நிலையைப் பயன் படுத்தித் தமிழர்கள் தமது காணிகளைத் தமக்குள்ளே பரிமாறவோ, இல்லாதவர்களுக்குக் கையளிக்கவோ அல்லது தாம் வந்து குடியமரவோ முன்வருவது சிறந்தது.

அரசு காணிகளைப் பதிவிடுகின்ற நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது என்பதை அறிந்த பலரும் அவர்தம் பற்றைக் காடுகளை உரிமைகோர அடிபடும் நிலை தோன்றியிருக்கிறது. இதனால் காணிகள் பலவும் தூய்மைபடத் தொடங்கியிருக்கின்றன. ஆனால், இப்போதும்கூடத் தமது காணிகளைப் பேண முடியாதவர்கள் காணி நிலம் வேண்டும் என்கிற தமது மண் ஆசையை இனியாவது துறந்து தமது காணிகளைக் காடாக விடாமல் காணி இல்லாதவர்களுக்குக் கொடுக்க முன்வரவேண்டும்.





இசையமைப்பாளர் சந்தோஷ் நாரயணனின் மகள் தீ (டீ) மற்றும் சுயாதீனப் பாடகர், பாடலாசிரியரான அறிவு ஆகியோர் இணைந்து பாடியிருக்கிறார்கள். அவர்கள் இருவரும் சேர்ந்தே பாடல் காணொலியும் நடித்திருக்கிறார்கள்.

வழக்கமான திரையிசைப் பாடல்களில் இருந்து வெகுதூரம் வேறுபட்டிருக்கின்றது இந்தப் பாடல். ஒடுக்கப் பட்ட மக்களின் பாடல், இசை வடிவ மாகக் கொள்ளப்படும் ராப் இசையுடன் தமிழ் அடையாளமான ஒப்பாரி இசையையும் சேர்த்துக் கொண்டு தமிழ் இசையை வேறொரு தளத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறது இந்தப் பாடல்.

தமிழர்களின் தூய இசை வடிவமாக ஒப்பாரியையும் கானாப் பாடல்களையுமே கருத முடிகின்றது என்பது இந்தப் பாடலைப் பாடியும் எழுதியும் இருக்கும் அறிவின் கருத்து. அதற்கு மேலாக இந்தப் பாடலுக்கும் இலங்கைக்கும்கூட மறைமுகத் தொடர்பு ஒன்றுண்டு.

தனது பாட்டியான வள்ளியம்மா, தமிழ்நாட்டிலிருந்து பஞ்சம் பிழைப்பதற்காக ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இலங்கைத் தேயிலைத் தோட்டத்திற்குக் கூலித் தொழிலாளியாக அழைத்து வரப்பட்ட பின்னர் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் சொந்த நாட்டுக்கே திருப்பியனுப்பப்பட்டவர்.

**“ தமிழர்களின் தூய இசை வடிவமாக ஒப்பாரியையும் கானாப் பாடல்களையுமே கருத முடிகின்றது என்பது இந்தப் பாடலைப் பாடியும் எழுதியும் இருக்கும் அறிவின் கருத்து. ”**



அவரது ஆதரவில் வளர்ந்த அறிவு தனது பாட்டியின் நினைவாக, அவரின் வாழ்முறையை விழிப்பதாக இந்தப் பாடலைத் தான் எழுதினேன் என்றுள்ளார்.

தீ இன் தனித்துவமான தோற்றம் மற்றும் குரல்போக நடன அசைவுகளும் இந்தப் பாடலுக்குப் பெரும் பலம்.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று இந்த உலகத்திற்கே வகுப்பெடுத்தவன் தமிழன். அந்த வழியில் இந்த உலகம் மனிதர்களுக்கு மட்டுமல்ல எல்லா உயிரினங்களுக்குமே சொந்தமானது என்ற பொதுக் கருத்தை வலியுறுத்துகின்றது இந்தப் பாடல். அதுவும்கூட உலகம் முழுவதும் இந்தப் பாடல் கொண்டாடப்படுவதற்கான காரணங்களில் ஒன்றாக அமையலாம்.

அதற்கு மேலாக பாடலாக்கப்பட்ட விதம், நுணுக்கம், இசை, காட்சிகள் என்று பலவும் உலகத் தரத்திற்கு இருப்பதும் அதன் வெற்றிக்கு முக்கியமானது.

மேற்கு நாடுகளில் திரையிசை மற்றும் பாடல் தொகுப்புகளுக்கு வெளியே இதுபோன்ற சுயாதீனப் பாடல்கள் ஏற்கனவே மிகப் பெரிய தாக்கத்தைச் செலுத்தியிருக்கின்றன. ஆனால், தமிழில் அப்படி நடப்பது இதுவே முதல் தடவை.

மஜா அதற்கான வழிகாட்டியாக மாறியிருக்கின்றது. அதன் முதல் வெளியீடான இந்தப் பாடல் கொடுத்துள்ள வெற்றி இனிவரும் காலங்களிலும் இதுபோன்ற சிறந்த தனிப் படைப்புக்களின் வருகையை உறுதிப்படுத்துவதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸூடோ ஸ்வாமி

# தடுப்பூசியிலும் வில்லங்கமா?



நாய் மனிதனைக் கடித்தால் அது செய்தி அல்ல மனிதன் நாயைக் கடித்தால் அதுதான் செய்தி. இது, செய்தி என்றால் என்ன என்பதற்குத் தரப்படும் தொடக்க விளக்கமாகும். கொவிட்-19 தொற்று உலகை ஆட்டிப்படைத்த காலத்திலிருந்து கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் இறப்புக்கள், பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள், தனிமைப்படுத்தல் எனச் செய்திகளை வெளியிட்டுக்கொண்டிருந்த ஊடகங்கள் பின்னர் தடுப்பு மருந்து தொடர்பான தகவல்களைச் சுமந்து வந்து நம்பிக்கையளித்தன. தடுப்பு மருந்தினை யார் யார் உற்பத்தி செய்கிறார்கள், எந்தெந்த நாடுகள் தமது குடிமக்களுக்குத் தடுப்பு மருந்தேற்றும் பணியைத் தொடங்கிவிட்டன,எந்த எந்தப் பிரபலங்கள் தடுப்பு மருந்தினைப் பெறுகிறார்கள் என்பவைகூடச் செய்தியாக வந்தன. இப்போதோ தடுப்பு மருந்தினால் ஏற்பட்ட சில அரிதான பக்கவிளைவுகள் செய்தியாகத் தொடங்கியுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமான பாதிப்புக்கள் அதிகமாகி உலகம் கடும் அழுத்தத்தினை எதிர்கொண்டிருந்தபொழுதில் தடுப்பு மருந்து தொடர்பான ஆய்வுகளும் அவை தொடர்பான பரிசோதனைகளும் கவனத்தைப் பெற்றிருந்தன. பெரியளவில் கால தாமதமின்றிக் கொரோனா தொற்றினைக் கட்டுப்படுத்தக்கூடிய மருந்துகளைக் கண்டறிவதற்காக மருந்து உற்பத்தி நிறுவனங்களும் மருந்து ஆராய்ச்சி நிறுவனங்களும் விடாமுயற்சியுடன் பணியாற்றியிருந்தன. இதன் பயனாக ஒப்பிட்டளவில் வினைத்திறனான முடிவுகளை ஆய்வுகளில் தந்த தடுப்பு மருந்துகள் மக்கள் பாவனைக்கான அனுமதிக்கு விண்ணப்பித்தன. மருந்துகளை ஒழுங்குபடுத்தும் நிறுவனங்களும் உலகில் இருக்கக்கூடிய அவசரத்தினைக் கருத்தில் கொண்டு அவசர பயன்பாட்டிற்கான அங்கீகாரத்தினையே அந்தத் தடுப்பூசிகளுக்கு வழங்கியிருந்தன. இப்போது நாடுகள் பலவும் மும்முரமாகத் தடுப்பு மருந்தினைக் கொள்வனவு செய்து தமது குடிமக்களுக்கான தடுப்பு மருந்தேற்றல் திட்டத்தினைத் தொடக்கி நடைமுறைப்படுத்தி வருகையில், தடுப்பு மருந்து சார்ந்ததெனக் கருதப்படும் சில அரிதான பக்க விளைவுகள் பற்றிய செய்திகள் ஊடகங்களை ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளன.

**குருதி உறைவுடன் தடுப்பூசிக்கு சம்பந்தம் உள்ளதா?**

தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட சிலருக்கு ஏற்பட்டுள்ளதாகச் சந்தேகிக்கப்படும் குருதி கட்டிபடல் அல்லது குருதியுறைவு தடுக்கப்படுதல் தொடர்பில் ஆய்வுகளை முன்னெடுக்கவேண்டிய தேவை ஒன்று உணரப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளில் இந்த விடயம் அவதானிக்கப்பட்டு பதிவாகியுள்ள நிலையில், எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தினைச் சேர்ந்த 40 வயதுடைய விடுதி ஊழியர் ஒருவர் இரு வாரங்களுக்கு முன்னர் கொவிட்-19 தடுப்பூசியைப் பெற்றபின் கடந்த 14ஆம் திகதி உயிரிழந்திருந்தார். குருதி உறைவதை வசதிப்படுத்தும் குருதிக்கூறான குருதிச் சிறுதட்டுக்களின் அளவு அவருடையஉடலில் குறைவாக இருந்தமை கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், குருதி உறைந்தமையை அடையாளப்படுத்தும் மாதிரிகளும் அவரது உடல்கூறாய்வுப் பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. தடுப்பூசியின் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டது என்பதற்குப் போதுமான ஆதாரம் எதுவும் இல்லாத நிலையில் ஆய்வுகூடத்தில் மேலதிக பரிசோதனைகளை மேற்கொண்டு ஆராயவிருப்பதாக காலி காராப்பிட்டிய உதவி சட்ட மருத்துவ அதிகாரி குறிப்பிட்டிருக்கிறார்.

> **கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமான பாதிப்புக்கள் அதிகமாகி உலகம் கடும் அழுத்தத்தினை எதிர்கொண்டிருந்தபொழுதில் தடுப்பு மருந்து தொடர்பான ஆய்வுகளும் அவை தொடர்பான பரிசோதனைகளும் கவனத்தைப் பெற்றிருந்தன.**

சென்ற புதன்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட இராஜாங்க அமைச்சர் சுதர்சினி, இலங்கையில் தடுப்பூசி பெற்றுக் கொண்ட எவருக்கும் குருதி உறைவுகள் ஏற்படவில்லை - என்ற தோரணையில் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.


**ஐரோப்பிய நாடுகளில் தடுப்பூசி இடைநிறுத்தம்**

சர்ச்சைக்குரிய குருதி உறைவு நிலைமைக்கு அஸ்ட்ரா ஸினீகா தடுப்பூசி பங்களிப்பதாகச் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், ஐரோப்பிய நாடுகள் சில தமது தடுப்பூசி ஏற்றும் பணியை இடை நிறுத்தி குறித்த நிலைவரம் தொடர்பில் ஆராய்ந்தன. குருதி கட்டிபடல் தொடர்பான நிலைமை தடுப்பூசியுடன் தொடர்புடையது என்பதற்கு இதுவரை போதுமான ஆதாரங்கள்

# துயர் பகிர்வு

அமரர்

## முருகுப்பிள்ளை சிவநேசன்



செம்மண் ஆரம்பித்த காலத்தில் இருந்தே எம்மோடு தேளோடு தோள் நின்று பயணித்த முருகுப்பிள்ளை சிவநேசன் அவர்களின் திடீர் மறைவுச் செய்தி எங்களை பெரும் சோகத்திலும் ஆழ்ந்த சோகத்திலும் ஆழ்த்தியுள்ளது. தனது தொடர்கள், எழுத்துக்களால் தனக்கென பெரும் வாசகர் வட்டத்தை சம்பாதித்துக் கொண்டவர் பன்முக ஆளுமை கொண்ட மு. சிவநேசன். அவரது பிரிவு தாங்கவியலாதது. அதே நிலையில் இருக்கும் அவரது குடும்பத்தினரின் எங்களது துயரைப் பகிர்ந்து கொள்கிறோம்.

மறைவு - 18.03.2021

செம்மண் ஆசிரியர் பீடம்,
பசுமை ஊடக இல்லப் பணிப்பாளர்
மற்றும் பணியாளர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிடைக்கவில்லை என்பது ஒருபுறம் இருக்க, மருத்துவ மற்றும் மருந்தாக்கல்துறை சார் வல்லுநர்கள் தடுப்பூசிக்கும் குருதி உறைவுக்கும் சம்பந்தம் இல்லை என்பதாகவே கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

பிரான்ஸ் நாட்டிலும் இதுபோன்ற குற்றச்சாட்டுக்களை அடுத்து தடுப்பூசி வழங்கல் இடைநிறுத்தப்பட்டது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்கான ஆதாரம் எதுவும் இல்லை என்று உலக சுகாதார அமைப்பு உறுதியாகத் தொடர்ந்து கூறிவந்த நிலையில் அங்கு வியாழக்கிழமை மீண்டும் தடுப்பூசி ஏற்றும் பணிகள் தொடங்கப்பட்டன.

**தடுப்பூசி வழங்கலைத் தொடரவே இலங்கை திட்டம்**

இலங்கையிலும் அஸ்ட்ராஸெனீகாவின் கொவிஷீல்ட் தடுப்பூசியே பயன்பாட்டில் உள்ளபோதிலும் தடுப்பூசி வழங்கல் திட்டத்தினை முன்கொண்டு செல்லவே ஆட்சியாளர்கள் திட்டமிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை ஊடக சந்திப்பில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண இதனை உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கிறார். குருதி உறைவு தொடர்பான சந்தேகம் எழுந்துள்ள நிலையிலும் பொது மக்களைக் குழப்பமடையாது இருக்கும்படி கேட்டுக்கொண்டுள்ள அவர், குருதி உறைவை ஏற்படுத்தியதாகக் கருதப்படும் குறித்த தடுப்பூசி தொகுதி இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை எனவும் அறிவித்திருக்கிறார். பல்கேரியா,டென்மார்க்,நோர்வே,நெதர்லாந்து, ஜேர்மனி, இத்தாலி, பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் என்பன தமது தடுப்பூசி வழங்கல் திட்டத்தினைத் தற்காலிகமாக இடைநிறுத்தியிருப்பதையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை.

இலங்கையில் இந்த வருடம் ஜனவரி 29ஆம் திகதி ஆரம்பித்துவைக்கப்பட்ட கொவிட்-19 தடுப்பு மருந்தேற்றும் திட்டம் தற்போதுவரையில் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றது. கடந்த செவ்வாய்க்கிழமைவரையில் சுமார் 7 இலட்சத்து 96 ஆயிரத்து 792 பேருக்கு இந்தத் தடுப்பு மருந்து வழங்கப்பட்டிருக்கிறது.

கொரோனா தடுப்பூசி காரணமாக இறப்பு சம்பவித்ததாக உறுதிப்படுத்தப்பட்ட சம்பவம் எதுவும் பதிவாகவில்லை என்பது வலியுறுத்தப்படுகையில், உலக சுகாதார அமைப்பின் தலைமை அறிவியலாளரான மருத்துவர் சௌம்யா சுவாமிநாதனும் மேற்குறித்த கருத்தை ஆதரித்திருக்கிறார். ஆஸ்ட்ராஸெனீகா தடுப்பூசி பெற்றுக்கொண்டதனால் குருதி உறைவதாக கூறப்பட்டாலும், உண்மையில் எதிர்பார்த்ததைவிடக் குறைவான விகிதத்தில்தான் அது நேர்ந்துள்ளது என்கிறார் அவர்.

**அரச தலைவரின் பணிப்பு**


இலங்கையில் பாவிக்கப்படுவதற்கென இதுவரையில் இரண்டு கொரோனாத் தடுப்பூசிகளுக்கே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஒக்ஸ்போர்ட்ஃ அஸ்ட்ரா ஸெனீகா தயாரிப்பான கொவிட் ஷீல்ட் தடுப்பூசியையும் ரஷ்யத் தயாரிப்பான ஸ்புட்னிக்-வீ தடுப்பூசியையும் இலங்கையின் தேசிய மருந்து ஒழுங்குபடுத்தும் நிறுவனம் அனுமதித்திருக்கிறது. எனினும், சீனத் தயாரிப்பான சினோபார்ம் தடுப்பூசியை இலங்கையில் பாவனைக்கு விடுவதற்காக விண்ணப்பித்துள்ளபோதிலும், மருந்து ஒழுங்குபடுத்தல் நிறுவனம் அதற்கான அனுமதியைக் கடந்த புதன்கிழமை வரையில் வழங்கவில்லை. குறித்த தடுப்பூசியைப் பயன்பாட்டுக்கு விடுவதற்குத் தேவையான, போதுமான தகவல்கள் அதன் உற்பத்தியாளரினால் சமர்ப்பிக்கப்படாமையினாலேயே மருந்து ஒழுங்குபடுத்தல் நிறுவனம் அதற்கான அங்கீகாரத்தினை வழங்கியிருக்க வில்லை. எனினும், சீனத் தயாரிப்பான மேற் படி தடுப்பூசிக்கான அனுமதியை விரைவு படுத்தும்படி அரச தலைவர் பணித்துள்ள தாகத் தெரிய வருகிறது. ஆறு இலட்சம் சீனத் தடுப்பூசி களை இலங்கைக்கு வழங்கச் சீனா தயாராக உள்ளதாகவும் அறிவிக்கப் படுகின்றது.

**அரசியல் அழுத்தத்திற்குள்ளாகிறதா மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை?**

இது இவ்வாறு இருக்கையில், இலங்கை யின் தேசிய மருந்து ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் குழு உறுப்பினர்கள் நால்வரின் பதவி சடுதியான வகையில் முடிவுறுத்தப்பட்டிருக்கிறது. 2015ஆம் ஆண்டுக்குப் பின் நிறுவப்பட்ட தேசிய மருந்து ஒழுங்குபடுத்துதல் அதிகாரசபை யின் குழு அங்கத்துவத்தினை வகித்த நான்கு நிபுணர்களுக்குக் கடந்த 8ஆம் திகதியிலிருந்து நடைமுறையாகும் வகையில் பதவி முடிவுறுத்தல் கடிதங்கள் வழங்கிவைக் கப்பட்டிருக்கின்றன. இது தொடர்பில் செய்திவெளி யிட்டிருக்கும் சன்டே ரைம்ஸ், சீன தடுப்பூசிக்கான அங்கீகாரத்தினை வழங்குவதில் தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் நிலவும் இழுபறிக்கும் இந்த விடயத்திற்கும் தொடர்பு இருப்பதாகச் சந்தேகம் வெளியிட்டிருக்கிறது. மருத்துவர் பாலித அபேயக்கோன், கபிலரணசிங்க, ஹர்ஷன கருணாரத்ன மற்றும் சமின்டிக்கா ஹேரத் ஆகிய உறுப்பினர்களே குழு அங்கத்துவத்திலிருந்து விலக்கப்பட்டுள்ளனர். கடந்த 8ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அவர்களுடைய பதவி முடிவுறுத்தப்பட்டிருக்கிறது. இந்தப் பதவி முடிவுறுத்தல் கடிதங்கள் கடந்த 8ஆம் திகதி கூட்டப்பட்ட அவசர கூட்டத்தினைத் தொடர்ந்த விவகாரம் எனச் சன்டே ரைம்ஸ் குறிப்பிடுகின்றது. குறித்த கூட்டத்தில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, மருந்துப்பொருள் விவகாரங்க ளுக்கான இராஜாங்க அமைச்சர் ஜயசுமன, கொவிட் நோய்த் தடுப்பு தொடர்பான அமைச்சர் சுதர்ஷினி ஆகியோர் கலந்துகொண்டனர் எனவும் சீனத் தயாரிப்புத் தடுப்பூசிக்கு அவசர அனுமதியை வழங்கலில் உள்ள தாமதம் குறித்து ஆராயப்பட்ட தாகவும் அறியக் கிடைக்கின்றது.

குறித்த கூட்டத்தில் பங்குபற்றிய மருந்து ஒழுங்குபடுத்தல் நிறுவனத் தரப்பினர், சினோ பார்ம் உற்பத்தியாளர்களினால் தடுப்பூசியை அனுமதிப்பதற்குத் தேவையான பாதுகாப்பு மற்றும் வினைத்திறன் சார்ந்த ஆவணங்கள் கையளிக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியதோடு உலக சுகாதார அமைப்பினாலும் அந்தத் தடுப்பூசிக்கு இதுவரையில் அவசர அனுமதி வழங்கப்படவில்லை என்பதை வலியுறுத்தியிருக்கிறார்கள்.

கடந்த வியாழக்கிழமை கிடைத்த உத்தியோகப்



பற்றற்ற தகவல் ஒன்றின்படி,தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் அசித டி சில்வாவும் தமது பதவி விலகல் கடிதத்தினை கையளித்துள்ளார் என்று தெரியவருகின்றது.

கொரோனா ஏற்படுத்திவரும் வில்லங்கத்திலிருந்து விடிவுபெறும் வகையில் தடுப்பூசிகள் சந்தைக்கு வந்தபோதிலும், அவை எதிர்பார்த்ததைவிட விரைவாக இலங்கைக்குக் கிடைத்தபோதிலும் அவை தொடர்பில் கிடைக்கக்கூடிய புதிய செய்திகள் ஏமாற்றத்தினையே காவி வருகின்றன. சுகாதாரப் பணியாளர்கள் உள்ளிட்ட பலதரப்புகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசியின் முதலாம் மருந்தளவு (டோஸ்) வழங்கப்பட்ட நிலையில் அவர்கள் இரண்டாம் மருந்து வழங்கலுக்காகக் காத்திருக்கிறார்கள். ஏனைய தரப்புக்களுக்குத் தடுப்பூசியை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன. தடுப்பூசியானது கொரோனாவை முற்றாக கட்டுப்படுத்தாது என்பதைத் துறைசார் நிபுணர்கள் சொல்லி வருகையில், அது (தடுப்பூசி) வேறு வில்லங்கங்களைக் கொண்டு வந்துவிடுமோ எனவும் அச்சப்படவைக்கிறது. இந்தப் பின்னணியில் கொரோனா வைத் தவிர்க்க எளிய பரிகாரமாகத் தடுப்பூசியை மாத்தி ரமே நம்பியிராது பொருத்தமான முகக் கவசம் அணி தலையும், கைகழுவுவதையும் மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றுவதையும் தொடரவே அனைத்துத் தரப்பினராலும் வலியுறுத்தப்படுகின்றது.

---

கஜி துஷா

# யாழ்ப்பாணத்தில் இரு சிங்கள சிறுகதைத் தொகுப்புகள் வெளியீடு

இலங்கை குறித்து ஏதாவது எழுதவோ வாசிக்கவோ வேண்டும் என்று நினைத்தவுடனேயே முதலில் நமக்கு நினைவில் உதிப்பது இனப்பிரச்சினையும், கொடூரமான ரணங்களை ஏற்படுத்திய உள்நாட்டு போரும் தான். இவற்றை எல்லாம் தாண்டி இங்கு வாழும் பல விதப்பட்ட தனி நபருக்கும் வாழ்வுமுறை ஒன்று உள்ளது. இன்ப துன்பங்களை நித்தமும் வருடிப் பார்க்கும் வாழ்க்கை ஒன்றுள்ளது. ஒவ்வொரு நாளுக்கும் வாழ்வை நகர்த்தி செல்வதே பெரும் போராட்டம் என்ற நிலையில் வாழும் தனி நபர்களின் கதைகளையும் பதிவு செய்வதே இலக்கியத்தின் முக்கியமான பணி.

அதுபோன்ற சிங்களத் தனி மனிதர்களின் கதைகளைப் பேசுகின்றன தக்ஸிலா ஸ்வர்ணமாலி மற்றும் இசுறு சமர சோமவீர ஆகியோரின் எழுத்துக்கள். அந்திம காலத்து இறுதி தேசம் மற்றும் திருமதி பெரேரா ஆகிய அவர்களது சிறுகதைத் தொகுப்புகள் கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. ரிஸான் செரிப்பின் தமிழ் மொழியாக்கத்தில் இந்த இரு தொகுப்புகளும் யாழ். நகரத்தில் வைத்து தமிழ் மக்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டன.

இரு பெரும் கரைகளுக்கு நடுவே ஆர்ப்பரித்த ஓடிய போர் என்னும் காட்டாற்றின் இரைச்சல் அடங்கியுள்ள நிலையில் அக்கரையில் உள்ள சிங்கள மக்களே தக்ஸிலா ஸ்வர்ணமாலி மற்றும் இசுறு சமர சோமவீர போன்றோரின் கதை மாந்தர்கள். .

“கதை சொல்லும் முறை மிக அற்புதமான ஒன்றாக இருந்ததது. இதில் எந்த கதைகளுக்கும் முடிவினை ஆசிரியர்கள் தரவில்லை. அந்த பெரும் சுமையை வாசகரிடமே அவர்கள் விட்டுவிட்டனர். வாசகனுக்கு இக் கதைகள் ஒரு உளவியல் தேர்வு போன்றது. இந்த சமூகம் உறவுகள் குறித்தும் நேசங்கள் குறித்தும் வாசகரின் உள்ளத்துள் கட்டமைத்து வைத்துக்கின்ற விம்பங்களை ஒழுக்க விதிகளை இக் கதைகள் மீள்மதிப்பீடு செய்கின்றன. சுற்றத்து உறவுகளிடம் கொள்ளும் அன்பினையும் நம்பிக்கைகளை சமூக உறவுகளின் மீது கொள்ளும்போது இசங்களின் தேவைகள் இல்லாததாகி விடுகிறது” என்பது இந்த தொகுப்புகள் குறித்த மதிப்புரைகளின் சாராம்சமாக இருந்தது.

இந்தத் தொகுப்பில் தமிழ்ச் சமூகத்தினரால் ஏற்றுக்கொள்ள முடியாத கதைகளும்கூடக் காணப்படுகின்றன என்பதை தட்சாயினி சுட்டிக் காட்டினார். ஆனால், எழுதுவதும் மக்களின் கதைகளைப் பிரதிபலிப்பதும்தான் எங்கள் வேலை அவை வாசர்களிடம் எத்தகைய தாக்கத்தைச் செலுத்தப்போகின்றன என்பதைப் பற்றிச் சிந்திப்பதில்லை என்று அந்தக் குற்றச்சாட்டை எழுத்தாளர்கள் நிராகரித்துவிட்டார்கள்.

“கதைப்பதின் வழியேயும் கதைகளின் ஊடேயும்தான் மானிட சமூகத்தின் முரண்களுக்கிடையேயான இடைவெளி அன்பினால் நிவர்த்திசெய்யப்படுகின்றது. முரண்பாடுகளின் காலமான இன்றைய காலங்களில் மனித உறவுகளைப் புதுப்பிக்க இப்படியான கதைகள் அவசியம். தக்ஸிலா ஸ்வர்ணமாலியின் நூலில் உள்ள பத்து கதைகளும் உறவு - அன்பு - சமூகம் என்ற எல்லைக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வருகின்றது. மனித உறவுகளை என்ன தான் பெயரிட்டு வகைப்படுத்தி வைத்தாலும் அதை அவ்வாறு வகைப்படுத்துவது இயலாத காரியம் என்பதே கதைகள் பேசும் மையக் கருத்து. ஏனெனில் அன்பு செலுத்துவதைப் போன்ற ஒரு சிக்கலான விடயம் எதுவுமில்லை. நேசித்தலில் கூட சமூக வரையறை களும் அழுத்தங்களும் இங்குள்ளன. அந்த வரையறைகளுக்கும் அழுத் தங்களுக்கும் அந்த வரையறைக்கு அப்பாற்பட்ட நேசங்களையே தக்ஸி லாவின் கதாபாத்திரங்கள் வெளிப்ப டுத்துகின்றன” என்றார் நவநீதன்.

“நாற்பது வருடங்களுக்கு முன்னர் எரிந்துபோன யாழ்.பொது நூலகத்தின் கட்டடத்தில் இருந்து புதிய நம்பிக்கைகள் துளிர்விட்டுள்ளன” என்று கூறிய சிராய் மஸ்சீர், அடையாளத்தின் பாற்பட்ட முரண்பாடுகள் மீண்டும் மேலெழும் காலம் மீண்டுகொண்டுள்ள சூழலில் கதையாடல்களின் வழியே இணக்கத்தை பேணும் சாத்தியத்தை இவ் நூல்வெளியீடு தந்துள்ளது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கி எனும் துயரம்!


பொன்வண்டு

வல்லரசு நாட்டின் அதிபரைக் கண்கலங்க வைத்த சம்பவம் குறித்து நீங்கள் அறியாதிருக்கமாட்டீர்கள். ஆம்! 2016ஆம் ஆண்டில் அமெரிக்காவின் அதிபர் இல்லமான வெள்ளை மாளிகையிலிருந்து அந்த நாட்டு மக்களுக்கு உரையாற்றிய அப்போதைய அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவின் கண்ணீர் கசிந்த வதனத்தைக் கண்டு துயரப்பட்டவர்கள் பலர்.

அவர் கண்கலங்கியமைக்குக் காரணம் அவரது ஆட்சிக்காலத்தில் அடுத்தடுத்து அமெரிக்காவில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களே. 2016ஆம் ஆண்டு ஆனி மாதம் அமெரிக்க மாநிலமான புளோரிடாவின் ஓர்லாண்டோவில் உள்ள பல்சு என்று பெயரிடப்பட்ட இரவுக் களியாட்ட விடுதியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 50 பேர் கொல்லப்பட, 53 பேர் காயமடைந்தனர். ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த அமெரிக்கக் குடிமகனான ஓமார் சித்திக் மாத்தீன் என்கிற துப்பாக்கிதாரி அந்தத் தாக்குதலை நடத்தினார். பின்னர் அவரும் கொல்லப்பட்டார்.

அமெரிக்க வரலாற்றில் - ஒபாமாவின் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த மிக மோச மான துப்பாக்கிச்சூட்டுச் சம்பவமான இது அதிக உயிர்களைப் பறித்ததும்கூட. இந்தத் துப்பாக்கிச் சூட்டையடுத்து வெள்ளைமாளிகையில் பேசியபோதே ஒபாமாவின் கண்கள் கலங்கின.

தனது நாட்டில் மேலோங்கி வருகின்ற துப்பாக்கிச் சூட்டுக் கலாசாரம் கண்டு கண்ணீர் வடிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார் அதிபர் ஒபாமா. இதற்கெல்லாம் முன்னர் அதாவது 2012 மார்கழி மாதத்தில் கனெ




டிகட் மாநிலத்தின் நியூட்டன் நகரில் அமைந்துள்ள சேண்டி ஹூக் என்கிற பாலர் பாடசாலையில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் 20 பாலகர்கள் கொல் லப்பட்டமை குறித்து உச்சரிக்கும்போதுதான் அவர் கண் கலங்கி அழுதே விட்டார். அமெரிக்க வரலாற்றில் மிக அதிக எண்ணிக்கையில் பள்ளி மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட இரண்டாவது சம்பவம் அது.

### தொடரும் பட்டியல்


ஒபாமாவின் ஆட்சிக் காலத்திலும், 2016க்குப் பின்னர் 2017இல் லாஸ்வெகாஸில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் 58 பேர் கொல்லப்பட்டனர். அதே ஆண்டில் ரெக்ஸாஸில் நடந்த மற்றொரு சூட்டில் 20 பேர் கொல்லப்பட்டனர். 2018இல் புளோரிடாவிலுள்ள உயர் பாடசாலை ஒன்றில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் 17 பேர் கொல்லப்பட்ட னர்.

இந்தத் துப்பாக்கிச் சூடுகள் 2018வரை மட்டும் நடக்கவில்லை. 2019, 2020, 2021என்று இன்றுவரை நீண்டுகொண்டேயிருக்கின்றன. அத்தோடு இந்தத் துப்பாக்கிச் சூட்டுக் கலாசாரம் என்பது அமெரிக்காவில் இன்று நேற்று ஆரம்பித்த ஒன்றல்ல. அமெரிக்கக் குடிமகனுக்குத் துப்பாக்கியைப் பயன்படுத்த அதிகாரமளித்ததில் இருந்து நடந்தேறி வருவது.

இவ்வாறாக அமெரிக்காவில் ஆண்டுதோறும் நடந்தேறுகின்ற துப்பாக்கிச் சூட்டுப் பதிவுகளின் பட்டியல் நீண்டுகொண்டே போகும். துப்பாக்கிச் சூட்டுக் கலாசாரம் 19ஆம் நூற்றாண்டிலேயே அமெரிக்காவில் எழுச்சிகண்டுவிட்டதைக் குறிக்கின்ற இந்தத் தகவல் உங்களை ஆச்சரியப்படுத்தலாம். 1949ஆம் ஆண்டில் நியூஜெர்சியில் நடந்த துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி 13 பேர் இறக்க அதில் 3 பேர் காயங்களுக்குள்ளாகியிருக்கின்றனர்.

### அதிர்ந்தது அட்லாண்டா

அமெரிக்காவின் ஜோர்ஜியா மாகாணத்தில் உள்ள மசக்குதல் (ஆங்கிலத்தில் மசாஜ் என்பதுக்கு இப்படித்தான் இணைய அகராதி தமிழளிக்கிறது) விடுதிகளில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்றில் 4 பெண்கள் உட்பட 8 பேர் கொல்லப்பட்டுள்ளனர். பொழுதுபோக்கு மையங்களுக்குப் பிரபல்யம் பெற்ற இந்தப் பகுதியில்




ஏராளமான மசாஜ் விடுதிகள் இயங்கி வருகின்றன. அங்குள்ள இத்தகைய விடுதிகளில் தமது பொழுதை மகிழ்வுடன் கழிக் கச் சென்றவர்களுக்கே இந்தப் பரிதாபம் ஏற்பட்டிருக்கிறது.

மாலை 6 மணியளவில் அங்குள்ள 3 விடுதிகளுக்குள் அடுத்தடுத்து நடந்த துப்பாக்கிச் சூட்டில் 4 பெண்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழக்க, படுகாயமடைந்த 4 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் உயிரிழந்தனர். இந்தத் துப்பாக்கிச் சூடு தற்போதைக்கு அமெரிக்காவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

ரொபேர்ட் ஆரோன் லாங் என்கிற 21 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். 3 விடுதிகளுக்குள்ளும் அடுத்தடுத்து நுழைகின்ற முகமூடியணிந்த லாங் தனது கைத்துப்பாக்கியால் கண்ணில்பட்டவர்களைச் சராமாரியாகச் சுட்டுள்ளார். பின்னர் சில மணித்தியாலங்களில் காவல்துறையினர் அவரைப் பிடித்தனர். இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்மபவத்தால் அமெரிக்காவின் களியாட்ட நகரான அட்லாண்டா அதிர்ச்சியில் உறைந்துபோயிருக்கிறது.

### கொரோனா காரணமாம்...!

குறிப்பாகச் சொல்லப்போனால், அட்லான்டாவின் புறநகர்ப் பகுதியான எக்வொர்த் என்ற இடத்தில்தான் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்துள்ளது. 21 வயதுடைய லாங் இதனுடன் தொடர்புபட்டவர் என்கிற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டிருந்தாலும் அவர் இன்னமும் சந்தேக நபராகவே கருதப்படுகிறார். முகமூடியணிந்திருந்த நபராதலால் துப்பாக்கிதாரி அவர்தான் என்பதை இன்னமும் உறுதியாகக் காவல்துறையினர் நிரூபிக்கவில்லை.

அதற்கிடையில் இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் அல்லது உள்நோக்கம் என்னவாக இருக்கும் என்கிற பல பேச்சாடல்கள் மலிந்துவிட்டன. அவற்றில் முதன்மையானதாகவும் முக்கியமானதாகவும் பார்க்கப்படுவதாக இருப்பது கொரோனா வெறுப்பு ணர்வு.

அமெரிக்காவில் கொரோனாத் தொற்றின் பரவல் அதிகரித்ததற்கு வெளிநாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு வந்தவர்களே காரணம் என்ற கோணத்தில் கருத்தூட்டல்கள் வெளிவருகின்றன. ஆனால், அதுதான் இதற்குக் காரணமா என்பது துப்பாக்கிதாரிக்கு மாத்திரமே தெரிந்த பதில். அதற்கு முதலில் துப்பாக்கிதாரியை உறுதி செய்யவேண்டும் என்பது பெரும் சிக்கல்.

இவ்வாறிருக்க, இதில் கொல்லப்பட்ட பெண்க ளில் நான்கு பெண்கள் தங்களுடைய நாட்டு வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் என்றிருக்கிறது தென் கொரியத் தூதரகம். வெளிநாட்டவர்களைக் குறிவைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்கிற வாதப்பிரதிவாதங்களின் எழுச்சி காரணமாக, "ஆசியர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் காவல்துறையினர் பாதுகாப்புப் பணியில் நிறுத்தப்படுவார்கள்" என்று நியூயோர்க் காவல் துறைத் தலைமையகம் தெரிவித்துள்ளது. [illegible] அதிகரித்துள்ள இந்தத் [illegible] அமெரிக்காவுக்குப் பெரும் துயரமே...!


தொழினுட்பப் பிரிவு
விஸ்டம்
A/L 2023
2021 Day
பொறியியற் தொழினுட்பவியல்
K.ரவிக்குமார் (Dip in Tech, NCTT, PGDE)
P.சண்முகதாசன் (Rtd Instructor Buildings - SLTES)
R.சிவரூபன் NCECP, NCT (Electrical & Electronic)
R.நிரூஜன் B.Sc
M.சுதாகரன் NDT, B.Ed
P.கிருபாகரன் NDT (Const Tech)
P.கணேஸ் NDT Automobile, (Instructor Automobile)
தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
P.விமலநாதன் B.Sc
R.நிரூஜன் B.Sc
A.அரவிந்தன் B.Sc (Hons) Spel in Chem, PGDE
S.மயூரதாசன் B.Sc MIT, SCJP
உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்
P.நிரோஜனன் B.Sc (Bio Technology)
M.விஸ்னுதேவன் B.Sc (Agri), PGDE
P.S.ஷாணஸ் B.Sc (Agri)
தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல்
S.மயூரதாசன் B.Sc MIT, SCJP
விவசாய விஞ்ஞானம்
P.S.ஷாணஸ் B.Sc (Agri)
புவியியல்
S.ஸ்ரீகிருஸ்ணா BA (Hons), PGDE (Merit)
கணிதம் (7)
S.தர்சன் B.Sc (Hons), PGDE (Merit)
M.கோபிஸ்கண்ணா NDT (Maths)
ஊடகக் கற்கை
S.கோணேசலிங்கம் Dip in Media
சித்திரம்
S.கருணாகரன் NDT, B.Ed
077 248 7774
076 552 9093
"தரம், தனித்துவம், உயர்ந்த பெறுபேறு இதுவே எமது இலக்கு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் முதல் வைரஸ்..!!

என்.குமரன்

கடந்து சென்ற ஆண்டில் உருவாகி இன்றைவரைக்கும் உலக நாடுகள் அனைத்தையும் பொருளாதாரம் முதற்கொண்டு சகல வழிகளிலும் வீதிக்கு கொண்டு வந்து விட்ட பெருமைக்குரியது கொவிட்-19 என்று சொல்லப்படுகின்ற, கொரோனாப் பெருந்துதொற்று. கொரோனாவைக் கண்டு பயந்து ஒதுங்கிய காலம் போய் இன்று கொரோனாவுடன் வாழப் பழகிக் கொண்டிருக்கிறார்கள். தொழிநுட்ப உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எம் இளையோர் ஒருபடி மேலே சென்று, இந்த ஆண்டை நீக்கிவிட்டு மீண்டும் 'ரீ இன்ஸ்டால்' செய்யவேண்டும் என்று 'மீம்' களைக் கூட தயாரித்து வெளியிடுமளவிற்கு கொரோனா விளை யாட்டுப் பொருளாகிவிட்டது. அந்த விடயம் பார்ப்பதற்க்கும் கேட்பதற்கும் ஒரு அர்த்தம் பொருந்துவதாக இருந்தாலும், கணினியிலிருந்து வைரஸை நீக்குவதுபோல நிஜ உலகில் வைரஸை இல்லாமலாக்குவது சாத்தியமற்றது என்றே அறிவியலாளர்கள் கருதுகின்றார்கள்.



கொரோனா வைரஸானது சீனாவின் வுகான் மாகாணத்தில்தான் முதன்முதலில் கண்டறியப்பட்டது என்று நம்பப்படுகின்றது. இன்று எமது பிரதேசங்களில் அது பரவிப் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திவரும் நிலையில், வைரஸ் என்ற மூன்றெழுத்துச் சொல்லை வாசிக்காத, காதால் கேட்காத, கேட்டு பீதியடையாத நாளே ஒருவருக்கும் இல்லை எனும் அளவுக்கு நிலைமை வந்துவிட்டது.

இவ்வாறு உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் இந்த வைரஸ்களைப் பற்றி எம்மவர்களுக்கு எப்போது தெரியவந்தது? வைரஸ்களை பற்றி யார் முதலில் கண்டறிந்தார்கள்? போன்ற கேள்விகள் பலருக்கும் உண்டு.

வைரஸ்கள் போன்ற நுண்ணங்கிகளான பாக்ரீரியா பற்றியும், அது ஏற்படுத்தும் பிரச்சினைகள் பற்றியும் அறிவியல் உலகிற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தெரிந்திருந்தாலும் வைரஸ்கள் பற்றிக் கண்டறிந்தது சுமார் 128 ஆண்டுகளுக்கு முன்புதான்.

தொடக்க காலங்களில் இடம்பெற்ற நுண்ணுயிரியல் ஆராய்ச்சிகள் பாக்ரீரியா பற்றியே அதிகம் நடைபெற்றன. ஏனெனின் வைரஸ்கள் பற்றிக் கண்டறிவது என்பது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. அதற்குக் காரணம் வைரஸின் அளவு... இன்று வரை வைரஸைக் கண்டறிவற்கான பரிசோதனைகள், வைரஸிற்க்கான தடுப்பு மருந்துகள் கண்டறிவது, சிகிச்சைக்கான மருந்துகளைக் கண்டறிவது என அனைத்தும் சவாலான விடயங்களாகவே இருக்கின்றன.

தெள்ளுப் பூச்சிகளை பலரும் பார்த்திராவிட்டாலும், கேள்விப்பட்டிருப்பார்கள். ஒரு தெள்ளுப்பூச்சியின் அளவு 1.5 மில்லி மீற்றர். அவ்வாறான ஒரு தெள்ளுப்பூச்சிக்குள் 10 ஆயிரம் கோடி பாக்ரீரியாவை அடைத்துவிடலாம் என்கின்றனர் ஆராய்சிசியாளர்கள். இத்தனைக்கும் பாக்ரீரியாவைவிடச் சிறிய அளவிலான வைரஸ் எம்மாத்திரம்.. ஒரு பாக்ரீரியாவுக்குள் 10 ஆயிரம் வைரஸ்களை அடைக்கலாம். சுருக்கமாக, ஒரேயொரு முற்றுப் புள்ளிக்குள் லட்சக்கணக்கான வைரஸ்களை அடைத்துவிட முடியும். ஆக கண்ணுக்கே தெரியாதளவு வைரஸ்தான் மிகப் பெரிய வல்லரசுகளையும் ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது.

இந்த வைரஸ் வகைகளைப் பற்றி ஆராய்வது வைராலஜி என்றும், ஆராய்ச்சி செய்பவர்களை வைராலஜிஸ்ட் என்றும் சொல்கிறார்கள். நுண்ணங்கிகள் தொடர்பில் ஆராயும் நுண்ணுயிரியல் துறையின் ஒரு பிரிவாக வைராலஜி உள்ளது. உலகிலேயே வேறு எந்த உயிர்ப் பொருளை விடவும் வைரஸ் வகைகளே அதிகம் என்றும் உலகில் லட்சக்கணக்கான அளவு வைரஸ் வகைகள் உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.


இலத்தீன் மொழியில் விருலன்ட், விருலன்டஸ் (Virulent/Virulentus) என்றால் நச்சு என்று அர்த்தம். இந்தச் சொற்பதத்திலிருந்தே வைரஸ் என்ற சொல் உருவானதாகக் கூறப்படுகின்றது. அதாவது தொற்றக்கூடிய நோய்க் கிருமி என்று இதற்குப் பொருள். கிட்டத்தட்ட தமிழிலும் இதே போன்றதொரு பெயரே வைரஸிற்கு முன்மொழியப்பட்டுள்ளது. தமிழில் வைரஸை, தீநுண்மி என்று மொழிபெயர்க்கிறார்கள்.



இன்றுவரைக்கும் அறிவியல் உலகம் விளக்கியுள்ள 6,000 வைரஸ் வகைகள் மனிதர்களுக்கோ விலங்குகளுக்கோ தீமை செய்வதாக அறியப்படவில்லை. எனவே, எல்லா வைரஸ்களுமே தீயன என்று முத்திரை குத்துவது சரியாக இருக்காது.

பிரெஞ்சு நுண்ணுயிரியலாளரான சார்லஸ் சேம்பர்லாண்ட் ஒரு வடிகட்டியைக் கண்டறிந்திருந்தார். அந்த வடிகட்டியானது மிகவும் நுண்ணியதாகக் காணப்பட்டது.





அதாவது, ஒரு திரவத்தில் உள்ள பாக்ரீரியாவை அதைக்கொண்டு வடிகட்டிவிடலாம். (பாக்ரீரியாவின் அளவு குறித்து மேலே குறிப்பிடப்பட்டது.) ஆக அவ்வாறான அளவுடைய பக்ரீரியாவையே வடிகட்டி எடுக்கும் அளவுக்கு 19 ஆம் நூற்றாண்டில் அறிவியல் வளர்ந்திருந்தது.

இந்நிலையில்தான் ரஷ்யத் தாவரவியலாளர் டிமிட்ரி இவ்னோவ்ஸ்கி மொசைக் என்கின்ற ஒரு வகை வைரஸால் பாதிக்கப்பட்ட புகையிலைத் தாவரத்தின் இலைகளை நுண்துகள்களாக்கி, சேம்பர்லாண்ட் கண்டு பிடித்த வடிகட்டி மூலம் 1892இல் வடிகட்டினார். இந்த வடிகட்டுதல் மூலமாக அந்த இலைகளில் பாக்ரீரியா ஏதும் இருந்திருந்தால் நீக்கப்பட்டிருக்கும். எனினும், வடிகட்டுதலுக்குப் பிறகும்கூட அந்த இலைகளில் இருந்து நோய்த்தொற்று முழுமையாக நீங்கியிருக்கவில்லை.

அதன் காரணமாகப் பாக்ரீரியா இல்லாத வேறு ஏதோ ஒன்றுதான் நோய்க்குக் காரணம் என்று இவனோவ்ஸ்கி கருதினார். வடிகட்டிய பின்பும் பாக்ரீரியா இல்லாவிட்டாலும், பாக்ரீரியா வெளியிட்ட நச்சின் எச்சம் அந்த இலைகளில் இருந்திருக்கலாம் என்று அவர் கருதினார்.

அவ்வாறு அவர் நம்பியதற்குக் காரணம், அனைத்து நோய்த்தொற்றுக் கிருமிகளையும் பாக்ரீரியா வடிகட்டியால் வடித்தெடுத்து, எடுக்கப்பட்ட சாரத்தை ஒரு ஊட்டச்சத்துப் பொருளில் வளர்த்தெடுத்து, குறிப்பிட்ட நோய்க்கிருமி எதுவென்று கண்டறிந்துவிட முடியும் என்று அந்தக் காலத்தில் நம்பப்பட்டமைதான்.

அதேநேரம், இவனோவ்ஸ்கி மேற்கொண்ட குறித்த பரிசோதனையை நெதர்லாந்து நாட்டு நுண்ணுயிரியலாளரான மார்டினஸ் பயரின்க், 1898 இல் மீண்டும் பரீட் சித்துப் பார்த்தார். புகையிலைத் துகள் கரைசலில் இருந்து வடிகட்டப்பட்ட அந்தத் திரவத்தில் புதிய நோய்த் தொற்றுக் கிருமி ஏதும் இருக்கலாம் என்று அவர் கணித்ததுடன், பிரிந்த செல்களில் மட்டுமே அந்தப் புதிய கிருமி பெருகியிருந்ததைக் கண்டறிந்தார்.

திரவப் பதார்த்தில் கரையக்கூடிய கிருமியாக அது இருக்கலாம் என்று கருதிய அவர், ஏற்கெனவே புழக்கத்தில் இருந்த வைரஸ் என்ற பெயரை, அந்தப் புதிய கிருமிக்குச் சூட்டினார். அதன் பிறகுதான் வைரஸ் என்ற பெயர், கடந்த 128 ஆண்டுகளாக உலகில் பிரபலமாகத் தொடங்கியது. அவ்வாறு அவர் கண்டறிந்தது மொசைக் வைரஸ் ஆகும்.

அதேநேரம் பயரின்க் கூறியதுபோல், வைரஸ் என்பது திரவத்தில் கரையக் கூடிய கிருமியல்ல, அது ஓர் நுண்துகள்தான் என்பதை அமெரிக்க வைராலஜிஸ்ட் வெண்டல் ஸ்டான்லி பின்னர் நிரூபித்தார். ஆக உலகில் முதலில் கண்டறியப்பட்டு பிரித்தெடுக்கப் பட்ட வைரஸ், புகையிலையில் தாக்கத்தை ஏற்படுத்திய மொசைக் வைரஸ்.

அதற்குப் பிற்காலங்களில் இன்று வரைக்கும் உருவாகிக் கொண்டும், உருவாக்கப்பட் டுக் கொண்டும் இருக்கின்ற பல்வேறுவகைப்பட்ட வைரஸ்கள் வல்லரசு நாடுகளுக்கிடையே கூட போர் மூழும் அபாயத்துக்குக் கொண்டு சென்று விடுமளவுக்குப் பலம் பொருந்தியதாகவும், கட்டுப்ப டுத்தமுடியாததாகவும் இருக்கின்றன.

வெற்றித்தேர்வு வெளியீட்டகம்
இல. 392, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
தொ.பே : 077 538 8471, 077 312 6807, 021 222 9016
ஆரம்ப வகுப்புகளில் பழநிலை அறிவு வளர
தரம் 1 முதல் தரம் 5 வரை அனைத்து வகுப்புகளிற்கும்
வெற்றித்தேர்வுகள் வெளிவருகின்றன.
தரம் 1 முதல் தரம் 5 வரை தவணைக்கான பரீட்சை வழிகாட்டிகள்
தரம் 3 முதல் தரம் 5 வரை வெற்றித்தேர்வு புலமைப்பரிசில் மாதிரி வினாப்பத்திரங்கள்
(பாடசாலைகளுக்கான வெளியீடுகளாகவும், பிரத்தியேக வெளியீடுகளாகவும்)
இவற்றுடன் விசேட பரீட்சை வழிகாட்டி நூல்கள்
மற்றும் வெற்றித்தேர்வுத் தொடர்கள்
தரம் 3 முதல் தரம் 5 வரை வாராந்தம் வெற்றித்தேர்வு பரீட்சைகள்
(ஞாயிற்றுக்கிழமை - நல்லூர் சயன்ஸ் அக்கடமியில்)
பாடசாலைகள் விசேட விலைக்கழிவுகளுடன் வெற்றித்தேர்வு வெளியீடுகளை எம்மிடம் பெற்றுக்கொள்ள முடியும்.
நாடெங்கிலும் உள்ள பிரபல புத்தகசாலைகளிலும் வெற்றித்தேர்வு வெளியீடுகளை பெற்றுக்கொள்ளலாம்.
"வெற்றித்தேர்வு வெற்றியாளர்களின் தெரிவு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமான வாழ்வுக்கு

## 24

● பேர் அறிஞன்

வளமான வாழ்வு என்பதனது அர்த்தம் என்ன என்பதை எங்காவது வினாவாக எழுப்பி சிந்தனைத் தூண்டலிற்கான வழி ஏற்படுத்தப்பட்டி ருக்கிறதா? தற்போதுள்ள சூழலில் என்னவாக எதிர்காலத்தில் ஆகப்போகிறாய்? என்று கேட்கப்படுகின்ற அளவிற்கு எப்படி வாழப்போகிறாய் என்று கேட்கப்பட்டிருக்கிறதா என்றால் அனேகமாக இல்லை என்பதற்கப்பால் விடையில்லை என்பதுதான் யதார்த்தம்.

ஏன் அவ்வாறு கேட்க முடியவில்லை? அல்லது முயலவில்லை? அவ்வாறான தொரு கேள்வியை எழுப்ப வேண்டியவர்களிடத்தில் வாழ்வு என்பதற்கோ, வளமான வாழ்வு என்பதற்கோ விளக்கம் தேட வேண்டியமை தொடர்பான சிந்தனை இல்லை என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இச்சிந்தனைக்கான தேவைப்பாட்டினை எமது கல்வி முறைமை கொண்டிருக்கவில்லை என்பது ஒருபுறமாக இருக்க, எது வளம்? எது வாழ்வு? என்பதை உணர்ந்து கொள்ளத்தக்க விதமான மனோநிலை இல்லை என்பது மறுபுறமாக இருக்கிறது.

மரபுவழியான கற்பிதங்கள் அவை தொடர்பான மீள்வலியுறுத்தல்கள் (மதம்சார் கருத்துருத் திணிப்புகள்) போன்ற மாற்ற வேண்டிய ஆனால் எந்தவிதமான நிபந்தனைகளுமற்றுப் பின்பற்றுகின்ற ஒரு தொகுதியின் மனோநிலை என்பது ஒரு குவிமையப் புள்ளி நோக்கியதாகவே இருக்கிறது. அது உண்மையில் விரிதிசையில் பரந்து விரிந்து அடுத்த நிலையை அடைதல் என்பது சாத்தியமற்றுப் போகிறது.

அறிவு என்பது சான்றிதழுக்குள்ளும் வளம் என்பது பணம் மற்றும் பொருளுக்குள்ளும் பிணைக்கப்பட்டிருக்கிறது. அறிவு என்பதைச் சான்றிதழ்களின் பிடியிலிருந்து விடுவித்தல் என்பது தொடர்பில் கனமேதும் உள்ளனவா?அவ்வாறே வளம் என்பதற்கான அளவுகோலாகப் பணம் (இதனூடாக பொருள்) என்பதற்குப் பதிலான ஒன்றைக் கண்டடைவதற்கான ஏற்பாடுகளேதும் இருப்பதாகவே எண்ணத்தோன்றுகிறது.

இவற்றிற்கான வழிகளைக் கண்டடைவதற்கான சிந்தனை என்பதுகூட மேற்கூறியவற்றினால் சிறைப்பட்டிருக்கும் ஒரு சூழலில் இருந்து வெளியேறத் தயாராதல் என்பது அவசியமாகிறது. என்றாலும் அந்த அவசியத்தை நிபந்த னைகளற்று உணர்ந்து கொள்வது முதலில் நிகழுமாயின் ஆரோக்கியமானது. எனவே மரபுவழிச் சிந்தனைக்கூட்டினை உடைப்பதற்கான வழிவகைகள் கண்டடையப்படல் வேண்டும். அதற்கு முற்குறித்த சிந்தனைகள், அவற்றுக்கிடையிலான பிணைப்புகள் மற்றும் அவை சமூகத்தில் ஏற்படுத்தியுள்ள கூண்டுகள் என வகை பிரிக்கப்பட்டு ஆய்வுகள் முன்னெடுக்கப்படல்வேண்டும். அவ்வாய்வுகள் முற்குறித்த கூண்டுகளுக்கு வெளியிலிருந்தும் செய்யப்படல்வேண்டும்.

சமூகவியல், உளவியல், மெய்யியல் மற்றும் பொருளியல் துறைகள் சமூகத்துள் இறங்கி கோட்பாடுகள், முன்கற்பிதங்கள், நம்பிக்கைகள் என்பவற்றிற்கப்பால் கள யதார்த்தம் மிக்க ஆய்வுகள் மற்றும் செயற்பாடுகளில் ஆழ இறங்கவேண்டியது அவசியமாகிறது. இத்துறைகள் தம் முன்னோரால் வழங்கப்பட்ட கண்ணாடிகளைக் கழற்றிவிட்டு தமது வெறுங்கண்களால் சமூகத்தைப் பார்க்கவும் சிந்திக்கவும் பழகிக்கொள்ளுதல்வேண்டும். இது அவர்களுக்கு யதார்த்தத்தை அடைய அல்லது அண்மிக்க உதவும்.

யதார்த்தச் சூழலானது நிச்சயமாக ஏதோ ஒரு சிந்தனையைத் தூண்டும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் இட்டு நிரப்பப்பட்டிருக்கும் எண்ணங்களை களயதார்த்தத்துடன் ஒப்பிடுவதற்கான ஒரு வாய்ப்பு ஏற்படும். அந்த ஒப்பீடு நாம் செல்லவேண்டிய வழியை மட்டுமல்லாது செல்லவேண்டிய தூரத்தையும் கண்டடைய வழிகோலும். நாம் எதிர்பார்க்கும் சிந்தனை மாற்றம் என்பது தன்னியல்பாக ஒரு தொகுதியில் எற்படும். அத்தொகுதியானது தமது புதிய சிந்தனைவழி நடக்கத்தொடங்க தமது வாழ்முறை மாற்றங்களுக்கூடாகப் பிறரில் சிந்தனை மாற்றத்தூண்டிகளாக ஆகிக் கொள்ளமுடியும்.

கோட்பாடுகள் போதனைகள் மரபுசார் கற்பிதத் திணிப்புகள் என எவையுமற்ற ஒரு விரிந்த செயல்வெளியைத் தோற்றுவிப்பதும் தொடர் சிந்தனை மாற்றத்துக்கான தூண்டுகைகளை ஏற்படுத்தும். சிந்தனை மாற்றம் என்பது வினாக்களைத் தொடர்ச்சியாக கிளர்த்தி விடைகாணும் ஊக்கத்தைப் பெறும். வினாக்கள் சரிவர எழுமாக இருந்தால் செயல்கள் அர்த்தமுள்ளதாகும். வினாக்களைத் தமக்குத்தாமே எழுப்பி விடைதேட முற்படும்போது மனமும் சமூகமும் தூர்வாரலொன்றை வினைத்திறனுடன் செய்துகொள்ளும்.

> **மரபுவழியான கற்பிதங்கள் அவை தொடர்பான மீள்வலியுறுத்தல்கள் (மதம்சார் கருத்துருத் திணிப்புகள்) போன்ற மாற்ற வேண்டிய ஆனால் எந்தவிதமான நிபந்தனைகளுமற்றுப் பின்பற்றுகின்ற ஒரு தொகுதியின் மனோநிலை என்பது ஒரு குவிமையப் புள்ளி நோக்கியதாகவே இருக்கிறது.**

# துறவியாகிய டோனி..!!



இந்தியக் கிரிக்கட் அணியின் முன்னாள் தலைவர் எம்.எஸ்.டோனியின் ஒளிப்படம் ஒன்று அண்மைய நாள்களில் இணையத் தளங்களில் வைரலாகி வருகின்றது.

சர்வதேச கிரிக்கட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற டோனி ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடி வந்த நிலையில் [illegible]

மொட்டையடித்து துறவி போன்ற கோலத்தில் தனிமையில் இருப்பது போன்று வெளியிட்ட குறித்த ஒளிப்படத்தைப் பார்த்த டோனியின் இரசிகர்கள், அதிர்ச்சிய டைந்ததுடன் ஏன் இந்தக் கோலம் என்றும் கேள்வியெழுப்பி வந்தனர்.

இந்நிலையில் அந்தப் படம் நிறுவனம் ஒன்றின் விளம்பரத்துக்காக எடுக்கப்பட்டதாக அறிய வந்ததை அடுத்து இணையத் தளங்கள், சமூக வலைத்தளங்கள் என அனைத்திலும் அதை வரைலாக்கி வருகின்றனர்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வத்தின குளங்களோ றோட்டிலை?

■ கதிரேசன் காத்தவராயன்

சங்கானைக்கு ஒரு அலுவலாய்ப் போகவேண்டியிருந்துது. மருதனார்மடத்தாலை உடுவில் சங்கு வேலிப் பாதையாலை போவமெண்டு போனன். மானிப்பாயாலை போறதெண்டால் றோட்டும் வலுதிறம்.. காரைநகர் - மாதகல் - இளவாலை பஸ்சுகளின்ரை ஓட்டமும் ஒரு ஓட்டமல்லே! அதாலை அந்த றோட்டைத் தவித்தனான். உந்தக் கொரோனாவுக்குள்ள அந்தப்பக்கம் ஒரு நாளும் போகயில்லை. சரியாய் ஒரு வரிசமாப்போச்சு... எண்டு என்னுள்ள சொல்லிக்கொண்டு போனன்.

அடக் கோதாரி அதிலை சங்குவேலி வயல்கரை பிள்ளையாரைக் கடந்திட்டன்.. வயல் வெளியுக்கை றோட்டு பட்டிரக்கிறபாடு... றோட்டு இழுபட்டு நெரிபட்டு சழிஞ்சுபோய் ஆக்களை இந்தாபிடி இழுக்கிறன் விழுத்திறன்பார் எண்டு கிடக்குது... கரையாலை போகப்பயந்து என்ரை சுப்பர்கப் நான் ஒண்டும் சொல்லாமலேயே வேகத்தைப் படாரெண்டு குறைச்சு நடுறோட்டுக்குப் போச்சுது. அப்பதான் பாத்தால் றோட்டு கிழறுப்பட்டு குளமளவிலை ரண்டு பெரிய கிடங்குகளைக் கண்டன்.

என்னடாப்பா கொரோனாக் காலம் வாகனங்கள் ஓடாததாலை சூழலுக்குக் கனக்க நன்மையளெண்டு எல்லாரும் புழுகினவையல்லே... அப்ப வாகன மோடாமலுக்கு என்னண்டு றோட்டு கிளறுப்பட்டது? அது என்னவோ ஒரேயொரு பஸ் ஒருநாளைக்கு ஒருக்காப் போய் ஒருக்கா வார பாதைதானே? உந்த றோட்டுப் போடுகிறவையின்ரை ஆளிடியனுகள்தான் (டிப்பர்கள்) அடிக்கடி போய்வாறதாய்த்தானே கேள்விப்பட்டனான்? அப்பிடியெண்டா போட்டதிலைதான் ஏதோ பிழைபாடு நடந்திருக்குதோ?

ஒரே குழப்பமாயல்லே கிடக்குது... ஆரையாலும் கேப்பமெண்டாலும் சனசந்தடியில்லை.. ஒருமாதிரிக் கிடங்குகளிலை விழாமலுக்கு நெழிஞ்சு வளைஞ்சு தாண்டிப் பாத்தால் அந்தப் பெரிய முடக்கிலையும் இதுகளை மாதிரிக் கிடங்கு வாறதுக்கான ஆயித்தங்களாக் கிடந்துது. இந்த றோட்டும் சரியாப் போச்சுது.. போட்டு ஆறேழு வரிசங்கூட ஆகியிருக்காது போலை, என்ன? நடுவெய்யிலுக்கை நடுறோட்டாலை தனியக் கதைச்சுக்கொண்டு வந்தன். நல்ல காலம் ஆரன் கண்டிருந்தா ஆஸ்பத்திரியிலைதான் சேத்திருப்பங்கள்.

அப்பிடியே போய் அதிலை கரைப்பிட்டிப் பிள்ளையாரடியிலை நல்ல பூவரசு நிழலிலை இருந்தன். ஒராள் வந்து சைக்கிளாலை குதிச்சுது... அட எங்கடை செல்லக்குட்டி... "என்ன கதிரேசண்ணை இந்த வெய்யிலுக்கை?" எண்டபடி அவரும் இருந்தார். "ஓஓ.. உதிலை சங்கானையிலை சின்னத்தம்பியின்ரை இளையவளுக்கு கலியாணமல்லே... அதுசரி என்ன செல்லக்குட்டியண்ணை றோட்டு அந்த மாதிரிக் கிடக்குது?" எண்டன்.


"அது கதிரேசண்ணை வயலுக்கை தண்ணி நிக்கிறதைக் கவனிக்காமல் சும்மா கல்லைத்தூவி தாரை ஊத்தினா இதுதானே நடக்கும்... அவை படிச்ச படிப்பை வைச்சு ஒரு திட்டத்தைப் போட, இவை றோட்டைப் போட்டவை. அப்பியிப்பிடிப் போட... நடைமுறையெண்டு ஒண்டு இருக்கல்லே..." எண்டு சிரிச்சார் எரிச்சலோடை. "எனி உந்த டிப்பருகள் ராப்பகலா புள்லோட்டோடை நிலம் ஊறிக்கசிஞ்ச நேரத்திலையும் ஓடுதுகளல்லே.. என்னண்டு தாங்கும்... றோட்டு உங்காலை இன்னும் ரண்டு பெரிய கிடங்குகள் கிடக்கு" எண்டு புலம்பின தோடை இன்னுமொண்டையும் சொன்னார்.

"இஞ்சார் கதிரேசண்ணை உங்காலை பாப்பியள்தானே நான் சொன்ன மற்றக் கிடங்குகளையும்... அதுகளிலையிருந்து ஒரு யாரும் வராது.. அதிலைதான் கச்சேரியை நடத்துகிறவரின்ரை ஒரு அலுவலகமும் கிடக்குது... பெரிய இடத்து அலுவலுகளில்லே..." எண்டபடி எழும்பிப் போட்டார். நானும் எழும்பி என்ரை பயணத்தைத் தொடர்ந்தன். செல்லக்குட்டியர் சொன்னது சரிதான். பெரிய இடத்து விவகாரந்தான் போலை எண்டு நினைக்கத்தான் முடியும். கதைக்கலாமோ?

> **"இஞ்சார் கதிரே சண்ணை உங்காலை பாப்பியள்தானே நான் சொன்ன மற்றக் கிடங்குகளையும்... அதுகளிலையிருந்து ஒரு யாரும் வராது.. அதிலைதான் கச்சேரியை நடத்துகிறவ ரின்ரை ஒரு அலுவலகமும் கிடக்குது... பெரிய இடத்து அலுவலுக ளில்லே..**

அவை செய்யட்டும் இவை செய்யட்டும் எண்டு விடாமை உள்ளூர் அடிபிடியளாவது ஏதாவதொரு வகையிலை உடையத் தொடங்கேக்குள்ளையே திருத்தலாமல்லே? அப்பிடித் திருத்தினால் பெரிசாய் உடைஞ்சு ஒண்டுமில்லாமல் ஆகிறதைத் தடுக்கலாமல்லே.? மணிகட்டினை மாடுகளே விழுந்தெழும்பித்தான் திரியுதுகள்... பாப்பாரில்லை.. சீர்ப்படுத்துவாரில்லை...

ம்ம்.. சீரணிச் சந்தி வந்திட்டுது இனி துள்ளுகிற றோட்டு... கலைபடுகிற பஸ்காறர்... கவனமாத்தான் போகவேணும்.. ஆறுதலாய்க் கதைக்கிறன்.





# விடைகொடு விடைகொடு காசநோய்க்கு!

மருத்துவர் சி. யமுனாநந்தா


## சயன்ஸ் அக்கடமி

நல்லூர் - முருகன் ஆலயம் முன்பாக நாவலர் வீதி, அரியாலை.

தொ.பே : 077 538 8471, 077 312 6807, 021 222 9016

**தரமான கல்வியை என்றும் வழங்கும் முதற்தர நிறுவனம்**

நிகரற்ற சிறப்பான நிர்வாக கட்டமைப்பின் கீழ் யாழ் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வழிகாட்டலுடன் 40 வருடங்களுக்கு மேலான கல்விப் பாரம்பரியத்தில் கல்வியிலும், ஒழுக்கத்திலும் என்றும் முன்னணியில் திகழும் எமது நிறுவனம்

**கல்வியாண்டு 2021 இல் சிறப்பாக ஆரம்பமாகியுள்ளது.**

வெற்றித்தேர்வு ஆரம்பக்கல்விப் பிரிவு
தரம் 1 முதல் தரம் 5 வரை
வாராந்தம் வெற்றித்தேர்வு பரீட்சைகளோடு அலகுப் பரீட்சைகள், மீட்டல் வகுப்புகளுடன் விசேட புலமைப்பரிசில் வகுப்புகள்

தரம் 6 முதல் தரம் 11 வரை
தமிழ்மொழி மூல வகுப்புக்கள்
English Medium Classes

இவற்றுடன் ICT, சிங்களம், English Literature ஆகிய பாடங்களும்

இவை அனைத்தும் ஒரே இடத்தில் பெற்று உங்கள் பிள்ளைகளும் சாதனையாளர்களாக எம்முடன் இணைந்திடுங்கள்

"எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோரே"


உலக காசநோய் தினம் வருடா வருடம் பங்குனி மாதம் 24ஆம் நாள் கொண்டாடப்பட்டு வரு கின்றது. 1882ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24ஆம் நாள் றொபோட் கொச் என்ற அறிஞர் காச நோய் மைக்றோ பக்றீரியம் ரியுபகு ளோசிஸ் என்ற பக்றீ ரியாவால் ஏற்படுகின்றது என்பதை உலகிற்கு நுணுக்குக் காட்டியூடு எடுத் துக் காட்டிய தினமே உலக காசநோய் தினமாகக் கொண்டாடப்படுகின்றது.

உலகில் நூற்றாண்டுகளுக்கு மேலாக சமூகத் தொற்றாக உள்ள நோய் காசநோய். இது காற்றினால் பரவும் நோயாகும். காசநோய்க் கட்டுப்பாடு தொடர்பான உலக அனுபவம், அணுகுமுறைகள் தற்போது உலகை அச்சுறுத்தும் கொரோனா நோயினைக் கட்டுப்படுத்தப் பெரிதும் உதவின. பொதுவான சுகாதார நடைமுறைகள், முகக்கவசம் அணிதல், எவர் எதிரிலும் இருமுதல், தும்முதல் செய் யாது கைக்குட்டைகளை உபயோ கித்தல் என்பன, காசநோய்க் கட்டுப் பாட்டில் முக்கியமானவை. அவ்வாறே கொரோனாக் கட்டுப்பாட்டிலும் இவையனைத்தும் முக்கியத்துவம் பெறுகின்றன.

காசநோயின் அறிகுறிகள்: இருமல், மாலைநேரக் காய்ச்சல், சளியுடன் குருதி வெளிவரல், உடல் மெலிதல், களைப்பு என்பனவாகும்.

தற்போதைய கொரோனாச்சூழல் காசநோயாளிகளை இனங்கண்டறிந்து சிகிச்சை அளிப்பதில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தி உள்ளது. காசநோய் அதிகம் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடி யவர்களாக நீரிழிவு நோயாளிகள், தூசு களில் வேலை செய்வோர் இனங்கா ணப்பட்டுள்ளனர். இவர்களுக்கு சளிப்பரிசோதனைகள் எக்ஸ்கதிர் பரிசோதனைகள் மூலம் மேற்கொள் ளப்படல் வேண்டும்.

2021ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24ஆம் நாள் உலக காசநோய் தினத்தின் தொனிப்பொருள் "கடி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இவ்வுலகின் ஒவ்வொரு ஆத்மாவுக்கும் காதல் உண்டு. கிட்டத்தட்ட முக்கால் வாசி ஐரோப்பாவை தனது வல்லமையால் கட்டியாண்ட மாவீரன் நெப்போலியன்கூட தனது மனைவியிடமிருந்து கடிதம் வராத நாட்களில் பூமத்திய ரேகைக்கடியில் தான் சிக்கிக்கொண்டதைப் போன்று உணர்வார் எனக் கூறினார்.

இந்த உலகம் மீண்டும் உத்வேகம் பெற காதல் குறித்த சிறந்த பொன்மொழிகளை நினைவுபடுத்தி ஆசுவாசப்படுத்திக் கொள்வது சற்றே பொருத் தமாக இருக்கும்.

''அன்புக்குரிய காதலர்களைக் காதலிப்பவர்கள் போகப்போக தங்கள் காதலை மட்டுமே காதலிக்கத் தொடங்கிவிடுவார்கள்'' என்று ஒரு பொன்மொழி உண்டு. அதாவது தாங்களும் காதலிக்கிறோம் அல்லது காதலிக்கப்படுகிறோம் என்பது ஒரு அற்புதமான விஷயம், அதுவே போதும் என்று அவர்கள் நம்புவதுதான். பல நேரங்களில் காதலர்கள் தங்களுக்குள் வெறுத்

# காதல்! காதல்! காதல்!

துக்கொண்டாலும் காதலித்த தருணங்களையே உயர்வாகக் கருதிக் கொண்டிருப்பர்.

உலகின் அற்புதமான ஓவியக் கலைஞன் வின்சென்ட் வான்காவிலிருந்து நோபல் பரிசு பெற்ற அமெரிக்க பொப் பாடகர், பாடலாசிரியர் பாப்டிலன்வரை காதலைப் புரிந்துகொண்டவிதம் தனித்துவமானது. காதலில் தத்துவங்கள் நிறைந்திருப்பதைப் போலவே தன்னம்பிக்கையும் மிளிரும் பண்பட்ட சர்வதேச காதல் பொன்மொழிகள் பலவுண்டு.

காதல் என்றும் அழியாதது - ஆளாளுக்கு காலத்திற்குக் காலம் அதன் அம்சம் மாறக்கூடும். ஆனால், சாராம்சம் அல்ல. ஒரு நபர் காதலிக்கப்படுவதற்கு முன்னும் பின்னும் ஒரு விளக்கு சும்மா இருப்பதற்கும் எரியும் விளக்காக இருப்பதற்குமான வித்தியாசத்தைக் கொண்டிருப்பார். அது நல்ல விளக்குதான். ஆனால், காதல் என்று ஒன்று வந்த பிறகே அது வெளிச்சத்தை சிந்தும் விளக்காக மாறுகிறது. அதுதான் அதன் உண்மையான செயல்பாடு.

பல்வேறு செயல்பாடுகளிலும் ஈடுபடும் ஒருவரை அமைதியின் வழியில் ஒழுங்குபடுத்துவது காதல்தான். அந்த வகை யிலேயே அவர் எந்த ஒரு வேலைக்கும் பொருத்தமானவராக மாறுகிறார்.

ஒரு உண்மை என்னவெனில், காதல் இல்லாமல் நான் உயிர் வாழ முடியாது - வின்சென்ட் வான்கா

நாம் புரிந்து கொள்ளா ததால் நாம் நேசிப்பதில்லை அல்லது நாம் நேசிக்காததால் புரிந்துகொள்ளவில்லை. நம்மைச் சுற்றியுள்ள எல்லாவற்றின் இறுதி அர்த்தமும் அன்பு மட்டுமே. இது வெறும் உணர்வு அல்ல எல்லா படைப்புகளின் மூலத்திலும் இருக்கும் மகிழ்ச்சி அது'' - ரவீந்திரநாத் தாகூர்

''ஒவ்வொரு மனிதனும் தன்னைப் பெரிய அளவில் கவனித்துக் கொள்கிறான் என்பதால் அல்ல, நேசிப்பதாலேயே உயிர் வாழ்கிறான் என்பதையே நான் வாழ்விலிருந்து கற்றுக்கொண்டதாகும்'' - லியோ டால்ஸ்டாய்

''நாம் நேசிக்கும்போது, நம்மைவிடச் சிறந்தவர்களாக மாற எப்போதும் முயற்சி செய்கிறோம். நம்மைவிடச் சிறந்தவர்களாக மாற நாம் முயலும்போது, நம்மைச் சுற்றியுள்ள அனைத்தும் சிறப்பாகின்றன'' - பாலோ கோயலோ

''ஒருவரால் ஆழமாக நேசிக்கப்படுவது உங்களுக்கு பலத்தைத் தருகிறது, அதே நேரத்தில் ஒருவரை ஆழமாக நேசிப்பது உங்களுக்கு தைரியத்தைத் தருகிறது'' - லாவோ சூ

''காதலில் விழுந்ததற்கு ஈர்ப்பு விசையை நீங்கள் குறைகூற முடியாது'' - ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

''அன்பைக் கொடுப்பதும் ஒரு கல்வி தான்'' - எலினோர் ரூஸ்வெல்ட்

''ஒருபோதும் காதலிக்காததை விட, காதலித்து தோல்வியடைவது மேல் - ஆல்ஃபிரட், லார்ட் டென்னிசன்

''காதல் என்பது இரண்டு உடல்களில் வசிக்கும் ஒற்றை ஆத்மாவால் ஆனது'' - அரிஸ்டாட்டில்

''காதலில் எப்போதும் பித்துப் பிடிக்கும் தன்மை உண்டு. ஆனால் காரணமின்றி அல்ல, அதற்கு எப்போதும் சில காரணங்களும் உள்ளன'' - பிரெட்ரிக் நீட்சே

''அன்பு உங்கள் ஆன்மாவை அதன் மறைவிடத்திலிருந்து வலம் வரச் செய்கிறது'' - சோரா நீல் ஹர்ஸ்டன்.



# லிப்ஸ்டிக் இல்லாமல் உதட்டு அழகுக்கு!






சண்முகதேவி கௌரிதரன்
(அழகுக் கலை நிபுணர்)



சிலரது முகம் வெண்மையாக இருந்தாலும் அவர்களின் அழகினை கருமையாகத் தென்படும் உதடுகள் கெடுத்துவிடுகின்றன.

ஆகவே உதட்டுக் கருமையைப் போக்க பலரும் லிப்ஸ்டிக் போன்ற செயற்கையான நிறமூட்டிகளைப் பயன்படுத்துகின்றனர்.

அவற்றை விடுத்து வீட்டில் கிடைக்கும் பொருள்களைப் பயன்படுத்தி எவ்வாறு இயற்கையாக உதட்டினை அழகுடன் பேணலாம் என்பதனை இந்த வாரம் பார்க்கலாம்..



தினமும் காலையில் எலுமிச்சைப் பழச் சாறினை எடுத்து உதட்டில் தேய்த்து வரவேண்டும் அல்லது எலுமிச்சைப் பழத்தினை சிறு சிறு துண்டுகளாக வெட்டி உதட்டில் தேய்த்து வந்தால் கருமைத் தன்மை இல்லாமல் போகும்.



பின்னர், மாதுளைச் சாறு, கரட் சாறு, பீற்றூட் சாறு போன்றவற்றை எடுத்து உதட்டில் பூசுவதுடன், மாதுளம் விதையினை அரைத்து உதட்டில் தேய்த்து வந்தால் உதட்டில் உள்ள அழுக்குகள் நீங்கி உதடு அழகுபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அருளானந்தம் - கீரிமலை

கதை 26

# படுத்துக்கிடந்தபடி பேய்களைக் கண்டவன் நான்

பேய் நடமாட்டம் உள்ள இடங்களில் ஏதாவது சந்தேகத்துக்கிடமான சத்தம் கேட்டால் உடனே திரும்பிப் பார்க்காது கமக்கட்டுக்கு (அக்குள்) ஊடாகப் பின்னால் பார்த்தால் பேய் நிற்பது தெரியும் என்று பொதுவாகச் சொல்லக் கேட்டிருக்கி றேன். ஆனால் அப்படி நான் காணவில்லை.

பொதுவாகச் சுடலையில் ஆவிகளின் நடமாட்டம் இருப்பது வழக்கம். நான் சில கழிப்புக் கழிக்கும் தேவைகளுக்காக இரவு நேரத்தில் சுடலைக்குப் போயிருக்கிறேன். அந்த நள்ளிரவு நேரத்தில் சுள்ளி முறிப்பது போல அல்லது சருகுகளை மிதித்து நடப்பது போல சத்தங்கள் கேட்கும். அப்போது நான் கீழே படுத்துக்கிடந்தபடி ஓசை வந்த திசை யில் பார்த்தபோது புகைபோல பல உருவங் கள் காற்றில் நடமாடுவதைக் கண்டிருக்கிறேன். அவற்றுக்குக் கால் இருப்பதில்லை.

அதே நேரத்தில் கறுப்பாகத் தெரியும். பற்கள் பெரிதாக வளர்ந்து வாய்க்குவெளியே நீண்டிருக்கும். இப்படிப் பல தடவைகள் படுத்துக்கிடந்தபடி பேய்களைக் கண்டிருக்கி றேன்.

கொள்ளிவால் பேய் நிலத்தில் இருந்து இரண்டடி உயரத்தில் நகர்ந்து செல்வதைக் கண்டிருக்கிறேன். அது 40 அடி உயரம் வரை உயர்ந்து சென்றதையும் கண்டிருக்கி றேன். எங்கள் கண்களுக்குத் தெரியும் பேய்கள் எல்லாம் எம்மை வந்து தாக்கும் என்ற கட்டாயம் இல்லை. இவ்வாறாகப் பேய்கள் பற்றிய உலகம் ஒன்று உண்டு என்பதை எனது அனுபவத்தின்படி நான் நம்புகிறேன். அதை எனக்கு வேறு யாரும் கூறிக் கேட்கவில்லை. நானே எனது தொழில் ரீதியாகப் பல தடவைகள் கண்டிருக்கிறேன்.

யாராவது ஒருவருக்குச் செய்வினை வைத்தால் அதை வெட்டிக் கழிப்புக் கழிப்ப தற்குச் சுடலைக்குச் செல்வேன். இது எனது தொழில் என்பதால் அதற்கு நான் பயப்படுவ தில்லை. நான் கடந்து செல்லும்போது கோழிச்சேவல் ஒன்றை வெட்டி அதன் குருதியை என்னைச் சுற்றித் தெளித்துவிட்டுச் சடங்கை ஆரம்பிப்பேன். கொடூர ஆவிகளை குருதி யால் சாந்தப்படுத்திவிட முடியும் என்பது நம்பிக்கை. அதை அனுபவ ரீதியாகப் பல தடவைகள் நிரூபித்தும் இருக்கிறேன். ஆனால் வெட்டும் சேவலை நான் ஒருபோ தும் உண்பதில்லை.

## இணையாத சொந்தங்கள் ..!

உணர்வுகளால் உரசுகிறாய்
உதாசினமாய் உதறுகிறாய்
உயிரனைத்தும் உனக்கென
உனக்கிது புரியலயே..

முப்பொழுதும் முகம்பார்த்து
மூழ்கிக்கொண்டே முடிகிறேன்
முழுநிலவாய் முறைத்துக்கொள்ள
முடிவெடுக்க முடியலயே..

உதிரிப்பூவாய் உலாவுகிறேன்
உனக்கெனவே உதிர்கிறேன்
உசுரோடே பேசுறேன்
உறவோடே வாழுறேன்
உனக்கேதும் தெரியலயே..

அவசர அன்பினால்
அனாதையாகிறேன் அதீத
அன்பினால் அர்த்தமாகிறேன்
அனைத்துமிங்கு அறியலயே
அள்ளிமுடிக்க அவளில்லையே..



ஜெ.அப்சால் அஹமட்
நிந்தவூர்



# விநோத விருந்தாளிகள்...?

கொரோனாப் பெருந் தொற்றுக்கு மத்தியில் பெரிய விருந்துபசார நிகழ்வொன்றை நடத்தி யிருக்கிறது தாய்லாந்து. பெருந் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள தமது நாட்டின் சுற்றுலாத்துறை பழைய நிலைக்கு மீளவேண்டும் என்கிற எதிர்பார்ப்பில் பெரும் கொண்டாட் டமாக நடத்தப்பட்டிருக்கின்ற இந்த விருந்துபசார நிகழ்வின் நாயகர்கள் யார் தெரியுமா...? நீங்கள் நினைப் பதுபோல நிச்சயமாக மனிதர்கள் அல்லர். இந்த விருந்தைச் சுவைத்த விருந்தாளிகள் யானைகள்...? ஆம்

பெருந்தொற் றுக்கு முன்னரான காலத்தில் கொடி கட்டிப் பறந்த தமது நாட்டின் சுற்று லாத்துறையில் முக்கியம் பிடித்த யானைகளுக்குப் பெருவிருந்தளித்துள்ளனர் தாய் லாந்து மக்கள். சுற்றுலாத்துறையை மாத்திரம் நம்பியுள்ள தாய்லாந்து பெருந்தொற்றுப் பரவுவதைக் கட் டுப்படுத்துவதற்காகக் கடந்த ஏப்ரல் மாதம் பயணத் தடை விதித்தி ருந்தது. அதை இன்னும் நீக்க வில்லை. இதனால் அதிக வருமான மீட்டுகின்ற அந்த நாட்டின் பொரு ளாதாரம் கடும் சரிவை சந்தித்துள்ளது.

"எமது நாட்டுக்குச் சுற்றுலாப் பயணிகள் திரும்பி வருவார்கள் என்ற நம்பிக்கையில் எங்கள் யானைகளுக்குப் பெருவிருந்து படைத்துள்ளோம்" என்கி றார்கள் அயுதாயா மக்கள். தாய்லாந்தின் புராதனத் தலைநகரான அயுதாயாவில்தான் கடந்த சனிக்கிழமை இந்தப் பெருவிருந்து நடந் தது. இந்த விருந்தில் பழங்க ளைக் குவித்து நூற்றுக்கணக்கான யானைகளை உண்ண வைத்தி ருக்கிறார்கள். யானைகள் தமக்குக் குவிக்கப்பட்ட பழங்களை உண்டு களித்துள்ளன. இது வருடம்தோறும் அந்த மக்களால் கொண்டாடப் பட்டு வந்தாலும் தமது நாட்டுக்குச் சுற்றுலாப் பயணிகள் விரைவில் திரும்பிவருவார்கள் என்ற நம்பிக் கையில் இந்தமுறை பெருமெடுப் பில் நடத்தப்பட்டுள்ளது. இந்த விருந்து தாய்லாந்தின் யானைகள் தினத்தையும் குறிக்கின்றது. அத் தோடு தாய்லாந்தின் தேசியம், பெருமை, கலாசார அடையாளங்க ளின் ஆதாரமாக யானைகள் அங்கு கொண்டா டப்படுவதையும் குறிக்கிறது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பாலைவனத்து ஊற்றடி நீ எனக்கு!

12

● கலியுக பித்தன்

**இளசுகளைக் கிறங்க வைக்கும் காதல் தொடர்**

"அம்மா, உங்களுக்கு கான்சர் குணமாகாதெண்டு டாக்டர்......" இதை எப்படி கேட்டு முடிப்பது என்று தெரியாமல் இழுத்தான் வருண். புன்னகை படர்ந்திருந்த முகத்தில் கவலை தொற்றி கொள்ள அமைதியாய் இருந்தார் பார்வதி.

அங்கு சின்னதோர் அமைதி செயற்கையாக உருவாகி இருந்தது.

"உங்களுக்கும் ரித்துக்கும் என்ன சம்மந்தம்?" அமைதியைக் கலைத்து மீண்டும் கேட்டான் வருண். சற்று முன்னர்தான் இதற்கான விடைகளை "பாரு மாவிடம்" அறிந்து கொண்ட வரதராஜன் "ஏன்பா வருண், இதை பேந்து கேட்டுக் கொள்ளலாமே" குறுக்கிட்டார்.

"இல்ல வரது, இதை இப்பவே சொல்றதுதான் உத்தமம்.

வருண், சொல்றன் பா.. சொல்றன்..." வடிந்த கண்ணீரை சேலை நுனியால் துடைத்து கொண்டு தன்னோட கதையை சொல்ல தொடங்கினார் பார்வதி...

"உங்க அப்பா என்னை விட்டுட்டு போனதுல இருந்து என்னோட சந்தோஷம், நிம்மதி, கௌரவம் எல்லாமே போயிட்டுது பா. என்னதான் நான் வரதுவை உயிருக்குயிரா காதலிச்சு இருந்தாலும் கல்யாணத்துக்கு பிறகு உங்க அப்பாக்கு உண்மையாதான் இருந்தன். அவரும் அப்டிதான் இருந்தாரு. என்னமோ தெரில திடீரெண்டு எங்கிட்ட வந்து 'பார்வதி, நான் சொல்றதை கேளு.. இந்த வாழ்க்கை எனக்கு பிடிக்கேல, காதலிச்சவளை விட்டு உன்னை கட்டிகிட்டு என்னால சந்தோஷமா வாழ முடியேல' என்டார்.. எனக்கு தலை சுத்தி அப்டியே சுவரோட சாஞ்சுட்டன். இப்போ என்ன பண்ண போறீங்க என்டு கேட்டன்."

'நான் காதலிச்ச பொண்ணையே கல்யாணம் கட்டிக்கொண்டு ஊரை விட்டு போகப்போறன்' கொஞ்சம் கூட யோசனை இல்லாம சொன்னார். எனக்கு கோபம் கோபமா வந்திச்சு. அப்போ வயித்துல நீ மூனு மாசமா இருந்தா. நீங்க இப்டியே போயிருவீங்க நானும், உங்க பிள்ளையும் என்ன பண்றதென்டு கேட்டன்.

'இதோ பாரு எனக்கு அதை பத்தியெல்லாம் தெரியாது. நான் உன்கிட்ட பெர்மிஷன் கேக்கல, யஸ்ட் இன்பர்மேஷன்தான்' என்டு சொல்லிட்டார். போகப் போறனென்டு சொல்றவரை இழுத்தா வைச்சிருக்க முடியும்? அதனால அவர் சொன்ன விசயத்தை நான் வீட்டுல யாருக்குமே சொல்லேல. அவர் சொல்லி ரெண்டு நாளில கல்யாணம் பண்ணி வேற ஊருக்கு போயிட்டாரு. என்னோட அம்மா அப்பா அண்ணா இருக்காங்களே, வசதிக்கும் எந்த குறைவும் இல்லை, உன்னை என்னால நல்லா பார்த்துக்க முடியுமென்டு நான் முழுசா நம்பினன். ஆனால்...! சொல்லி கொண்டே பெருமூச்சொன்றை விட்டார்.

"ஆனால் என்னம்மா? அப்றம் என்னாச்சு?" கவலை தோய்ந்த தொணியோடு சற்று இடைவெளி விட்டு கேட்டான்.

"அவர் போனதுக்கப்புறம், ஊரில என்னை பத்தி தப்பான கதை பரவிட்டு இருந்திச்சு. முதல் தடவை அந்த கதை என்னோட காதை எட்டினப்போ தாங்கிக்கவே முடியல, தற்கொலைக்கு முயற்சி பண்ணன், அதுக்குகூட இந்த பாவி குடுத்து வைக்கல."

"தப்பான கதை ன்னா..." வருண் குறுக்கி ட்டான்.

"எனக்கும், வரதுக்கும் தொடர்பு இருக்காம், அவரோ குழந்தை தான் என்னோட வயித்துல வளருதென்டும், அதனால தான் என் கணவர் விட்டு ட்டுப் போயிட்டார் எண்டும் நரம்பில்லா நாக்கால வாய்க்கு இதமா பேசிக்கி ட்டாங்க.." சொல்லி கொண்டே குலுங்கி குலுங்கி அழுதார்.

அவருக்கு அருகிலே போய் இருந்து தாயை தோளோடு அணைத்து கொண்டான் வருண். என்ன ஆறு தல் வார்த்தை சொல்வதென்று அவனுக்கு தெரியவில்லை. ரித்துவும், வரதராஜனும் கலங்கிய கண்களோடு அமைதியாக இருந்தனர்.

"சரிம்மா, சரிம்மா... அது போகட்டும் விடுங்க..." பார்வதியோட தலையை உயர்த்தி அவருடைய கண்களை பார்த்து நம்பிக் கையோடு சொன்னான். தாயைக் கொஞ்சம் சிரிக்க வைப்ப தற்காக குறும்போடு "அதெல்லாம் சரி, மடம் ஐ எப்டி தெரியும்?" தாயோட தோள்களில் கையை போட்டபடி ரித்துவை பார்த்து கேட்டான்.


அவனது அந்த குறும்பு கேள்வியால் மூவரின் முகத்திலும் சிரிப்பொன்று துளிர்விட்டது. அந்தச் சிரிப்பு செயற்கையாகவே இருந்தது என்றாலும் அனைவரும் அதை இரசித்தனர்.

"அவங்கதான் எனக்கும் அம்மா" என்று சொன்னாள் ரித்து. இதை சற்றும் எதிர்பாராத வருண் "என்னது இவங்க உனக்கும் அம்மாவா?" ஆச்சரியத்தோடும் ஏமாற்றத்தோடும் கேட்டான்.

"ஆமா, எனக்கு மட்டுமில்ல இங்க இருந்து வெளில போன, இப்போ இங்க இருக்கிற நூற்றுக்கணக்கான பிள்ளைகளுக்கும் இவங்கதான் [illegible] பட்ட [illegible] கொண்டே சிறுவர் இல்லத்தை நோக்கி தன் பார்வையை திருப்பி கொண்டு அமைதியானாள் ரித்து. வருணுக்கு இப்போது சில விசயங்கள் பிடிபடத் தொடங்கின.

"நான் வரதுவை உயிருக்குயிரா காதலிச்சு இருந்தாலும் கல்யாணத்துக்கு பிறகு உங்க அப்பாக்கு உண்மையாதான் இருந்தன். அவரும் அப்டிதான் இருந்தாரு. என்னமோ தெரில திடீரெண்டு எங்கிட்ட வந்து 'பார்வதி, நான் சொல்றதை கேளு.. இந்த வாழ்க்கை எனக்கு பிடிக்கேல, காதலிச்சவளை விட்டு உன்னை கட்டிகிட்டு என்னால சந்தோஷமா வாழ முடியேல' என்டார்"





"அந்த ஊரில பேசுற கதைகளை கேட்டு என்னால இருக்க முடியேல. எங்கையாவது போய் செத்திரலாமென்டு நினைச்சுதான் வரதுவை கூப்பிட்டு எனக்கு கான்சர் என்டு ஒரு பொய்யை சொல்லி உன்னை அவரிட்ட குடுத் துட்டு, ஊரில இருந்து என்னோட சொத்துக்களை எல்லாம் வித்து அந்த பணத்தை சிறுவர் இல்லத்துக்கு குடுக்க என்டு தான் இந்த ஊருக்கு வந்தன்."

அந்த குரலில் சின்ன நம்பிக்கை தெரிந்தது.

"ஏன் சிறுவர் இல்லத்துக்கு குடுக்கோனும் என்டு யோசிச்சீங்க?" ஆச்சரியமா கேட்டான்.

"என்னோட பிள்ளை பெத்தவங்களிட்ட இல் லாம வேறொருவரோட வாழப் போகுது. இப்டி இந்த உலகத்துல எத்தனையோ பிள்ளைங்க அம்மா அப்பா இல்லாம சிறுவர் இல்லங்களில் வாழுவாங்க. என் பிள்ளைக்கு சேரவேண்டிய துகள் அவங்களுக்கு போய் சேரோனும்ன்னு ஆசைப் பட்டன்" சொல்லி முடித்த தாயை பெருமையாக பார்த்தான் வருண்.


"நான் இங்க வந்த நேரம், இதுக்கு பொறுப்பா இருந்தவங்க, தன்னால உடம்புக்கு முடியாம இருக்கு, என்னையும் தன் கூடவே இருக்குமாறு கேட்டுக்கிட்டாங்க. என் பிள்ளையை கொடுத்துட்டு வந்த எனக்கு இங்கே நிறைய பிள்ளைங்களை கடவுள் குடுத்தார். அந்த ஊர்ல வாழ முடியாது செத்துப் போக தான் இங்க வந்தன், ஆனா இங்க ஒரு நல்ல வாழ்க்கையை கடவுள் குடுத்தார். ஒவ்வொரு பிள்ளையையும் என் பிள்ளையான உன்னை மாதிரி நினைச்சுத்தான் பார்த்தன்.. பராமரிச்சன்..." வருணோட தலையை தடவிக் குடுத்துக் கொண்டே சொன்னார்.

"அப்டி அவங்க பாசத்தோட பார்த்த, பராமரிச்ச பிள்ளைக ளில நானும் ஒருத்தி" தளத ளர்த்த குரலில் சொன்னாள் ரித்து.

"அம்மா, அப்பா யாருன்னே தெரியாமல், விவரம் அறியாத வயசிலேயே என்னை இங்க விட்டுட்டாங்க. எனக்கு அம்மாவா, அப்பாவா இருந்து என்னை படிக்க வைச்சது எல்லாமே இவங்கதான்" அழுகையை விழுங்கியபடி சொல்லிக் கொண்டே பார்வதியின் மறு தோளில் சாய்ந்தாள் ரித்து.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





"பறக்கும் மனிதர்களை அவன் கண்முன்னே கண்டான். அவர்களிடம் உயிர் இருந்ததோ இல்லையோ அவனறியான். முனகல் சத்தங்களே அனேகம் கேட்டனவாக அவன் தப்பியவர்களை அவசரமாக வெளியேற்ற வேண்டிய இக்கட்டில்.

# வேதனைதான் ஆன

"நான் சாகவில்லைத்தான். நினைவோடு தான் இருக்கிறேன். இருட்டில் எதுவும் விளங்க வில்லை. எப்படி சீற் பெல்ட்டை கழற்றினேன் என்பதும் புரியவில்லை. எங்கே நின்று கொண்டிருக்கிறேன் என்ப தும் புரியவில்லை.

புகை மற்றும் தூசி மண்டலத்தினூடாக வெளிச்சம் புலப் பட ஆரம்பித்தது. அது என்ன அதிசய வெளிச்சம் என்கி றீர்களா. ஆங்காங்கு தீப்பற்றிய ஒளிரல்கள்தான்."

இப்பொழுது அவன் தனது நிலைப்பாட்டை உறுதி செய்துகொண்டான்.

விமானம் எப்படி தலைகீழாகச் சுழல முடியும்? அதன் இறக்கைகள் அவ்வாறு சுழல இடம் கொடுக்காதே என அவன் நினைத்தான்.

தான் நிற்பதோ தலைகீழாக புரண்டுள்ள பயணிகள் பகுதியின் கூரைப் பகுதிதான். தரைப்பகுதி தலைக்குமேலே கவிழ்ந்து கிடக்கும் ஆசன வரிசைகளுடன்தான். ஆசனங் களில் இருந்து விடுபடாத பலரும் ஆசனப் பட்டிகளில் தொங்கிக் கொண்டிருந்தனர். அவர்களில் துடிப்பு உள்ள வர்களை முதலில் விடுவித்தாக வேண்டும். முதுகு மற்றும் மூட்டில் வலிகள் பிராணனை வாங்கியபோதும் சிலரை அவனால் விடுவிக்க முடிந்தது. பலர் இறந்தபடியே தொங் கிக் கொண்டிருந்தனர். காலடியிலும் சிதைந்தும் சிதை யாமலும் உடலங்கள்.

சில இடங்களில் தீ நாக்குகள் தமது வேலையை செவ் வனே செய்யத் தொடங்கியிருந்தன. பறக்கும் மனிதர்களை அவன் கண்முன்னே கண்டான். அவர்களிடம் உயிர் இருந்ததோ இல்லையோ அவனறியான்.

முனகல் சத்தங்களே அனேகம் கேட்டனவாக அவன் தப்பியவர்களை அவசரமாக வெளியேற்ற வேண்டிய இக்கட்டில். தடித்த புகை மண்டலம், கருகும் பலவகை யான பொருட்களின் வாசனை, மூச்சுத் திணறல், அடுத்த தாக நெருங்குகின்ற தீ நாக்குகள் எனப் பல கோணங்களில் ஆபத்தான சூழல்.

இதுவரை தப்பியவர்களும் மாட்டுப்படவே போகின்ற அவலம்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் உதவிகள் வந்து சேர முதலே உடனிருப்பவர்களே அதிகமாக பலரைக் காப்பாற்ற முடி வதுண்டு.

ஒருவாறாக கதவு ஒன்று திறக்கப்பட வெளி உலக வெளிச்சங்கள் கண்களுக்கு புலனாகின. வான் வெளி கண்முன்னே பரந்து கிடக்கின்ற காட்சி புலப்படவும் உள்ளே மேலும் இருண்டு கொண்டது.

**வெளியே.....**

எரிகின்ற விமானத்தில் இருந்து அந்தத் தரைச் சேற்றினுள் குதித்த அவனால் ஆபத்தில் இருந்து தப் பிக்க வெகுதூரம் செல்ல முடிய வில்லை.

ஆங்காங்கே சோளப் பயிர்களுக்கு நடுவே சிலர் நின்று கொண்டிருக்கிறார்கள். அதிர்ச்சியில் இருந்து அவர்கள் இன்னும் மீளவில்லை. கூடவே பயணித்த தமது உறவு களை தேடித் துடித்தவர்களும் பலர்.

இவனது தவிப்பு பலரைப் பற்றியது. முக்கியமாக ஜே பற்றிய எந்தத் தகவலும் உடனடியாக கிடைக்கவில்லை. தன் முன்னே நின்றிருந்த அந்த அம்மா பரிதாபம்! பையனைக் காணாது தவித்துக் கொண்டிருந்தார்.

மீட்பு அணியினர் வந்துவிட்டபோதிலும் எரிகின்ற விமா னப் பகுதிகளை நெருங்க முடியவில்லை. பரிதாபமாகப் பல சிறார்கள் ஐ.நா. ஏற்பாட்டில் தனித்து வந்தவர்கள் என்னவானார்களோ.

காயமடைந்தவர்கள் அவசர அவசரமாக அம்புலன்ஸ்க ளில் ஏற்றப்பட்டு வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்ட னர்.

சிறு காயங்களுக்குள்ளானவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள மண்டபத்துக்கு ஜெரியும் அழைத்துவரப்பட்டிருந்தான்.

அங்கே உள்ளவர்களில் ஜேயை தேடி அவன் சோர்ந்து விட்டான்.

இனியென்ன செய்திகளை நம்பித்தான் தகவல்களை அறிந்து கொள்ள முடியும். தான் தப்பியதற்காகவும் சில சிறார்கள் உட்பட பலரை இழுத்து வெளியே அனுப்பிக் காப்பாற்ற கிடைத்த வாய்ப்புக்காகவும் கடவுளுக்கு நன்றி சொல்லிக் கொண்டான்.

பேக்கரி ஒன்றின் போறணைக்குள் அகப்பட்டு மீண்ட உணர்வும் உடல் உபாதைகளும் களைப்பும் அவனை வாட்டலாயின.

துணைவிக்கு தகவல் தெரிவிக்க அவளது அலுவலகத் தொலைபேசி இலக்கம் நினைவுக்கு வர மறுத்தது. அங்கி ருந்த ஒற்றைத் தொலைபேசிக்கு முன்னால் பதினைந் திற்கு மேற்பட்டவர்கள் கால்கடுக்க நின்று கொண்டி ருந்தனர்.

அங்கிருந்த தொலைக்காட்சி விபத்து இடம்பெறுகின்ற வீடியோ காட்சியை மாறிமாறி ஒளிபரப்பிக் கொண்டி ருந்தது. விமான நிலைய செய்தியாளர்களும்

மருத்துவ குழுவினரும் அந்த மண்டபத்தில் இவர்களு டைய நலன்களைக் கவனிக்கவும் அனுபவங்களை அறிந்து கொள்ளவும் வருகை தந்திருந்தார்.

**செய்திகள்.....**

விமானத்திலிருந்த **296** பேரில் **184** பேர் தப்பியது அதிசயமே. அவர்களில் பலர் வெளியேறி இருக்கிறார்கள் என் தகவலே. இவர்களில் பெரும் மற்றும் சிக்கன வகுப்பில் இருந் வகுப்பு என்றதும் பாதிப்புக்கள் கு

கடுமையாக காயமடைந்த இவர்களுள் அடக்கம்.

எந்தவித இயந்திர இயக்க ஒத் விமானத்தை ஓடுபாதைக்கு மிக விமானிகளின் சாதனை பாராட்

இறந்தவர்கள் **112** பேரில் ப மூச்சுத் திணறலாலும் இறந்தமை




பயண வகுப்பு, வசதி, வயது, லாக இறப்புகளும், ஏன் மீட்புக்க தன.


விமானிகள் கடுமையான காய ருந்த நிலையில் மீட்கப்பட்டிருந் கப்டன் அல் ஹைன்ஸ் கருத்து ணமான பல சாதகமான சூழ்நிலை

பகல் பொழுதில் விபத்து இட கத்தில் பேருதவியாக அமைந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







உண்மைச் சம்பவத்தின் அடியொற்றி...

■ மு.சிவநேசன்

# னாலும் சாதனைதான்!

## 2-2

ம பலர் தாமாகவே நடந்து
கள் என்பது ஆச்சரியமான
பெரும்பாலானோர் வணிக
ல் இருந்தவர்களே. முதலாம்
புக்கள் குறைவு என்றிருக்கவில்லை.
டந்த ஐம்பது பேர் வரையில்

பக்க ஒத்துழைப்பும் இல்லாத ஒரு
க்கு மிக அருகிலே தரையிறக்கிய
பாராட்டப்படுகின்றது.
பரில் பலர் காயங்களாலும் சிலர்
றந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.



வயது, என்ற பாகுபாடின்றி பரவ
மீட்புக்களும் இடம்பெற்றே இருந்

ன காயங்களுடன் மாட்டுப்பட்டி
பட்டிருந்தனர். தலைமை விமானி
கருத்துப்படி பலர் தப்பிக்க கார
சூழ்நிலைகள் அமைந்து விட்டன.
த்து இடம் பெற்றமை தரையிறக்
அமைந்திருக்கிறது.

காலநிலை சாதகமாக இருந்தமை மற்றொரு அம்சமாகிறது.

மருத்துவ, மீட்பு அணிகள் கடமை மாறும் வேளை என்பதால் இரட்டிப்பான ஆளணி அந்த வேளையில் தயாராக இருந்தமை ஒரு சிறப்பம்சம்.

பயணிகளில் ஓர் அனுபவசாலி நான்கவதாக விமானி அறைக்குள் வந்தது பெரும் தெம்பும் வழிவகைகளுமாக...

விமானத்திலிருந்த 52 சிறார்களில் பதினொருபேரின் கதி பரிதாபமே. அவர்களில் பலரின் பெற்றோர் விமானத்தில் இருந்திருக்கவில்லை என்பது வேறு கொடுமையே.

மடியில் இருந்த கைக் குழந்தைகள் நான்கில் ஒன்று இறப்பைத் தழுவிவிட மூன்று குழந்தைகள் இக் களபேரத்திலும் கைவிடப்படாமல் தப்பிக் கொண்டதும் அதிசயமே.

ஒரு சிறு காயம்கூட இல்லாமல் தப்பியவர்களும் பன்னிரண்டு பேர் என்பது மற்றோர் அதிசயமே.

இறந்தவர்களின் பட்டியலில் ஜே றம்செல் இருந்ததனை ஜெரியால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

விபத்து இடம்பெற்று முப்பது வருடங்கள் கழிந்தும்கூட பிழைத்தவர்களின் ஒன்றுகூடல் இடம்பெற்று இருக்கிறது. அனுபவங்கள் இன்னமும் பகிரப்படுகின்றன. இறந்தவர்களின் உறவுகளும் அவர்களுடைய நினைவிடங்களில் கூடி அஞ்சலி செலுத்திய வண்ணமே இருக்கிறார்கள்.

சுசான் வைற் என்ற விமானப் பணிப்பெண் சிறிய அளவிலான ஓர் ஒன்றுகூடலை பிழைத்துக் கொண்ட பன்னிரண்டு பேருடன் தனது இல்லத்தில் நடாத்தி இருக்கிறார். பலரும் தமது அனுபவங்களை அங்கே பரிமாறிக் கொண்டனர்.

சியோக்ஸ் சிற்றி வைத்தியசாலையில் ஒரு மாதம் சிகிச்சை பெற்றுத்தான் ஓரளவு தேறியதாக போல் ஒலிவர் தெரிவித்திருந்தார். தினமும் அந்த நாளை நினைக்காமல் இருக்க முடியவில்லை. அனுபவத்தை பகிர்வது சிறப்பாக உள்ளது என்றார்.

இறந்தவர்கள் 112 பேருக்கு உரிய நினைவாலயம் சியோக்ஸ் நகரத்தில் அமைந்துள்ளது. உயிர் பிழைத்தவர்கள் மற்றும் இறந்தவர்களின் உறவினர்கள் சுமார் முப்பது ஆண்டுகள் கழிந்தும் அங்கே நெஞ்சினை நெகிழ வைக்கின்ற காட்சியாக உலா வருகிறார்கள். ஒன்று கூடல்கள் அஞ்சலிகள் இன்றும் கண்ணீரால் நிரம்பி வழிகின்றன.

அந்த வேளையில் இயலாமையிலும் ஒருவருக் கொருவர் செய்த சிறு சிறு உதவிகள் உயிர்க் காப்பு உதவிகளாக இன்றும் பெரிதாகப் பேசப்படுகின்றன.

ஒரு சொகுசு விமான அறை சில கணங்களில் குருதிச் சகதியாக மாறிவிட்டதை கண்கூடாகக் கண்டு பக்கத்தில் இருந்த பலரை இழந்து காயங்களோடு உயிரைக் கையில் பிடித்தபடி மன வலிமையுடன் முன்னேறிய பலர் இன்றும் அங்கே உணர்வுகள் பொங்கிட விமானிகளின் சாதுரியமான செயற்பாடுகளை மெச்சியவாறாக நன்றியுணர்வுடன் கூடுகிறார்கள்.

தம்மை சுமந்து வந்தவர்களை, தமக்கு கட்டுப் போட்டவர்களை, தண்ணீர் பருக்கியவர்களை எல்லாம் அடையாளம் காணத் தேடித் தவிக்கிறார்கள். பலர் இன்றும் விமான மேற அஞ்சுகின்றனர்.

ஏழு வயதேயான றீன் தான் அந்த சோளக் காட்டில் காயங்களுடன் விடப்பட்டவேளை குளவிக் கொட்டுக்கு இலக்கான பயங்கரத்தை நினைவுகூருகின்றான்.

பிழைத்த 184 பேரையும் ஓரிடத்தில் கூட்ட இயலவில்லை. அவரவர் மனநிலை உடல்நிலை தேறுவதில் பல்வேறு சிக்கலான நிலமைகள் இருந்திருக்கும்.

பலர் நிகழ்வுகளில் விமானிகளையும் சந்தித்து மகிழ்ச்சி கொண்டாடியிருக்கிறார்கள்.

கப்டன் அல் ஹைன்ஸ் அப்போது வயது 57. பழுத்த அனுபவசாலி, கூறுகையில்,

விமானம் வெறுமனே விழுந்துகொண்டிருக்கிறது. எங்கள் கட்டுப்பாட்டில் அது இருக்கவில்லை. துடுப்புக் கட்டுப்பாடும் இல்லை. தன்னியக்கம் முற்றிலுமாக செயலிழந்த நிலை.

தரையிலிருந்து விரும்பிய ஓடுபாதையில் தரையிறக்கும்படி மாபெரும் சலுகையுடனான உத்தரவு. அழுவதா சிரிப்பதா என்று எனக்குப் புரியவில்லை.

ஓடு பாதையில்த்தான் தரையிறக்க வேண்டுமா என சிரித்தபடி பதில் கேள்வி கேட்டவர் அவர்.

வலது பக்க சுழற்சி வேலை செய்கிறது என்கிறார் பயணியாக வந்து கபினுக்குள் நுழைந்த பயிற்சியாளர்.

உடற் பலத்தை பிரயோகித்து அதனை அழுத்தி வலது பக்கமாக சற்றே சுழல வைத்தோம். விமான நிலையத்தை நெருங்க நகரத்தை தவிர்த்து வெளியான இடத்தில் விழ 184 பேரை பிழைக்க வைக்க இந்த முயற்சியே உதவியது என்கிறார்.

இவ்வாறாக இடது பக்கமாக சற்றே திருப்ப முடிந்திருந்தால் நாங்கள் ஓடுபாதையில் தரையிறங்கி இருப்போம் என்றும் தெரிவித்தார் அவர். என்றாலும் 112 பேரைச் சாகக்கொடுத்த பாவி என்கின்ற குற்ற உணர்வில் இருந்து விடுபட முடியாத அவலமான வாழ்விலும் மீண்டும் விமானி ஆசனத்தை தக்கவைக்க அவர் தவறவில்லை.


ஹெயின்ஸின் முகத்தில் வெட்டுக் காயங்கள். மனதிலே தாங்கொணா வலிகள். எந்த ஒரு கௌரவத்தையும் ஏற்க விரும்பாத உள்ளம். இது ஒரு கூட்டு முயற்சி என்கிறார் அவர். விமானத்தில் நால்வர், மற்றும் சக பயணிகள், தரையில் நூற்றுக்கணக்கானோர் எவரெவர் எவருக்கு நன்றி சொல்வதோ என்பது அவரது வாதம்.

விபத்து இடம்பெற்று முப்பது ஆண்டுகள் கழிந்து தனது 87 வயதில் அவர் இறப்பைத் தழுவிய வேளை தப்பியவர்களின் உணர்வுகள் தழுதழுக்கவே செய்தன.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொரஸ்ட் கம்ப்






றொபெர்ட் செமெக்கிஸ் என்பவர் இயக்கி 19994ஆம் ஆண்டில் வெளிவந்த ஆங்கிலத் திரைப்படம் இது. டொம் ஹாங், றொபின் விரைட் பென், ஹாரி சினைஸ், மைகேல்டி வில்லியம் சன், சால்லி பீல்ட் ஆகிய பலர் இதில் நடித்திருக்கிறார்கள்.

1984ஆம் ஆண்டில் இதேபெயரில் வெளியாகிய நாவல் ஒன்றைத் தழுவிய திரைக்கதையைக் கொண்ட இந்தப் படம் 13 ஒஸ்கார் விருதுகளுக்குப் பரிந்துரை செய்யப் பட்டு 6 விருதுகளைத் தட்டிச் சென்ற பெருமைக்குரியது. ஆங்கிலக் காதல் கதைகளில் இருந்து சற்றுவேறுபட்டு நாடக மற்றும் நையாண்டிப் பாணியிலமைந்த வித்தியாசமான சோகக் காதல் கதையே இந்தத் திரைப்படம்.

**வளர்ப்புத் தந்தையால் வன்புணரப் பட்ட பின்னர் ஜென்னி விலை மாதுத் தொழிலுக்கு ஆட்படுகிறாள். பின்னர் ஒருவகை வைரஸ் நோயக்குள்ளாகி அவதிப்படுகிறாள்.**

### கதை

மன நோயாளியாகக் கருதப்படுகின்றார் டொம் ஹாங். அவர் சிறுவயதிலிருந்து ஜென்னி என்கிற பெண்ணைக் காதலித்து வருகிறார். பேருந்து நிலையம் ஒன்றில் தனது பொழுதைக் கழிப்பதை வழமையாகக் கொண்ட அவர் அங்கு வந்துபோகின்ற பயணிகளக் அனைவருக்கும் தனது காதலியைப் பற்றியும் காதல் காலத்தைப் பற்றியும் காதலைப் பற்றியும் கூறி வருகிறார்.





பயணிகள் இவரது கதையைக் கேட்டுச் செல்கின்றனர். அவ்வளவு உருக்கமாக இருக்கிறது அவரது கதை. தனது சிறு வயது முதலே நண்பியாக இருந்து தனக்கு வந்த ஊனத்தை மறையச் செய்தவரும் தனது காதலியே என்றும் ஜென்னியைப் புகழ்ந்து கூறுகிறார் டொம் ஹாங். தனது அன்புக் காதலி அவளுடைய வளர்ப்புத் தந்தையால் வன்புணர்வுக்குள்ளாக்கப்படுவது தெரிந்தும் தனது காதலியின் மீதிருந்த அதீத காதலால் அவர் மீதிருந்த காதல் குறையவேயில்லை என்றெல்லாம் சொல்கிறார்.

இவ்வாறிருக்க வளர்ப்புத் தந்தையால் வன்புணரப் பட்ட பின்னர் ஜென்னி விலை மாதுத் தொழிலுக்கு ஆட்படுகிறாள். பின்னர் ஒருவகை வைரஸ் நோயக்குள்ளாகி அவதிப்படுகிறாள். ஆனால், இவை எவற்றையும் பொருட்டுத்தாமல் அவளது அழைப்புக்கு அமைய அவளது நலம் குறித்து அறிவ தற்காகப் புறப்படுகின்றார் டொம் ஹாங். இதற்கு மத்தியில் ஜென்னி குழந்தையைப் பிரசவிக்கிறாள். அந்தக் குழந்தையைப் பரா மரிக்கும் பொருட்டு ஜென்னியினைத் திரும ணம் செய்து கொள்கின்றார் டொம் ஹாங். சிறிது காலத்தில் நோய் நிலமை உச்சமடைந்து ஜென்னி இறக்கிறாள். அவரது கல்லறையில் சோகம் சூழ்ந்த முகத்துடன் காணப்படுகின்ற டொம் ஹாங் தமது குழந்தையை நன்றாக வளர்ப்பதைப் பற்றித் தனியே உரையாடுவதாகத் திரைக்கதை நீள்கிறது. இறுதியில் தனது மகனைப் பேருந்து வண்டியில் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பிவிட்டு அமைதியாக அமர்ந்திருக்கிறார். இத்துடன் படம் நிறைவடைகிறது.

### வித்தியாசமான காதல்

ஆங்கிலத் திரைப்படங்களுக்கேயுரிய காதல் கதையிலிருந்து சற்று வேறுபட்ட கதைக்களமாகக் காணப்படுகின்ற இந்தத் திரைக்கதை மனித உணர்வுகளின் உச்சத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கிறது. தனது காதலி மீதான அதீத காதலைத் தனது அமைதியான அரவணைப்பாலும் வெளிப்படுத்திவிடுகிற பாத்திரத்தில் ஒன்றித்துப்போகிறார் டொம் ஹாங்ஸ். நகைப்புக்குரிய நையாண்டிப் பாத்திரமாக ஆரம்பத்தில் தென்படுகின்ற அவர் தனக்குள் புதைந்திருக்கின்ற காதலின் வலியை மெல்ல மெல்ல வெளிப்படுத்தும் போது கவனிக்க வைக்கிறார். அவரது வாழ்க்கை அன்பாலும் காதலாலும் நிரம்பி வழிவது தெரிய வருகிறது.

இந்தப் படம் வெளியாகிய காலத்தில் அது குறித்து எழுதியவர்கள் டொம் ஹங்ஸினுடைய பாத்திரத்தைப் ''புத்திசாலித்தனமான முட்டாள்'' என்று வர்ணித்தார்கள். அந்தளவுக்குத் தனது நடிப்பால் ஈர்த்தார் அவர். இந்தப் படத்தில் பிரதான பாத்திரம் ஏற்று நடித்துமுள்ளார். அவருக்கு (சிறந்த நடிகர்) மாத்திரமன்றி சிறந்த இயக்குனருக்கான விருது, சிறந்த திரை இயக்கத்துக்கான விருது, சிறந்த திரைப்படத்திற்கான விருது, சிறந்த திரைவண்ணத்திற்கான விருது, சிறந்த தழுவிய திரைக்கதைக்கான விருது என எல்லாமாக 6 ஒஸ்கார் விருதுகள் அள்ளித் தரப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவருடன் பேசும் மனிதர்

அ.முத்துலிங்கம்

கனடாவுக்கு வந்து ஏற்பட்ட பிரச்சினைகளுள் ஒன்று முடி வெட்டுவது. நான் வசித்த வீட்டிலிருந்து தலைமுடி திருத்துமிடம் நாலே நிமிட தூரத்தில் இருந்தது. கடந்த ஏழு வருடங்களாக மாதம் ஒருமுறை அங்கே சென்றிருக்கிறேன். அதன் உரிமையாளர் ஓர் இத்தாலியர், பெயர் ரோனி. அவரும் இரண்டு மூன்று உதவியாளர்களும் அங்கே வேலை செய்தார்கள்

ரோனி நட்பானவர். அவருடைய முடி அலங்கோலமாகச் சிதறுண்டு போயிருக்கும். நான் அவருக்குச் சொல்வேன், 'என்ன உங்களுடைய முடியே இப்படித் தாறுமாறாக இருக்கிறது. உங்கள் வாடிக்கைக்காரர்கள் இதைப் பார்த்து வராமல் போய்விடுவார்களே: அவர் சொல்வார், என்ன செய்வது. என்னைப்போல ஒரு நல்ல முடிதிருத்து பவர் கிடைத்தால் உடனே தலையைக் கொடுத்து விடு வேன். இங்கே எல்லோருமே மோசம். அதுதான் முடி வெட்டு வதைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வருகிறேன்

நானும் ரோனியைப் போல அவருடைய உதவியாளர்களிடம் தலையைக் கொடுக்க மாட்டேன் வரிசையில் உட்கார்ந்திருக்கும் வாடிக்கைக் காரர்களுடன் என் முறைக்காகக் காத்திருப்பேன். ரோனியிலே எனக்குப் பிடித் தது அவசரமின்மை. நிதானமாகத் தொழில் சுத்தமாக வேலையை முடிப்பார். எப்படி வெட்ட வேண்டும் என்று கேட்க மாட்டார். என்ன சைஸ் கிளிப் என்று கேட்க மாட்டார். பிடரியில் நேர் வெட்டா அல்லது குறை வெட்டா என்றெல்லாம் கேட்கமாட்டார். ஒவ்வொரு வாடிக்கைக் காரருக்கும் அவரிடம் குறிப்பு உண்டு. தையல்காரரிடம் இருப்பதுபோல மருத்துவரிடம் இருப்பதுபோல. அதைப் பார்த்து தன் வேலையைச் செம்மை யாக முடித்துவைப்பார்.

அவரிடம் எனக்குப் பிடிக்காத ஓர் அம்சமும் இருந்தது ரோனி விளையாட்டு பிரியர். அவர் தலைமுடி வெட்டும் போது நேற்று நடந்த ஐஸ் ஹாக்கி பற்றி அல்லது கூடைப் பந்து அல்லது பேஸ்போல் பற்றி ஓயாது பேசுவார். விளையாட்டைப் பற்றி தெரியாது என்று சொன்னால் கனடாவில் ஒரு புழுவைப் பார்ப்பதுபோல பார்ப்பார்கள். ஆகவே, முதல் நாள் நான் அதற்குத் தயராகவேண்டும். தொலைக் காட்சியில் விளையாட்டுகளைப் பார்த்து முக்கியமான குறிப்புகளை எடுத்து வைத்துக்கொள்வேன். அடுத்த நாள் முடி திருத்தும் போது ஏதாவது ஒரு குறிப்பிட்ட சம்பவத்தைச் சொல்லி அவரை மகிழ்விப்பேன். அன்று முடி வெட்டு உத்தமமாக அமையும்

ஆனால், எத்தனை வருடங்கள் தான் இந்த நாடகத்தை ஆட முடியும். எனக்கும் அலுப்புப் பிடித்தது. நான் வேறு இடத்தில் முடி வெட்ட ஆரம்பித்தேன், அது 20 நிமிட தூரத்தில் இருந்த பெரிய நிலையம். பெண்கள் பகுதி தனியாக இயங்கியது வருவதும் போவதுமாக ஒரே கலகலப்பு, நான் வாயே திறக்காத ஒரு வேலைக்காரரிடம் போகலாம் என்ற முடிவில் இருந்தேன். என்னுடைய முறை வந்தபோது, புதன்கிழமை என்ற வார் எழுதிய தடித்த உடையை வியாழக்கிழமை அணிந்திருந்த வயதுக்காரர் ஒருவர் என் முடியை வெட்டத் தயாராயிருப்பதாகச் சொன்னார். ஒரு நாள் பிந்திய ஆள் என்றாலும் அவர் தலையைச் சரித்து புன்னகைத்த விதம் எனக்குப் பிடித்துக்கொண்டது

அவர் வாய் திறந்து ஒரு வார்த்தை பேசவில்லை . கருமமே கண்ணாகி அவர் முடியை வெட்டி முடித்ததும் கண்ணாடியில் பார்த்தால் அது வெகு நேர்த்தியாக இருந்தது. ஒரு கலைஞனின் வேலை என்பதில் சந்தேகமே இல்லை.



அவருடைய கைகள் வண்ணத்துப் பூச்சி போல துரிதமாக இயங்கின. தலையிலே ஆடிக் கொண்டிருக்கும் ஆயிரம் முடிகளில் ஒரு மயிரை மட்டும் அவர் கத்தரிக்கோல் தேடி லாவகமாக வெட்டும். அவ்வளவு நுட்பமான கலைஞன்

அடுத்த முறையும் அவர்தான் வெட்டினார். அதற்கு அடுத்த முறை சென்றபோது அவருக்காகக் காத்திருந்து அவர் முடிவெட்ட ஆரம்பித்த போது ஒரு சம்பவம் நடந்தது. முடி திருத்துபவரைப் பார்த்தால் மத்திய கிழக்கு நாட்டைச் சேர்ந்தவர் போலத் தோற்றமளித்தார். கண்கள் பழுப்பு நிறத்தில் முடி கறுப்பாகவும் இருந்தது. அவருடைய நடை உடை பாவனைகள் எல்லாம் வித்தியாசமாகவே தோன் றின. வாடிக்கை காரர்களிடம் பேசும் போது அவருடைய உச்ச ரிப்பு அரேபியர்களுடையதைப் போல இருந்ததையும் கவனித்தேன்

அன்று பெண்கள் பகுதியில் இருந்து மிக நாகரிகமாக உடையணிந்திருந்த ஒரு பெண் இவரிடம் வந்தாள். கறுப்பு காலணியும் சிவப்பு கையுறையுமாக பார்த்தவுடனேயே அவள் அரேபியப் பெண் என்று சொல்லிவிடலாம். வயது முப்பதுக்குள் தான் இருக்கும். அதிகாரம் செய்தே பழக்கப்பட்டவள் போல ஒரு கையை இடுப்பில் வைத்து சாய்ந்து நின்றாள். ஏதோ அரபு போன்ற மொழியில் அவரிடம் வேகமாக பேச அந்த மனிதர் ஒரு வார்த்தையில் ஏதோ சொன்னார். அந்த பெண் மீண்டும் சங்கிலித் தொடர்போல திறக்காமல் பேசினாள். அவர் மறுபடியும் சுருக்கமாகப் பதில் கூறினார். அவள் தொடர்ந்து ஏதோ கேட்க 'உனக்கு கேட்க வில்லையா? எனக்கு அரபு மொழி தெரியாது என்று உரத்து பதில் சொன்னார். ஒரு குதிரை பக்க வாட்டில் நகர்வது போல அவள் நகர்ந்து சற்று எரிச்சலாகவே அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

**பத்து மில்லியன் மக்கள் ஒரு மொழியைப் பேசினாலும் அவர்களுக்கு ஒரு நாடு இல்லா விட்டால் அந்த மொழி அழிந்துவிடும்**

எல்லோரும் இவரையே பார்த்தார்கள். இவர் ஒருவித பதற்றமும் இன்றி முன்பு போல அமைதியாக என் முடியை வெட்டிக் கொண்டிருந்தார். நான் முதன்முதலாக இவரிடம் பேச்சுக் கொடுத்தேன். இவர் ஈராக்கில் இருந்து போருக்கு முன்னர் சதாம் காலத்தில் கனடா வுக்கு குடிபெயர்ந்தவர். அந்தப் பெண் தலை முடியலங்காரம் செய்ய வந்திருக்கிறாள். அவளுக்கு ஆங்கி லம் தெரியாது. அவள் பேசும் அரபு மொழிபெயர்த்து ஆங்கி லத்தில் கூறுமாறு கேட்டிருக்கிறாள். இவர் தனக்குத் தெரியாது என்று சொல்லியிருக்கிறார். ஈராக்கில் இருந்து புலம்பெயர்ந்த ஒருவருக்கு அரபு மொழி தெரியாது என்பதை அவள் நம்பவில்லை . அதுதான் கோபமாகச் செல்கிறாள்.

எனக்கு ஆச்சரியம். நான் வாழ்நாளில் சந்திக்கும் முதல் ஈராக்கியர் இவர்தான். ஆதி காவியமான கில்காமேஷ் இலக்கியம் பிறந்த நாடு என்று எனக்கு ஈராக்கில் மதிப்பு உண்டு. நாலாயிரம் வரு டங்களுக்கு முன்பு சுமேரிய எழுத் தில் எழுதிய அந்தக் காவியம் இன் றும் களிமண் தட்டைகளில் அங்கே பாதுகாக்கப்படுகிறது.

நான் அவரிடம் கேட்டேன். 'எப்படி உங்களுக்கு அரபு மொழி தெரியாமல் போனது...?''

''நான் ஈராக்கில் பிறந்தாலும் அநேகமாக வெளிநாடுகளில் வளர்ந்தேன். என்னுடைய தந்தையார் ஈரான், சிரியா போன்ற நாடுகளில் வேலை செய்தார். நான் பொறியியல் படிப்பு படித்தவன். ஈரா க்கில் தொடர்ந்து வாழ முடியாமல் தஞ்சம் கேட்டு கனடாவுக்கு வந்தோம். என் மகன் இப்போது வெளிநாட்டில் வேலை செய்கிறான். நான் இங்கே தனியாகத்தான் வாழ்கிறேன்.''

''பொறியியல் படித்துவிட்டு எப்படி இந்தத் தொழிலுக்கு வந்தீர்கள்?''

''நான் மாத்திரமில்லை. என்னைப் போல பலபேர் இங்கே வந்து முற்றிலும் வேறு வேலை செய்கி றார்கள். ஆங்கிலத்தில் இன்னொரு முறை பொறியியல் படிக்க என்னால் முடியவில்லை. ஆனால், எனக்கு இந்தத் தொழிலில் ஒரு மோகம் என்று சொல்லலாம். மூன்று மாத பயிற்சியில் முடிவெட்டப் பழகி விட்டேன் இதுவும் பொறியியல் போல தான். மிகப்பெரிய கலை, ஒவ்வொரு நாளும் நான் வீட்டுக்குப் போக முன்னர் ஒரு புது விஷயம் கற்றுக் கொண்டு போறேன்''

என்னால் நம்ப முடியவில்லை இந்த மனிதரை அதிசயத் தோடு பார்த்தேன். இனிய புன்னகை மாறாமல் தொழிலில் கவனமாக இருந்தார். 'நீங்கள் இன்னும் ஆரம்பக் கேள்விக்கு பதில் சொல்லவில்லை. நீங்கள் என்ன மொழி பேசுவார்கள்? என்றேன்.

நான் படித்தது பாரசீக மொழி. அது தொழிலுக்காக, வீட்டு மொழி அராமிக்; அராமிக்கா? கேள்விப் பட்டதில்லையே அப்படி ஒரு மொழி இருக்கிறது. என் மகனுக்கும் கொஞ்சம் தெரியும். என் மனைவியும் நானும் வீட்டிலே அதுதான் பேசுவோம். போனவருடம் என் மனைவி இறந்துவிட்டார். எனக்கு இங்கே என் மொழி பேசுவதற்கு ஒருவருமே இல்லை. கனடாவில் இந்த மொழி பேசுபவர்கள் சிலர் இருப்பதாகக் கேள்வி. ஆனால், அவர்களுடன் என்னால் தொடர்பு கொள்ள முடியவில்லை

அராமிக் மொழி பேசும் நாடு என்று ஏதாவது உண்டா

அப்படி இருந்தால் அது பெரிய வரம் அல்லவா? நான் **Syrian Irthidix Church**ஐ சேர்ந்த கிறிஸ்தவன். சதாம் ஆட்சியில் நாங்கள் பட்ட கொடுமைகளைச் சொல்லி ஆற்ற முடியாது. உலகத்தில் இன்று ஒரு மில்லியன் மக்கள் அராமிக் மொழியைப் பேசுகிறார்கள். ஆனால், துயரம் என்னவென்றால், அவர்கள் ஓர் இடத்தில் இல்லை. அவர்களுக்கு ஒரு நாடு இல்லை. சிதறிப்போய் ஈரான், ஈராக், இஸ்ரேல், லெபனான், சிரியா போன்ற பல நாடுகளில் சிறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு குழுக்களாக வாழ்கிறார்கள். அவர்கள் எங்கே வாழ்ந்தாலும் அவர்கள் ஒடுக்கப்பட்ட மக்கள் தான். உலகத் துக்கு முதன்முதலாக சட்டத்தொ குப்பை வழங்கியவன் 3700 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த எங்கள் மன்னன் ஹமுராபி. ஒடுக் கப்பட்டவர்களைக் காப்பதற் குத் தான் அவர் சட்டம் இயற்றினார்

இன்று நாங்கள் ஒடுக்கப்பட்டு, துரத்தப்பட்டு, நாடு நாடாக அலைந்து கொண்டிருக்கிறோம்.

"கனடா நீங்கள் தேர்ந்தெடுத்த நாடுதானே. இங்கே உங்களுக்கு முழுச் சுதந்திரம் உண்டல்லவா?"

நண்பரே, இது சொர்க்கம். இதில் என்ன சந்தேகம். இங்கே வந்த பின் நான் நினைத்தேன் ஒடுக்கப் பட்ட நாடுகளைச் சேர்ந்த ஒவ்வொ ருவரும் ஒரு ஒரு நாள் என்றாலும் கனடாவில் வாழ்ந்து பார்க்க வேண் டும் என்று. அப்போதுதான் அவர்க ளுக்கு சுதந்திரக் காற்று என்பது என்னவென்று தெரியவரும். நான் சொன்னது எங்கள் மொழியை. இன்று அது அழிந்து கொண்டு வரு கிறது. எங்கே எங்கேயெல்லாம் எம் மக்கள் வாழ்கிறார்களோ அங்கே யெல்லாம் எங்கள் மொழி விழுங் கப்படுகிறது ஆபத்தில் இருக் கும் மொழி என்று எங்கள் மொழியை அறிவித்து விட்டார்கள். இன்னும் சில வருடங்களில் அது அழிந்து போகக் கூடும்.

**அப்படி நிச்சயமாகச் சொல்ல முடியுமா?**

அப்படித்தான் அறிவித்திருக்கிறார்கள் நீங்கள் இரவு நேரத்தில் என் வீட்டுக்கு வந்தால் நான் அராமிக் புத்த கங்களைப் படித்துக்கொண்டிருப்பதைப்பார்ப்பீர்கள். சுவர்களுடன் அராமிக்கில் பேசுவேன். பழக்கம் விட்டுப் போய்விடுமே என்ற பயம். நான் பேசும் ஒவ்வொரு நிமி டமும் என் மொழி வாழ்ந்து கொண்டிருக்கிறது இப்பொ ழுது அவர் முடி வெட்டுவதை நிறுத்திவிட்டார்

சற்று எட்ட நின்று தலையை இரண்டு பக்கமும் சரித்து என் முடியை உன்னிப்பாகக் கவனித்தார். பின்னர் முகத் தைப் பார்த்தார். திடீ ரென்று 'ஷாம்பு போட வா?' என்றார். நான் சம்பாஷணை தொடர வேண்டும் என்பதில் ஆவலாயி ருந்தேன். சரி என்று தலையாட்டினேன்

நான் நிறையப் பேசிவிட்டேன் நீங்கள் எந்த நாடு, என்ன மொழி பேசுவீர்கள் என்று சொல்லவில் லையே ?

நான் சொன்னேன். நானும் உங்க ளைப் போலத்தான். நான் பேசுவது தமிழ் மொழி. இலங்கைக்காரன். அங்கே எங்கள் மொழியை சிங்க ளம் விழுங்கிக் கொண்டிருக்கிறது.

உங்கள் மொழியைப் பற்றிக் கேள் விப்பட்டிருக்கிறேன் அது பழைய மொழி அல்லவா?' அது உண்மை. இரண்டாயிரம் ஆண்டு கள் தொன் மையான இலக்கியங்கள் எங்களிடம் இருக்கின்றன. கிறிஸ்து பிறப்பதற்கு 300 ஆண்டுகள் முன்பாகவே செதுக் கிய தமிழ் பிராமிக் கல்வெட்டுகள் குகைகளில் அகப்பட்டிருக்கின்றன. இன்று உலகத்தில் பல நாடுகளில் 80 மில்லியன் மக்கள் தமிழ் பேசுகி றார்கள்

எண்பது மில்லியன்?

நம்பவே முடியவில்லை. எங்கள் மொழியில் பார்க்க 80 மடங்கு அதிகமான எண்ணிக்கை. அதிர்ஷ் டம் செய்த மொழி. ஆனால், உங்க ளுக்கென்று ஒரு நாடு உண்டா?

'இல்லை'

உங்கள் மொழியில் தேசிய கீதம் உண்டா?

'இல்லை'

அப்படியானால் உங்கள் மொழிக் கும் என் மொழி பெரிய வித்தி யாசமே இல்லை

அப்படி அவ்வளவு நிச்சயமாகச் சொல்ல முடியும்?

நீங்கள் வரலாற்றைப் படித்தால் தெரிந்துவிடும். கிறிஸ்து பிறப்பதற்கு 1000 ஆண்டுகளுக்கு முன்னரே ஹீப்ரு மொழியும் அராமிக் மொழி யும் செழித்து வளர்ந்தன. இரண்டுக் குமே சம வயது. இரண்டிலுமே எழுதப்பட்ட செல்வங்கள் இன்று வரை பாதுகாக்கப்பட்டு வருகின் றன. நாளடைவில் இரண்டு மொழிக ளுமே நலிந்தன. 100 வருடங்க ளுக்கு முன் ஹீப்ரு மொழி எழுத் தில் மட்டுமே வாழ்ந்தது. பேசுவ தற்கு ஓர் ஆன்மா இல்லை இன்று ஐந்து மில்லியன் மக்கள் ஹீப்ரு பேசுகிறார்கள். எழுதுகிறார்கள். பழைய இலக்கியங்களும் புதிய இலக்கியங்களும் படிக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு நாடு உண்டு. அதன் பெயர் இஸ்ரேல் அவர்களு டைய மொழி இனிமேல் அழியவே அழியாது

'நாடு இல்லாமல் ஒரு மொழி வாழமுடியாது என்று சொல்கிறீர் களா?

நான் ஒரு தலை முடி திருத்துப வன். மொழியியல் அறிஞன் அல்ல. எனக்கு என்ன தெரியும்? நாடு இல்லாமல்தானே என் மொழி சிதைந்தது. நாடு இருந்தபடியால் தானே இறந்து போன ஹீப்ரு மொழி மறுபடியும் உயிர்பெற்று நிலைத்து நிற்கிறது. உங்கள் மொழி தமிழ்நாடு இல்லாமல் வாழும் என்று நினைக்கிறீர்களா ?

ஆனால், இந்தியாவில் ஒரு தமிழ் மாநிலம் இருக்கிறது.'

மாநிலம் வேறு. நாடு வேறு. இன்று உலகத்திலுள்ள ஒரு சின்னஞ் சிறிய நாட்டை எடுத்துக் கொள்ளுங் கள். மால்ட்டா அங்கே 400,000 மக்கள் வாழ்கிறார்கள். அவர்களு டைய மொழி மால்டீஸ். அந்த மொழி அழியுமா? அழியாதா. ஒரு மைல்கல் எப்போதும் உண்மை பேசுவது போல நான் பேசுகிறேன். அவருடைய மொழி அழிய வேண் டும் என்றால் முதலில் அந்த நாடு அழிய வேண்டும். உங்கள் நாட்டிற் குச் சமீபத்தில் இருக்கும் மாலைதீவு, அதை எடுத்துக்கொள் ளுங்கள். அதனுடைய சனத்தொகை 3,50,000. அவர்களுடைய மொழி திவேஹி. அது அழியுமா? எப்படி அழியும்? 3,00,000 மக் கள் வாழும் நாடு ஐஸ்லாண்ட். அவர்களு டைய மொழி ஐஸ்லாண் டிக். அது அழியுமா இல்லை. இப்படிச் சொல் லிக் கொண்டே போக லாம்.

நம்புவதற்கு கஷ்டமாக இருக்கிறது. பத்து மில்லி யன் மக்கள் ஒரு மொழி யைப் பேசினாலும் அவர்க ளுக்கு ஒரு நாடு இல்லா விட்டால் அந்த மொழி அழிந்துவிடும் என்று சொல்லுகிறீர்களா?

ஷாம்பூ போட்டு முடிந்த தும் அவர் முடி உலர்த்தி யால் தலைமுடி யைச் சீவி உலர்த்திக் கொண்டி ருந்தார். அவர் வாய் மட் டுமே பேசியது, ஆனால், கைகள் வேறு யாருடை யவோ கைகள் போலத் துரிதமாக வேலை செய்தன.



அப்படித்தான் என் சிற்றறிவுக்குப்ப டுகிறது. ஒரு மொழிக்குப் பாது காப்பு வேண்டும். ஒரு நாடுதான் அதைக் கொடுக்க முடியும்

உலகத்தில் 7000 மொழிகள் இருக் கின்றன என்று படித்திருக்கிறேன் அவற்றிலே 2000 மொழிகள் அழிவில் இருக்கின்றன. மீதியில் ஒருநாடு பாதுகாப்புக் கொடு க்க முடியாத மொழிகள் எல்லாம் ஒவ்வொன்றாக அழிவை நோக்கி நகர்கின்றன. அனைத்து மொழிகளையும் காப்பாற்ற முடியா விட்டாலும் அவற்றைச் சேமிக்க வேண்டும். ஆவணப் படமாகவும் ஒலி வடிவமாகவும் கணிமைத் தொழில்நுட்பத்தில் பாது காக்கலாம். ஒரு மொழி அழிவது என்பது ஓர் இனம் அழிவதற்கு, ஒரு கலாசாரம் அழிவதற்குச் சமம்.

கீழேவிழுந்த முடியை திரும்பவும் ஒட்டமுடியாது. மொழியும் அப்ப டித்தான். பூமியிலிருந்து ஒரேடியாக மறைந்துவிடும்.

நான் பேசமுடியாமல் அவரையே பார்த்தேன்

ஒரு மொழியின் எதிர்காலத்தை அதைப் பேசும் மக்களின் எண் ணிக்கை தீர்மானிப்பதில்லை. அது போல அதன் வளர்ச்சிக்கும் எண்ணிக் கைக்கும் சம்பந்தமில்லை. ஒரு சின் னப் பாரிசோதனை. உங்கள் நாட்டு சிங்கள மொழியின் கடந்த 50 வருடகால வளர்ச்சியுடன் தமிழ் மொழியின் ஐம்பது வருட வளர்ச்சி ஒப்பிட்டுப் பாருங்கள். நான் சொல்வது உங்க ளுக்கே புரியும்

புதிய முடி அலங்காரத்தை நான் கண்ணாடியில் பார்த்தேன். திருப்தியாக இருந்தது. காசாளரிடம் பணத்தைக் கட்டினேன் ஈராக்கிய நண்ப ரின் பெயரைக் கூட நான் இதுவரை தெரிந்திருக்க வில்லை.

அது முக்கியமாக வும்படவில்லை எனக்கு கவியின் வரி கள் ஞாபகத்துக்கு

'நான் சாக்கடையில்
விழுந்து கிடக்கிறேன்
என் கண்கள்
நட்சத்திரங்களில்'

நான் என் மொழி மீது வைத்த நம் பிக்கையைத் துறக்க தயாராக வில்லை

அவர் என்னை மூடியிருந்த போர்வை யைக் கையிலே விரித்து பிடித்தபடி ஒரு மாட்டுச் சண்டைக் காரர் போல நின்றார். தத்தம் மொழி களை இழந்து கொண்டு வரும் இரு வரையும் ஒரு போர்வை பிரித்தா லும் அவர் வேதனையும் இழப்பும் துயரமும் என்னுடையது போலவே இருந்தது. எப்படி இவரிடம் விடை பெறுவது என்பது எனக்குத் தெரிய வில்லை . ஒருவர் அந்தச் சமயத் தில் எதைச் சொல்லக் கூடாதோ அதைச் சொன்னேன்.

நண்பரே, அழிவை நோக்கி பய ணிக்கும் ஒரு மொழியை நிறுத்த தனி மனிதர் ஒன்றுமே செய்யமுடியாது. இன்றிரவு சுவருடன் உங்கள் உரையா டல் இனிமையாக அமையட்டும்.

என்ன, அப்படிச் சொல்லிவிட் டீர்கள். ஒரு மொழியை அழிய விட்டுவிடுவோமா? இது இயேசு பேசிய மொழி அல்லவா.

நான் திடுக்கிட்டேன்.. கடந்து போன பிறகு முடிவெட்டு நிலையக் கதவுகள் நெடுநேரம் ஆடின.

**நான் பேசுவது தமிழ் மொழி. இலங்கைக்காரன். அங்கே எங்கள் மொழியை சிங்களம் விழுங்கிக் கொண்டிருக்கிறது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலனத்தின் புதுக்கொள்கை...!

புலனம் என்கிற ''வட்ஸ் அப்'' செயலியின் பயனர்கள் அதிகரித்திருக்கின்ற சூழலில் தன்னில் பல மாற்றங்களையும் மேம்படுத்தல்களையும் செய்கிறது அது. அதன்படி, அது புதிய கொள்கைகள் சிலவற்றை வரும் வைகாசி மாதம் 15ஆம் திகதியன்று நடைமுறைக்கிடுகிறது. அதற்குள் ''வட்ஸ் அப்'' பயனர்கள் ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும். அதாவது ''வட்ஸ் அப்'' அறிவித்திருக்கின்ற இற்றைப்படுத்தலுக்கு (பிரைவெசி செற்றிங்ஸ் அப்டேட்) எதிர்வரும் வைகாசி மாதம் 15ஆம் திகதிக்குள் சம்மதித்துச் செயற்படுத்த வேண்டும். அப்படி இல்லையெனில் ''வட்ஸ் அப்''பின் சேவைகளைப் பயன்படுத்த முடியாதுபோகலாம்...!

இந்தப் புதிய கொள்கையின்படி, பயனாளிகள் வழங்கும் கைபேசி இலக்கம், பெயர், ஒளிப் படங்கள் சேகரிக்கப்படும். ஒருவருக்கு அனுப்பியும் அவரால் பார்க்கப்படாத செய்திகள் 30 நாள்கள் வரையே வைத்திருக்கப்படும், அதன் பின் அவை அழிக்கப்படும். அத்தோடு பயனர்களின் தொடர்புகள், பணப்பரிமாற்றத் தரவுகள், பணச் செலுத்தல் விவரங்கள் -முறை, போன்றவைகளும் சேகரிக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

அத்தோடு, ஐ.பி. முகவரி, மின்கலத்தின் கொள்திறன் அளவு, சமிக்ஞை வலிமை, பயன்படுத்தும் செயலியின் பதிப்பு (வேர்ஷன்), மொழி, நேரம், தொலைத்தொடர்பு சேவையை வழங்கும் நிறுவனங்களின் பெயர் விவரம் போன்றவை சேகரிக்கப்படும் என்கிறது இந்தக் கொள்கை.

அத்தோடு பயனர்கள் வெறுமனே தாம் பயன்படுத்திய ''வட்ஸ் அப்'' கணக்கை அழித்தாலும் அவர்களின் தரவுகள் வட்ஸ் அப், நிறுவனத்திடம் இருக்கும். வட்ஸ் அப், முகநூல் நிறுவனங்களின் அலுவலகங்கள் எங்கெல்லாம் இருக்குமோ அங்கெல்லாம்கூட தரவுகள் பரிமாற்றம் செய்து கொள்ளப்படும் என்றெல்லாம் கூறப்பட்டிருக்கிறது. எனவே இதற்குச் சம்மதிப்பவர்கள் மாத்திரம் இனி இந்த சேவையைப் பயன்படுத்தலாம்.

பயன்படுத்தவேண்டும் என்று கட்டாயமில்லை. ஆனால், வைகாசி 15க்குள் இந்தப் புதுக்கொள்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏற்றுக் கொள்ளவில்லை எனில், ''வட்ஸ் அப்'' கணக்கு அழிக்கப்படாது ஆனால் அதன் முழு சேவையையும் பயன்படுத்த முடியாது. சில காலத்துக்கு மட்டுமே அழைப்புகளைப் பெற முடியும். ஒருவேளை கணக்கை நீங்கள் அழித்துவிட்டால், உங்கள் பதிவுகள் அனைத்தும் அழிந்துவிடும் அவ்வளவுதான்.






# குதிப்பு மீன் குழம்பு

ஆங்கிலத்தில் ''றபிற் பிஷ்'' (முயல் மீன்) என்றழைக்கப்படுகின்ற ஓரா மீன் குழம்பின் ருசி பலருக்கும் பழக்கப்பட்ட ஒன்று. ஓரா மீனில் அரைத்த குழம்பு வைக்கும்போது அந்த ருசி இன்னமும் அதிகப்படுவதும் தெரிந்ததே. அதே ஓரா மீன் வகையைச் சேர்ந்த குதிப்பு மீனில் வைக்கப்படுகின்ற குழம்பு இவை இரண்டையும் விட உச்சமானது, அலாதியானது. மழைக் காலத்தில் ஆழ்கடலில் விளைகின்ற தசைகள் முறுகலாகும் அதிகம் பிடிபடுகின்ற குதிப்பு மீன்களின் வகையில் சமைக்கப்படுகின்ற இந்தக் குதிப்பு மீன் குழம்பின் ருசி பலரும் அறியாதது. அத்தகைய குதிப்பு மீன் குழம்பைச் சமைத்தெடுப்பது எப்படி என்று இந்த முறை பார்ப்போம்.



**தேவையான பொருள்கள்...**

குதிப்பு மீன்கள் 4, தேங்காய்ப்பால் 2 டம்ளர்கள், சின்ன வெங்காயங்கள் 10, புளி 25 கிராம். தேங்காய் என்ணெய், கறிவேப்பிலைகள் ஆகியன தேவைக்கேற்ப. இவற்றோடு அம்மியில் அரைத்தெடுப்பதற்கு, செத்தல் மிளகாய்கள் 10, மல்லி 25 கிராம், உள்ளி 5 பற்கள், மிளகு 6 அல்லது 7. இஞ்சி, சீரகம், மஞ்சள், வெந்தயம், பெருஞ்சீரகம் ஆகியன சிறிதளவு, உப்பு தேவைக்கேற்ப.

**எப்படிச் சமைப்பது...?**

முதலில் மீன்களை வெட்டிக் கழுவிச் சுத்தப்படுத்தி அவற்றை ஒரு சட்டிக்குள் போட்டு உப்புத் தூவி வைத்துக்கொள்ளுங்கள். கறி சமைப்பதற்குரிய சட்டியை அடுப்பில் வைத்து தேங்காய் எண்ணெய்யை ஊற்றுங்கள். நறுக்கிய சின்ன வெங்காயங்கள், பெருஞ்சீரகம், வெந்தயம் ஆகியவற்றை எண்ணெய்யில் சேர்த்து நன்கு வதக்குங்கள். வதங்கிய வாசனை வரும்போது அதனுடன் மீன் துண்டுகளைப் போடுங்கள். கையோடு அம்மியில் அரைத்து வைத்திருக்கின்ற கலவையைப் பாலுடன் சேர்த்துக் கரைத்து மீனுடன் சேருங்கள். அப்போதே புளியையும் கரைத்து விடுங்கள். சட்டிக்குள் இட்ட இத்தனையும் நன்கு கொதித்ததும் கறிவேப்பிலைகளைத் தூவி இறக்குங்கள். சுவையான குதிப்பு மீன் குழம்பு தயார். ஆனால் இத்தகு ருசிதரும் குதிப்பு மீன்கள் கிடைப்பதற்கு நீங்கள் வருட இறுதிவ்ரைக் காத்திருக்க வேண்டும்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்மவூர் சுத்துமாத்து...!

# கொடுத்த காசைத் திருப்பிக் கேட்டது குற்றமா...?

நீர்வேலியிலிருந்து குகராசா



இரண்டு வருடங்களுக்கு முன்னர் நானும் எனது நண்பர் ஒருவரும் மோட்டார் சைக்கிளில் பருத்தித்துறை வீதியால் யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தோம். பகல் 11 மணியிருக்கும். கட்டப்பிராய்ப் பகுதியில் நாம் சென்று கொண்டிருந்தபோது எமக்கு முன்னால் வயதான அம்மா ஒருவரை ஏற்றிக்கொண்டு இன்னோர் மோட்டார் சைக்கிள் சென்றுகொண்டி ருந்தது. அப்போது யாழ்ப்பாணப் பக்கமிருந்து வந்து கொண்டிருந்த வெள்ளைநிற வான் ஒன்று அந்த மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வர்களின் பக்கம் சென்று வெட்டித் திருப்பியதைக் கண்டோம்.

அந்த வானில் இருந்து 3 பேர் குதித்தார்கள். நாங்கள் விபத்து ஏதேனும் நடந்து விட்டதோ என்று யோசிப்பதற்குள் எமக்கு முன்னால் சென்றுகொண்டிருந்த அந்த மோட்டார் சைக்கிளை வானிலிருந்து இறங்கியவர்களில் ஒருவர் உதைத்துவிழுத்தினார். மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற ஐயாவை வீதிக்கு அருகிலிருந்த மதிலுடன் சாத்தி மற்றைய இருவரும் அவருக்கு அடிப்பதைக் கண்டோம்.

உடனே நாங்கள் இருவரும் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு ‘‘ஏன்ரா அடிக்கிறியள்?’’ என்று சத்தம் போட்டுக் கொண்டு ஓட வானில் வந்த மூவரும் வானில் ஏறி ஓடி விட்டார்கள். அடிபட்டவரின் முகத்தில் இருந்து குருதி வழிந்து கொண்டிருந்தது. அவரை வீதிக்குக் கூட்டி வந்து என்ன நடந்தது என்று கேட்க, ‘‘இவருக்கு அடித் தவனுக்கு 5 லட்சம் ரூபா கடனாகக் கொடுத்திருந்தோம். அந்தக் காசைத் திருப்பிக் கேட்டதற்குத்தான் இந்த அடி’’ என்று கண்ணீர்விட்டழுதார் அந்த வயதான அம்மா.

இதுபோன்ற பல சம்பவங்கள் நண்பர்கள் என்று புழங்கியவர்களால் சாதாரண மக்கள் பலருக்கு ஏற்பட்டிருக்கின்றன. இது தமிழ் மக்களிடம் இருந்த நாணயம், நம்பிக்கை, நேர்மை, அறம் எல்லாமே இல்லாதுபோய்விட்ட தற்கான ஓர் அடையாளமாகவும் தமிழ் மக்கள் மத்தியில் எழுச்சி அடைந்துள்ள சுத்துமாத்தை யுமே காட்டுகிறது. இந்த மோட்டார் சைக்கிள் சம்பவத்தை இப்போது நினைத்தாலும் எனக்கு வேதனையாகவே இருக்கிறது.

இதுபோன்ற அனுபவங்கள் உங்களுக்கும் இருந்தால் அதை உங்களுடன் மட்டும் வைத்துக்கொள்ளாமல் எமக்கும் அனுப்பி வையுங்கள்.

# செயற்கைக்கு மவுசு...!



புறோயிலர் எனப்படுகின்ற இறைச்சிக்காக வளர்க்கப்படுகின்ற கோழிகளை உண்பதால் உடல் நலத்துக்குக் கேடு என்றிருந்து வந்த பேச்சுப் பெருந்தொற்றுக்குப் பின்னர் வலுவானது. இதனால் புறோயிலர் கோழி விற்பனை படுத்தேபோனது. ஆனாலும் அது பின்னர் மெல்ல மெல்ல எழுந்து இப்போது மீண்டும் இயல்புக்குத் திரும்பிவிட்டது.


புறோயிலர் கோழியால் பாதகங்கள் பல என்று வாதிடுபவர்களைப்போலவே அவ்வாறில்லை என்று வாதிடுபவர்களும் இருக்கிறார்கள். எது எப்படியாவது இருக்கட்டும் நமக்கு எந்தக் காலத்திலும் நாட்டுக் கோழி இறைச்சிதான் தேவை - ஊர்க் கோழிச் சேவல் இறைச்சியின் சுவைக்கும் ருசிக்கும் எவற்றாலும் ஈடாக முடியாது, ஆரோக்கியத்திலும் அதுதான் முதலிடம் என்றுரைக்கிற என்போன்றவர்களும் இருக்கிறார்கள். இப்போது இது அல்ல விடயம். இதைத் தாண்டியும் செயற்கையாக உருவாக்கப்பட்ட இறைச்சியால் ஈர்க்கப்பட்ட சிங்கப்பூர் வாசிகளைப் பற்றிய விடயதானமே இது.

செயற்கையாக உருவாக்கப்படுகின்ற ஒரு வகை இறைச்சிக்கு உலகு முழுதும் பெரும் கேள்வி இருந்தாலும் சிங்கப்பூரில் அதன் விற்பனை அதிகரித்திருப்பது பதிவாகியுள்ளது. சுற்றுச் சூழலுக்குச் சிறந்தது என்று சொல்லிக்கொண்டு உடலுக்குத் தீங்களிக்கின்ற செயற்கை இறைச்சியை உண்கிறார்கள் என்று சிங்கப்பூர்வாசிகளைப் பலரும் கடியவும் தொடங்கியிருக்கிறார்கள்.

விலங்குகளைக் கொல்லாமல் தயாரிக்கப்படுகின்ற இந்தச் செயற்கை இறைச்சி விற்பனையை 2020ஆம் ஆண்டில்தான் சிங்கப்பூர் அறிமுகப்படுத்தியது. ஆனாலும் தற்போது அதனால் ஈர்க்கப்பட்டுவிட்டவர்கள் அதிகம். அதாவது புறோயிலர் கோழிகள் பிடித்துப்போன நம்மவர்களைப்போல சிங்கப்பூரில் செயற்கை இறைச்சி பிடித்துப்போக அந்த இறைச்சிக்கு அதிக மவுசு ஏற்பட்டுள்ளது.

இயற்கையாகக் கிடைக்கின்ற விலங்கிறைச்சியைவிட அதிக விலையுள்ள இந்தச் செயற்கை இறைச்சியை அதிகளவானோர் நாடுவதுதான் தற்போது ஆச்சரியமளிக்கிறது. விலை அதிகமானாலும் பரவாயில்லை என்றுகூறிவிட்டு அதிக பணம் கொடுத்துப் பலரும் வாங்கிச் செல்லும் நிலை இந்தச் செயற்கை இறைச்சிக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஆய்வகத்தில் வளர்க்கப்படுகின்ற பறவைகள் விலங்குகளின் செல்களே இந்த இறைச்சியாதலால் இந்த இறைச்சியின் விலையும் அதிகம். இலங்கை நாட்டைச் சிங்கப்பூரைப்போல மாற்றத் துடிக்கும் நம்மவர்களும் வருங்காலத்தில் இந்தச் செயற்கை இறைச்சிப் பிரியர்கள் ஆகலாம்...!





# ஸ்ருதிக்கு வந்த ஆசை...!

நடிகர் கமல்ஹாசனின் புதல்வி ஸ்ருதிஹாசன். பல முன்னணி நடிகர்களுடன் பல படங்களில் நடித்துத் தனது நடிப்பால் பலரையும் ஈர்த்தவர். அவருக்கென்று தனியான ரசிகர் பட்டாளத்தையும் உருவாக்கி வைத்திருக்கிறார். அவர் தற்போது மறைந்த இயக்குநர் எஸ்.பி.ஜனநாதன் இயக்கத்தில் விஜய் சேதுபதியுடன் ‘லாபம்’ படத்தில் நடித்து முடித்துள்ளார். இந்தப் படம் விரைவில் திரைக்கு வரவுள்ளது. இது தவிர பிரபாஸ் நடிக்கும் ‘சலார்’ படத்திலும் நாயகியாக நடித்து வருகிறார். இந்த நிலையில் தனது ஆசை ஒன்றைப் போட்டுடைத்துள்ளார் ஸ்ருதி. அதாவது கவிதைகள், கதைகளை எழுதும் பழக்கம் கொண்ட அவர் தனது அந்தப் படைப்புகளுக்குத் திரைவடிவம் கொடுக்க ஆசைப்படுவதாகக் கூறியிருக்கிறார். ‘‘எழுதுவது எப்போதுமே எனக்குச் சுதந்திரத்தைக் கொடுக்கிறது. நான் பாடல்கள், கவிதைகள் எழுதுகிறேன், சோகமான தருணங்களில் அவை என்னைச் சிறப்பான முறையில் வெளிப்படுத்த உதவுகின்றன. அதனால் நான் அந்தக் கவிதைகளுக்கும், கதைகளுக்கும் திரை வடிவம் கொடுக்க விரும்புகிறேன். பாடல்கள் எழுதுவதும் எனக்கு மிகவும் பிடித்தமான ஒரு செயல்’ என்றுள்ளார் ஸ்ருதி. தந்தையின் இடத்துக்கு வந்துவிடுவார் மகள் என்கின்றனர் ஸ்ருதியின் இரசிகர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சித்திரமே கதை பேசு!

■ ப்ராடி

## தமிழில் சித்திரக்கதைகளின் உருவாக்கம் 9

ஒரு நாவலை வேறு மொழிகளுக்குப் பெயர்ப்பதைக் காட்சிகளோடு சித்தி ரக்கதைகளாக உருவாக்க முடிந்தால் அது இன்னும் எளிதாக அனைத்துத் தரப்பு வாசகர்களையும் சென்றடையும். அதனால்தான் உலகின் பிரபல நாவல்கள் பலவும் காமிக்ஸ்களாகவும் கிராபிக் நாவல்களாகவும் வடிவம் மாறிவருகின்றன.

உலகின் பிரபலமான அறிவியலாளர்களும் பல்துறை விற்பன்னர்களும் தங்கள் வாழ்வில் காமிக்ஸ்கள் ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றிப் பகிரும் தகவல்கள் ஆச்சரியமளிப்பதில்லை. காரணம், சித்திரக் கதைகள் அந்த அளவுக்கு வலிமையான ஊடகங்களாகவே இருக்கின்றன.



ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் காமிக்ஸ்களை மட்டும் விற்பதற்கென ஏராளம் கடைகளும் காமிக்ஸ் வாசகர்களுக்கென தனி நூலகங்களும் இயங்குகின்றன.

காமிக்ஸ்களின் அடிப்படை, உருவாக்கம், இணைப்பு, வரலாறு போன்றவை குறித்து கற்பிக்கும், ஆய்வுகளை நடத்தும் பல்கலைக்கழகங்கள் பல நாடுகளிலும் உள்ளன. இன்றைய இளைஞர்கள் மிக ஆர்வத்தோடு சித்திரக்கதைகள் பற்றிய கல்வியை மேற்கொள்கின்றனர்.

ஆனால், தமிழ் மொழியில் காமிக்ஸ்களின் உருவாக்கங்களை மிகச் சொற்பமாகவே காண முடிகிறது. அவையும் தனி நபர் ஒருவரது படைப்பு முயற்சியாகவே காணப்படுகிறது. அதாவது, ஒருவரே கதை எழுதி, அரே படமும் வரையும் அமெச்சூர் படைப்புகளாவே அவை உள்ளன.

ஆனால், 1970 - 80 காலப் பகுதிகளில் தமிழகத்தில் சித்திரக் கதைகளுக்கென தனியானதொரு சிறப்புத் தேர்ச்சி பெற்ற படைப்பாளிகள் பட்டாளம் இருந்திருக்கிறது. சிறுவர் கதைகள், பெரியவர் நாவல்கள் எனப் பல்வேறு படைப்புகள் சித்திரக் கதைகளாக உருவாக்கம் பெற்றுள்ளன.

முன்னரே இந்தத் தொடரில் எழுதியிருந்ததுபோல 'இரும்புக்கை மாயாவி'யை நிகர்த்த உள்நாட்டு உருவாக்கங்களும் நிகழ்ந்துள்ளன. ஆனந்த விகடன், கல்கி, குமுதம் போன்ற தமிழகச் சஞ்சிகைகளில் சித்திரக் கதைகளுக்கென பிரத்தியேகமாகச் சில பக்கங்கள் ஒதுக்கப்பட்டன. அவற்றின் சிறப்பிதழ்களில் அந்தப் பக்கங்கள் அதிகரிக்கப்பட்டு முழு நீளக் கதைகள் வெளியிடப்பட்டன.

வாண்டுமாமா, முல்லை தங்கராசன் போன்ற எழுத்தாளர்கள் சிறுவர்களுக்கான அற்புதக் கதைகளை உருவாக்கி வினு, செல்லம், ரமணி, ராமு, கோபன் போன்ற ஓவியர்களின் உதவியோடு அவற்றுக்கு உயிர்கொடுத்தனர்.

அந்தக் காலகட்டத்தில் சிறுவர்களாக இருந்தவர்கள் கொடுத்துவைத்தவர்கள். இன்று அவற்றில் சில மீள் பதிப்புச் செய்யப்பட்டாலும் பெரும்பாலான கதைகளுக்கு அந்த வாய்ப்புக் கிடைக்காமல் முடங்கியே கிடக்கின்றன.

இலங்கையிலும் சித்திரா போன்ற சஞ்சிகைகள் சித்திரக்கதைகளுக்கெனவே வெளியாகியிருந்தன. அவற்றில் சிங்களப் படைப்புகளின் மொழி பெயர்ப்புகளே பெரும்பாலும் இடம்பிடித்தன. ஒவ்வொரு கதைக்கும் ஒன்று அல்லது இரண்டு பக்கங்கள் ஒதுக்கப்பட்டு தொடர்கதைகள் கொண்ட வார இதழ்களாக அவை பிரசுரமாகின.

இன்றும் சிங்கள மொழியில் சித்திரக்கதைகளுக்கு மட்டுமென சில சஞ்சிகைகள் வெளிவருவதை அவதானிக்கலாம். அதுபோல, சிங்களப் பத்திரிகைகளிலும் பெரியவர், சிறியவர்க்கென சித்திரத் தொடர்கதைகள் வெளிவருவதும் அவற்றை வாசகர்கள் ஆர்வத்தோடு வாசிப்பதும் நடக்கிறது.

தமிழில்....?

> “இன்றும் சிங்கள மொழியில் சித்திரக்கதைகளுக்கு மட்டுமென சில சஞ்சிகைகள் வெளிவருவதை அவதானிக்கலாம்.




# விடைகொடு விடைகொடு ...

காரம் 'டிக்டிக்டிக்' - என இயங்கிக் கொண்டுள்ளது” என்பதாகும். அதா வது காலம் கடந்து செல்கின்றது நாம் அடைய வேண்டிய இலக்கினை அடைய விரைவாகச் செயற்பட வேண்டும் என்பதாகும்.

கொரோனாத் தொற்றுப் பெரும்பாலும் நுரையீரல்களையே பாதிக்கின்றது. கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் நாட்பட்ட சுவாச அழற்சி, காசநோய் என்பன ஏற்படக்கூடிய சாத்தியங்கள் உண்டு. மேலும் உலகில் கொரோனாத் தொற் றால் காசநோய்க்கான, சிகிச்சை வழங்கலில் தடங்கல்கள் ஏற்பட்டன.

குழந்தைகளுக்கான தடுப்பூசி வழங்கலிலும் உலகளாவிய ரீதியில் தடங்கல்கள் ஏற்பட்டன. இவை அனைத்தும் காசநோயினை உலகில் 2035ஆம் ஆண்டளவில் இல்லாது செய்யும் செயற்திட்டங்களில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தி உள்ளன.

இன்று உலகில் 20 லட்சம் மக்கள் காசநோய்க் கிருமியின் தொற்றுக்கு உள்ளாகி உள்ளனர். ஆண்டுதோறும் 10 மில்லியன் மக்களுக்கு காசநோய் ஏற்படுகின்றது. இதில் 1 மில்லியன் சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர். எய்ட்ஸ் நோயாளிகளில் 8 லட்சம் பேருக்கு வருடந்தோறும் காசநோய் ஏற்படுகின்றது. இன்று உலகில் ஆண்டுதோறும் 30 லட்சம் காசநோயாளிகளுக்கு எந்தவித சிகிச்சை வசதிகளும் கிடைப்பதில்லை.

காசநோய்க் கட்டுப்பாடு, சிகிச்சை வழங்கல் தொடர்பாக முன்னுரிமை வழங்குவதற்கு உலக காசநோய்த் தினத்தில் காசநோய்க் கட்டுப் பாட்டுக்கான துரித அணுகுமுறைக ளையும், இலகு அணுகுமுறைகளையும் ஏற்படுத்த அறைகூவல் விடவேண் டிய தருணம் ஆகும். மேலும் கொரோ னாக் கட்டுப்பாட்டில் அடைந்த வெற்றிகரமான செயற்திட்டங்களை உலக நாடுகள் காசநோய்க் கட்டுப் பாட்டிற்கும் பயன்படுத்த வேண்டும். உலகம் கொரோனா உடன் காசநோயினையும் சிந்திக்க வேண்டிய தருணம் இதுவாகும்.

கொரோனாத் தடுப்பில் எவ்வாறு முழு உலகமும் விரைவாகச் செயற்பட்டுத் தடுப்பூசிகளைத் தயாரிப்பதில் வெற்றி பெற்றதோ அவ்வாறே காசநோய்க் கட்டுப்பாட்டிலும் விரைவாகச் செயற்பட முடியும்.

மிகவும் அண்மைய வருடங்களில் காசநோயினை விரைவாகக் குணப்படுத்தக்கூடிய மருந்துகள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் காசநோயினை நான்கு மாதங்களில் குணப்படுத்த முடியும். மேலும் காசநோயாளிகளின் உடலில் நோயெ திர்க்கும் திறனை அதிகரிக்கும் மருந்துகளை அளித்துக் காசநோயா ளிகளை பத்துத் தினங்களில் குணப் படுத்தக்கூடிய சாத்தியங்களும் மருத் துவ ஆராய்ச்சியில் கைகூடியுள்ளது.

கொரோனாத் தடுப்பு மருந்துத் தயாரிப்பில் இந்திய அரசு உலகில் முன்னணி வகித்து பெரும் மருத்துவ மனிதநேயப் பணியினைப் புரிகின்றது. இன்று உலகில் 40க்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொரோனாத் தடுப்பு மருந்தினை வழங்குகின்றது.

பாரத கொரோனாத் தடுப்பு மருந்துச் செயற்திட்டம் வெற்றிய டைந் துள்ள நிலையில், பாரத மருத்துவ ஆளணியினரால் காசநோய்க்கான மருந்துகளை நான்கு மாதங்களில் குணப்படுத்துவதற்கும் மேலும் ஒரு சில வாரங்களில் குணப்படுத்தக்-கூடிய மருந்து வகைகளை உருவாக்கவும் முடியும். இதனைக் காசநோயாளர்க ளது நலன்கருதி உற்பத்தி செய்து விநியோகிக்கவேண்டும். இதன் மூலம் காசநோயினை எளிதில் குணப்படுத்தக்கூடிய நோயாக மாற்றி, காசநோயின் பாதிப்பினை உலகில் இல்லாது செய்யலாம்.


“நடையிடு நடையிடு காசம் களையவே
விடைகொடு விடைகொடு தரணியில்
காசநோய் தனக்குமே”!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளுத்துவாங்கும் மகேந்திரத்தார் 10

என்.குமரன்

# காதல் இப்ப காதலாய் இல்லை..!!



பிள்ளையளையும் பெத்துப்போட்டு, இப்பத்தையான் காலத்தில தான் விரும்பிச் செஞ்சவனிட்ட செலவுக்கு

"காதல் எண்டால் என்ன எண்டு பலருக்கும் இப்ப தெரியாமல் இருக்குது.. ஆண் ஒரு பெண்ணை காதலிக்கிறது மட்டும்தான் காதல் எண்டு இல்ல.. மனுசர் தாங்கள் செல்லமா வளர்க்கிற பிராணிகளில அன்பு வைக்கிறதும் காதல்தான், பிள்ளை தாய்மேல வைக்கிறதும், தாய் பிள்ளை மேல வைக்கிறதும் காதல்தான், ஒரு விவசாயி தான் பயிரிட்டிருக்கிற பயிர் மேல வைக்கிறதும் காதல்தான், ஒரு மிருகம் சகமிருகம் மேல வைக்கிறதும் காதல்தான் இப்பிடி காதல் பல வகையில இருக்கு.. ஆனால் நான் சொல்ல வாறது முழுக்க முழுக்க இண்டைக்கு எங்கடையாக்கள் காதலை எப்பிடிப் புரிஞ்சு வச்சிருக்கினை எண்டும் அதே போல காதலிக்கிற ஆக்கள் என்ன நிலையில இருக்கினை எண்டது பற்றியும் தான்.." அவர் நிறுத்தி நிதானமாகச் சொல்லி முடிக்கவே விளங்கி விட்டது மகேந்திரத்தார் இந்தமுறை இளசுகளை ஒரு பிடி பிடிக்கப் போறார் எண்டு..

"இப்ப பாத்தியள் எண்டால் கண்டதும் காதல் எண்டுற மாதிரி, ஏன் காதலிக்கிறம், ஒராள் மேல ஏன் காதல் வருகுது, பொருத்தமான ஆக்களத் தான் காதலிக்கிறமோ எண்டு ஒரு அறுப்பும் தெரியாமல் காதலில விழுகினம் எங்கட இளசுகள். இப்பத்தையான் காதலை ரண்டு விதமாச் சொல்லலாம். ஒண்டு புத்தியுள்ள காதல் மற்றது புத்தியில்லாத காதல்.. சிரியாதையுங்கோ தம்பி உண்மை அதுதான்.. புத்தியுள்ள காதல் எண்டுறது, தன்னச் சுத்தியுள்ள எல்லாத்தையும் விளங்கிக்கொண்டு ஒரு முடிவோட எது வந்தாலும் சாமாளிக்கலாம் எண்ட நினைப்பில காதலிக்கிறது. அதேநேரம் சரிப்பட்டு வராது, பிரச்சினையளைச் சமாளிக்க ஏலாது எண்ட நிலைமை வரேக்க புத்திசாலித்தனமா விட்டு விலகிறது. இப்பிடியானதுகளையும் புத்தியுள்ள காதல் எண்டு சொல்லுவம், புத்தியில்லாதுகள் எண்டு சொல்லுறது காதல் எண்டால் என்னவெண்டு தெரியாமலுக்கு யாரெண்டே தெரியாத ஒராளுக்கு தன்னைப்பற்றி எல்லாத்தையும் பகிர்ந்து கொண்டு, காசு, நகை முதல் கொண்டு கற்பு வரைக்கும் இழக்குதுகள். அவ்வளவத்தையும் இழந்ததுகள் பிறகு என்ன செய்யுதுகள் தவறான முடிவெடுக்குதுகள். இல்லாட்டிக்கு வேறை ஒராளத் தேடிப் போகுதுகள்.." இன்றைய நிலவரம் குறித்த புரிதலைத் தனக்குரிய பாணியில் சொல்லி முடித்தார்..

"போன கிழமை கதைக்கேக்கையும் சொன்னான் ரெலிபோன் வந்து எங்களை ஆட்டிப் படைக்குது எண்டு.. அதையேதான் திருப்பவும் சொல்லுறன் எங்கட சமூகத்துக்கு பிடிச்ச சனியன் இந்த ரெலிபோன்.. இண்டைக்குத் தம்பி, ஊர்விட்டு ஊர், நாடு விட்டு நாடு எண்டு முகம் தெரியாத ஆக்களோடகூட தொடர்புவருறதுக்கும் காதல் வாறதுக்கும் காரணம் உந்த ரெலிபோன்தானே.."

"தமிழ்ச் சமூகத்துக்கு எண்டு ஒரு மதிப்பு மரியாதை இருந்திச்சு, பழக்க வழக்கங்கள் ஒழுங்கா இருந்திச்சு பாக்கிற பெம்பிளையளை தாயாவும், சகோதரமாவும் பாக்கிற வழக்கம் இருந்திச்சு ஆனால் இண்டைக்குப் பார்க்கேக்க எங்க எங்கட சமுதாயம் போகுது எண்டு தெரியாமலல்லோ கிடக்குது.. பள்ளிக்கூடம் போற காலத்திலயே அதாவது தம்பி எட்டாம் ஆண்டு ஒன்பதாம் ஆண்டிலயே பிள்ளையளை பெடியள் விடுறாங்கள் இல்ல, படிக்கிற நேரத்தில பட்டம் தெளிக்கத் தொடங்கிப் பிறகு அது படிப்படியா வளர்ந்து காதல்ல வந்து நிக்குது.. அப்பிடி வந்து நிக்கிறது சின்ன வயசிலையே கலியாணம் செய்து கொண்டு போறளவுக்கு வந்திட்டுது.. சரி கலியாணம் செய்யுதுகள் சந்தோசமா இருக்குதுகளோ எண்டு பார்த்தால் இல்ல.. தாய் தேப்பன்ர சொல்லுக் கேக்காமல் தாங்களாப் பிடிச்சுக் கொண்டு வந்ததுகள் தாங்களாவே பிரிஞ்சு போகுதுகள்.. அப்பிடிப் போறதுகள் ஒண்டு ரண்டு மாதத்தோட இன்னொண்டோட போகுதுகள்.. சின்ன வயசுக் காதல்ல நடக்கிற சங்கதியள்தான் இது.."



"அதை விட காதல் எண்ட பெயரில இன்னும் கொஞ்சம் சொல்லேலாத விசயங்களும் நடக்குது.. தாங்கள் மனசுக்கு விரும்பி ஒராள கலியாணம் செய்து காசில்ல எண்டு போட்டு நல்ல காசுக்காரனாப் பார்த்து பிள்ளையளையும் விட்டிட்டு போகுதுகள் சிலதுகள். அதைவிட இடைநடுவில ஏலாதவனாப் போனால் அல்லாட்டிக்கு அக்சிடென்டுகளில எழும்பி நடக்கேலாமல் வேலை செய்யேலாமல் போனால் தங்களால பராமரிக்கேலாமக் கிடக்கு எண்டு சொல்லி வெளியால போய் வேற ஒருத்தனோட போகுதுகள், அதுக்கும் மேலால இந்தக் காசு பணம் வந்து வெளியில வெளிக்கிட்டு திரியத் தொடங்கி தான் கட்டினவனவிட ஒருத்தன் ஏதோ ஒரு விதத்தில உயர்வா இருந்தால் அவனோட போகுதுகள். இப்பிடி நடக்கிறதில பாவம் பிள்ளையள் பாதிக்கப்படுதுகள்.. அதைவிட முக்கியமா வெளிநாடு எண்டு ஒண்டு வந்து இஞ்ச செலவழிக்க ஒருத்தனைப் பிடிச்சு வச்சிருந்து அவனிட்ட நல்லாக் கறந்து போட்டு வீட்டில வெளிநாட்டு மாப்பிளை பாத்ததும் இஞ்ச இருக்கிறவனை கைகழுவி விட்டிட்டு வெளிநாட்டுக்கு ஓடுதுகள்.. அங்கபோய் என்ன கூத்தாடுதுகளோ தெரியேல்ல" மனதில் இருந்த அத்தனை ஆதங்கத்தையும் ஒண்டும் விடமால் கொட்டித் தீர்த்தார்.

"இப்பத்தைக் காலத்தில அதிகள வில நடக்கிற தற்கொலைகளுக்கு காரணம் காதல் தோல்விகளும், காதல் எண்டிற பேரில ஏமாத்தப்படுறதும்தான்.. இன்னுமொண்டு சொல்லுறன் எங்கட சில பெடியள் பெண்டுகள் சிலபேரின்ர விளையாட்டுகள் தெரிய வர கொலை செய்யக் கூடத் தயங்கிறாங்கள் இல்ல.. போன வருசமோ அதுக்கு முதல் வருசமோ என்னமோ உங்க யாழ்ப்பாணம் பண்ணையில நடந்தது தெரியும் தானே தம்பி.." நக்கல் கலந்த கருத்தாக சொன்னார்..

"அந்தக் காலத்திலயும் காதல் எண்டுறது இருந்ததுதான் இல்லையெண்டு சொல்லேல்ல.. பள்ளிக்கூடக் காலத்தில நூற்றி ஒண்டு ரண்டு காதல்தான் இருந்திச்சுது.. அதுவும் எப்பிடியெண்டால் நல்லாப் படிக்கிற பிள்ளையளில காதல் வைப்பாங்கள் அதுவும் யார் என்ன எண்டு விசாரிச்சுத்தான் காதலிப்பாங்கள் பெடியள்.. அப்பிடிக் காதலிக்கிற காதலுகள் கட்டாயம் கலியாணத்திலதான் போய் முடியும்.."

**இப்பத்தைக் காலத்தில அதிகள வில நடக்கிற தற்கொலைகளுக்கு காரணம் காதல் தோல்விகளும், காதல் எண்டிற பேரில ஏமாத்தப்படுறதும்தான்..**

"அதைவிட முந்தின காதலுகள் இப்பத்தையான் காலத்தில இருக்கிற போல நாடு விட்டு நாடு போறதும் இல்ல, ஊர் விட்டு ஊர் போறதும் இல்ல.. எப்பிடியிருக்கும் எண்டால் சொந்தத்துக்குள்ள முறைகளைப் பொறுத்து ஏற்கனவே கதைச்சு வைச்சிருப்பினை இல்லாட்டி கதைக்காமல் இருப்பினை, மாமன்ர மகள், மகன் எண்டு.. அப்பிடி இருக்கேக்க அந்தக் கதையளைக் கேட்டு மனசுக்குள்ள நினைச்சுக் கொண்டு இருப்பினை தனக்கு தன்ர மச்சான் இருக்கிறான், மச்சாள் இருக்கிறாள் எண்டு. எப்பவாவது சந்திக்க கிடைக்கேக்க சின்னச் சின்ன அன்புப் பரிமாறல்களையும், நக்கல் நையாண்டியளையும் பகிர்ந்து கொள்ளுவினை.. அப்படியிருந்ததுதான் அந்தக் காலத்துக் காதல்"

இண்டையான் காலத்திலையும் நூற்றில ஒண்டு ரண்டு காதல் இருக்குத்தான், முந்தினது போல மாதத்துக்கு ஒருக்காலும் வருசத்துக்கு ஒருக்காலும் சந்திச்சு கண்ணால கதைக்கிறதும், கதைக்க முடியாமல் போறதும்.. எண்டு இருக்கு அப்பிடியான காதலுகள் நிச்சயம் சேரும்.. ஆனால் காசுக் காண்டியும், அற்ப சொற்ப சுகத்துக் காண்டியும் காதல் எண்ட புனிதமான ஒரு விசயத்தை பயன்படுத்திறவங்கள் இருக்கும் வரைக்கும் காதல் காயாகத் தான் இருக்குமே தவிர கனியாக மாட்டுது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் த்ரிஷா...!

1999இல் பிரசாந்த், சிம்ரன் நடிப்பில் வெளியாகிய ஜோடி திரைப்படத்தில் துணைக் கதாபாத்திரத்தில் தோன்றிய த்ரிஷாவின் திரை வாழ்வு அதன் பின்னர் உச்சமடைந்து கொடி கட்டிப் பறந்தது பலரும் அறிந்ததே. ஜோடிக்குப் பிறகு, மௌனம் பேசியதே, மனசெல்லாம், சாமி, லேசா லேசா , அலை, எனக்கு 20 உனக்கு 18, கில்லி, ஆய்த எழுத்து, திருப்பாச்சி, 96 என அவர் நடித்துள்ள படங்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகும். ஆனாலும் சிலகாலங்களில் அடுத்த டுத்துப் படங்களில் அவர் நடிப்பது குறைந்தது. இந்த நிலையில் வெகு காலங்களின் பின்னர் தற்போது அவரது நடிப்பில் உருவாகியுள்ள 'பரமபதம் விளையாட்டு' என்கிற படம் ஓ.டி.டி. தளத்தில் வெளியாகவுள்ளது. திரு ஞானம் இயக்கியுள்ள இந்தப் படத்தில் த்ரிஷா பிரதான கதாபாத்தி ரத்தில் நடித் துள்ளார். அவருடன் நந்தா, ரிச்சர்ட், ஏ.எல்.அழகப்பன், வேல ராமமூர்த்தி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். படப்பிடிப்பு முடிந்து, கடந்த ஆண்டு மாசி மாதத்தில் வெளியாவதாக இருந்த இந்தப் படம் கடைசி நேரத்தில் வெளி யாகவில்லை. அப்போது இந்தப் படத்துக்காக நடந்த பத்திரி கையாளர் சந்திப்பில் த்ரிஷா கலந்து கொள்ளவில்லை. அதனால் பலரும் த்ரிஷாவைக் கடுமையாகச் சாடினார்கள். இந்த நிலையில்தான் வெகு காலத்தின் பின்னர் மீண்டும் திரையில் தோன்றும் த்ரிஷாவின் மேற்படிப் படத்தை ஓ.டி.டி.யில் வெளியிடப் படக்குழு முடிவு செய்துள்ளது.



# தன் பாடலை மறந்த தேன்சிட்டுக்கள்.. அழிவின் விளிம்பில்!



பெண் குருவிகளை வசப்படுத்து கின்ற பாடலை ஆண் சிட்டுக்கள் மறந்து விட்டன. அதனால் ஆண் சிட்டுகளுக்குக் காதல் பாடல் சொல்லிக் கொடுப்பதற்கு அறிவியலா ளர்கள் முயற்சிக்கின்றனர்.

வாழ்விடங்கள் அல்லது வாழ்வ தற்கான சூழல் பறிக்கப்படுவதால் பறவை இனங்கள் பலவும் அருகி, மறைந்து வருகின்றன. **honeyeater** எனப்படுகின்ற சின்னஞ்சிறு தேன் சிட்டுக்கள் ஆஸ்திரேலியாவில் காணப்படுகின்ற அரிய பறவை இனங்களில் ஒன்று. அவை உலகில் இருந்து முற்றாக அழிந்து போகின்ற ஆபத்தில் இருக்கின்றன.

மஞ்சள், கறுப்பு வண்ணம் கொண்ட இந்தக் குருவிகள் பூமியில் ஆக முந்நூறு மட்டுமே உயிர்வாழ்கின்றன என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**Honeyeater** சிட்டுக்களில் ஆண்பறவை கள் பாடுவதை மறந்து அவற்றின் பண் பாட்டை இழந்துவிட்டன என்பதைச் சூழல் அறிவியலாளர்கள் நீண்ட நாள் ஆராய்ச்சி யின் பின்னர் கண்டறிந்துள்ளனர்.

ஆண் குருவிகளின் பாடல் கேட்டே அவற்றின் மீது மையல் கொண்டு பெண் குருவிகள் இனப்பெருக்கம் செய்கின் றன. பெண் குருவிகளுக்கு மட்டுமே புரிகின்ற அந்த வித்தியாசமான பாடலை ஆண் குருவி கள் மறந்துவிட்டதால் பெண் சிட்டுக்கள் அவற்றை நெருங்குவதில்லை இதனால் இனப்பெருக்கம் தடைப்பட்டு அவை அருகி அழிந்து வருகின்றன என்று அறிவியலாளர்கள் கூறுகின்றனர்.

"பொதுவாக ஆண் குருவிக் குஞ்சுகள் தந்தையிடம் இருந்தே பாடக் கற்றுக் கொள்கின்றன. தந்தைக் குருவி நேரகாலத்து டன் கூட்டை விட்டு



குமாரதாஸன்
பாரிஸ்

வெளியேறிவிடுவதாலும் அல்லது இறந்து விடுவதாலும் குஞ்சுகள் பாடல் கற்றுக் கொள்ளத் தவறிவிடுகின்றன என்பது அவ தானிப்புகளில் தெரிய வந்துள்ளது."-என்று உயிரியல் ஆய்வாளர்கள் கண்டறிந் துள்ளனர்.

பறவைகளின் சூழலில் பாடலை மீண்டும் மீண்டும் ஒலிக்கச் செய்வதன் மூலம் அவற்றைப் பாடுவதற்குத் தூண்ட முடியும் என்று ஆஸ்திரேலிய தேசிய பல்கலைக் கழகத்தின் (**Australian National University**) அறிவியலாளர் ஒருவர் கூறுகிறார்.

கடந்த ஐந்து ஆண்டுகளாகப் பறவைக ளின் பாடும் திறனையும் இனப்பெருக்க கத்தையும் அவதானித்து ஆராய்ச்சி செய்து வருகின்றார் டொக்டர் ரோஸ் கிரேட்ஸ்(**Dr Ross Crates**).

"மனிதர்களைப் போன்றே சில பறவை களும் அடுத்தவர் மூலம் கற்றுக் கொள் கின்ற ஆற்றலைக் கொண்டுள்ளன. கேட்பதன் மூலம் பாடல் பயிற்சியை பெற்றுக்கொள்ள பறவைகளால் முடியும். அவற்றின் பண்பாட்டைத் தக்கவைக்கும் இது போன்ற முயற்சிகள் மூலம் உயிரினங்க ளின் அழிவைத் தடுக்க முடியும்" - என்று அவர் கூறுகிறார்.

ஒலிப்பதிவு செய்யப்பட்ட பாடலை பறவைகளின் சூழலில் ஒலிபரப்புவதன் மூலம் அவற்றின் நினைவில் பதியச் செய்து பாடல் பண்பாட்டை அடுத்த தலைமுறைக் கும் பழக்கப்படுத்தும் முயற்சிகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

"**Royal Society B**" என்ற உயிரியல் ஆராய்ச்சி சஞ்சிகையில் இந்த வாரம் இடம்பெற்ற குருவிகளின் காதல் பாடல் தொடர்பான இத்தகவலை உலக ஊடகங்கள் பலவும் செய்திக ளாக வெளியிட்டிருக்கின்றன.

## இந்த வார சுடோக்கு - 28

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | 6 | | 2 | | | | |
| | 8 | | 4 | | | | 9 | 3 |
| 3 | | | | 8 | 5 | | | 2 |
| 7 | | 9 | | | | | | 8 |
| | 5 | | | 7 | | | 4 | |
| 6 | | | | | | ·7 | | 1 |
| 9 | | | 2 | 4 | | | | 5 |
| 2 | 6 | | | | 8 | | 7 | |
| | | | | 3 | | 1 | | 9 |

இந்த சுடோக்கு விளையாட்டு தர்க்க ரீதியாக எண்களை ஒரொழுங்கில் அடுக்கு வதற்கானது. நேராகவும் கிடையாக வும் 9 பெட்டிகளைக் கொண்டுள்ள இந் தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டி யினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடு களிலும் இரண்டாவது மற்றும் மூன்றா வது நிலைப் பெட்டிகளின் நேர் மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட் டிப்பாகக்கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர் களானால் அதனை அப்படியே வெட்டி

**செம்மண்**
சுடோக்கு,
**551 A**, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையுங் கள். சரியாக எழுதி வெற்றிபெறும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா **250** பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்ற வரின் விவரங்களும் அடுத்தவார பத்தி ரிகையில் வெளியாகும். வெற்றிபெற்ற வர் பரிசுத் தொகையை செம்மண் அலு வலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த வாரம் வெளியாகிய சுடோக் கிற்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9 | 8 | 7 | 5 | 6 | 4 | 3 | 2 |
| 3 | 2 | 6 | 1 | 9 | 4 | 8 | 5 | 7 |
| 5 | 4 | 7 | 3 | 2 | 8 | 1 | 6 | 9 |
| 2 | 6 | 9 | 5 | 1 | 7 | 3 | 8 | 4 |
| 7 | 1 | 3 | 4 | 8 | 9 | 5 | 2 | 6 |
| 4 | 8 | 5 | 6 | 3 | 2 | 7 | 9 | 1 |
| 9 | 3 | 2 | 8 | 4 | 1 | 6 | 7 | 5 |
| 6 | 5 | 4 | 9 | 7 | 3 | 2 | 1 | 8 |
| 8 | 7 | 1 | 2 | 6 | 5 | 9 | 4 | 3 |

*குறிப்பு: கிறீன் மீடியா கவுஸ் நிறுவனத்தின் ஊழி யர்கள் மற்றும் சக நிறுவன ஊழியர்கள் இப் போட் டியில் கலந்துகொள்ளமுடியாது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மட்டத்தில் சட்டம் அவசியம்

> **சட்டம் பற்றி மக்கள் தெளிவாக இருந்தால் குற்றங்களைப் பூதகர மாகக் காட்டி ஏமாற்றிப் பணம் பறிக்கும் சட்டத்தரணி களிடமிருந்தும் லஞ்சம் வாங்கும் காவல்துறை யினரிடமிருந்தும் தப்பிக்கொள்ள முடியும்.**



● கமலநாதன்

“நான்கு வயதுக் குழந்தையான திருஞானசம்பந்தரை அவரது தந்தையான சிவபாத விருதையர் குளத்தருகில் இருத்திவிட்டுக் குளத்துக்குள் மூழ்கிக் குளித்தார். தந்தை நீருக்குள் சில நாழிகைகள் வரை முழ்கிக் கிடந்ததும் தந்தை யைக் காணாத அந்தக் குழந்தை வீறிட்டு அழுதது. அப்போது சிவபெருமானும் உமாதேவியும் தோன்றி அந்தப் பிள்ளைக்குப் பால் கொடுத்தனர் என்று சமயக்குரவர் திருஞான சம்பந்தரின் கதையை நான் கற்பித்த போது அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஐந்தாம் தர மாணவன் ஒருவன் கடும் கோபமுற்று எழுந்து திருஞான சம்பந்தரின் தகப்பன் பொறுப்பற்ற வர், குழந்தைக்கு எவ்வித பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யாது அதைத் தன்னந்தனியாகக் குளக்கரையில் விட்டுவிட்டு அவர் குளித்தது குற்றம், அவருக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்றான்” இது ஆஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகின்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டதாரிப் பெண் ஒருவர் சொல்லியது.

அவர் அங்கு ஞாயிற்றுக் கிழமைகளில் தமிழ் மாணவர்களுக்கு அறநெறிக் கல்வியைக் கற்பிக்கிறார். அபிவிருத்தி அடைந்த நாடுகள் பலவும் சட்டத்தையும் மனித உரிமை விடயங்களையும் தமது பாடசாலைப் பாடவிதானத்தில் சேர்த்திருப்பதால் சிறுவர்கள் தமக்கு அது சார்ந்த பிரச்சினைகள் ஏற்படும்போது காவல்துறையினருக்குத் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி, அறிவித்து அதற்கான நடவடிக்கைகளை எடுக்க முன்வருகிறார்கள்.

இலங்கையில் அவசர அழைப்பிலக்கமான 119க்கு அழைப்பை ஏற்படுத்தித் தமது பிள்ளைகள் சாப்பிடாமல் இருப்பதால் அவர்களை வெருட்டுமாறும், வீட்டுக்குள் பாம்பு வந்துவிட்டது என்று கதறிப் பொலிஸாரை அழைக்கும் நிலை உள்ளது என்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோகண அண்மையில் குறிப்பிட்டிருக்கிறார். வளர்ச்சியடைந்த நாடுகளில் ஒரு சிறு பிள்ளைக்குத் தெரிந்த சட்டரீதியான விடயங்கள் எமது நாட்டில் வளர்ந்தவர்களுக்கே தெரிந்திருக்கவில்லை என்பதையே இது காட்டுகிறது.

இந்தக் கருத்துப் பதிவு செய்யப்பட்ட அதே காலப் பகுதியில் இலங்கையின் பாடசாலைக் கல்வியில், பாடத்திட் டத்தில் சட்டத்தையும் ஒரு பகுதியாகச் சேர்த்துக்கொள்வது குறித்துச் சிந்திக்கப்படு வதான செய்திகளும் வந்துள்ளன. இலங்கை பிரித்தானியர்களிடமிருந்து சுதந்திர மடைந்து 70 வருடங்களின் பின்பாக வேனும் இவ்வாறான ஒரு முயற்சியில் இறங்கியிருப்பது வரவேற் கத்தக்கது.

இந்தச் சட்டங்களை எவ்வாறு பாடவிதானத்தில் புகுத்துவது என்பது தொடர்பில் ஆராய்வ தற்காகக் கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக் கழகங்கள் மற்றும் தொலைக் கல்வி மேம்பாட்டு ராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த் தலைமையில் ஒரு குழு அமைக்கப் பட்டிருக்கிறது. இந்தக் குழுவில் ரஊப் ஹக்கீம், சிறிதரன், வீரசுமண வீரசிங்க, சாகர காரியவாசம், அமர கீர்த்தி அத்துக்கோரள, டயான கமகே, சுதர்சன தென்னிப்பிட்டிய ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

ஒரு நாட்டின் சில அடிப்படையான சட்டங்கள்கூடச் சாதாரண மக்களுக்கோ, பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்கோ தெரிந்திருப்பதில்லை. 13 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளை வேலைக்கு அமர்த்தக்கூடாது என்பது பெற்றோருக்கோ அவ்வாறான சிறுவர்களை வைத்து வேலை வாங்குவது சட்டவிரோதமானது என்பது படித்தவர்களுக்கோ தெரிந்திருப்பதில்லை. பேராசிரியர் ஒருவர் 13 வயதான பெண் பிள்ளை ஒன்றைத் தனது வீட்டில் வேலைக்கு அமர்த்தியிருந்தார். அவரால் அந்தப் பிள்ளை பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் குற்றச்சாட்டு உண்டு.

பெண்களுக்கான உரிமைகள் பற்றி பெண்கள் சரியாக அறிந்திருப்பதற்கும் மனித உரிமை விடயங்களை விளங்கிக் கொள்வதற்கும் பாடசாலைப் பாடவிதானத்தில் சட்டக் கல்வியைப் புகுத்துவது மிக அவசியமானது.

சட்டம் பற்றி மக்கள் தெளிவாக இருந்தால் குற்றங்களைப் பூதகரமாகக் காட்டி ஏமாற்றிப் பணம் பறிக்கும் சட்டத்தரணிகளிடமிருந்தும் லஞ்சம் வாங்கும் காவல்துறையினரிடமிருந்தும் தப்பிக்கொள்ள முடியும். பல்லின மக்கள் வாழ்கின்ற இலங்கையில் ஓர் இனத்துக்கு மட்டும் சார்பாக நடந்துகொள்ளாமல் போட்டிப் பரீட்சைகளில் சிறப்புச் சித்திகளை முன்னுரிமைப்படுத்தும் பட்சத்தில் பல இனங்களைச் சேர்ந்தவர்கள் உயர் பதவிகளுக்கு வர வாய்ப்பு ஏற்படும்.

இதன் மூலம் இனங்களுக்கி டையிலான முரண்பாடுகள் தவிர்க்கப்படும். தாம் புறக்க ணிக்கப்படவில்லை என்ற உணர்வு சிறுபான்மை மக்களிடம் எழுவதைத் தவிர்க்க முடியும்.

எது எப்படியிருப்பினும் இதுவரை கல்வித் திட்டத்தில் இல்லாத ஒன்றை அறிமுகப்படுத்துவதால் சாதாரண மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படவும் எதிர்கால மாணவர் சமுதாயம் தமக்கு ஏற்படும் பிரச்சினைகளை உரியவாறு எதிர்கொள்ளவும் வாய்ப்பாக அமையும். ■

# நல்ல சமூகக் கட்டமைப்பை இழந்துவரும் தமிழர்கள்



— நியூட்டன் —

தமிழ்ச் சமுதாயத்தைப் பொறுத்தவரையில் குடும்பத்தில் உள்ள முக்கிய நபர் - அல்லது குடும்பத் தலைவரானவர் தனது குடும்பத்தில் ஏற்படும் நெறி தவறிய விடயங்களை நேரடியாகக் கண்டிப்பது இயல்பானதாக இருக்கிறது. இது சட்டங்கள் உருவாக்கப்பட முன்னர் இருந்து வருகின்ற ஒரு சமூக வழக்காறும்கூட.

இப்படியிருக்க, வட்டக்கச்சிக் கிராமத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் காதல் விவகாரம் ஒன்றைக் கண்டித்தன் எதிர்வினையாகப் பதினோழு வயதுடைய இரண்டு சிறுவர்களால் கத்தியால் குத்தப்பட்டு இறந்துள்ளார். தனது மனைவி பிள்ளைகளின் முன்னாலேயே குருதி வெள்ளத்தில் துடி துடித்துப் பரிதாபமாக இறந்த அவர் தனது பிறந்த நாளன்று கொல்லப்பட்டிருக்கிறார். கொல்லப்பட்டவர் ஒரு சமூக சேவையாளராகச் செயற்படுபவர் என்று அறிய முடிகிறது. குத்தியவர்கள் சமூக விரோத நடவடிக்கைகளிலே பெயர் போனவர்களாக அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

உடல் ஊனங்கள் மற்றும் உபாதைகளுடன் எவ்வித உதவிகளும இன்றித் தமது காலில் நின்று தாமாக உழைத்து வாழ்கின்ற பலர் மத்தியில் கொல்லப்பட்டவரும் ஒருவர். தமது பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக அதிகம் பாடுபடுகின்ற இவரைப்போன்றோர் மற்றவர்களுக்கு இடையூறு கொடுக்காது தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துகின்றனர். இவ்வாறான பல குடும்பங்களுக்கு மற்றவர்கள் எவ்வளவு உதவினாலும் முன்னேற முடியாத நிலை நீடிப்பதைப் பொதுவாகக் காணமுடிகிறது.

சமூகத்தில் பிழையானவர்களின் கைகள் ஓங்குவதற்கு அளவுக்கதிமாகக் கிடைக்கும் பணமும் அந்தப் பணத்தைக் கொண்டு அவர்கள் தேடுகின்ற மதுப்பாவனை, போதைப் பழக்கம் ஆகியனவும் அந்தப் பழக்கவழக்கங்களையுடைய ஆட்சேர்க்கையும் காரணங்களாக இருக்கின்றன.

அண்மைக்காலத்தில் சட்டவிரோத சாரயமான கசிப்பின் பாவனை தமிழர் மத்தியில் மிக வேகமாக அதிகரித்திருக்கிறது. அவ்வாறானதொரு செயற்பாட்டின் பின்னணியிலேயே வட்டக்கச்சிக் குடும்பத்தலைவர் கொலையுண்டிருப்பதையும் நோக்க வேண்டும். கொலையாளிகளும் மனிதர்களாகவே இருக்கிறார்கள். அவர்களின் தாய், தந்தையரின் வளர்ப்பும், அவர்கள் வாழும் சமூகத்தின் தன்மையுமே அவர்களின் வாழ்க்கை முறையாக இருந்திருக்கிறது.

அந்த வாழ்க்கை முறையின் விளைவும் அந்த வாழ்க்கைமுறையின் ஓர் உதாரணமும்தான் சக மனித உயிர் ஒன்றைக் குடிக்கும் வகையில் குரூரமாக இருந்துள்ளது. அத்தோடு தமிழருக்கு அரசியல் தலைமையோ, சமூகத் தலைமையோ, சமயத் தலைமையோ ஒழுங்கமைக்கப்பட்டதாக இல்லை என்பதையும் இது காட்டி நிற்கிறது.

தாய் - தந்தை — ஆட்சேர்க்கை — அவர்கள் வாழும் சமூகம் ஆகியன இதற்குக் காரணமல்ல. இவற்றைக் கட்டுப்படுத்தும் வல்லமை சாதாரண மக்களிடம் இல்லாது போய்விட்டாலும் அரசியல், சமய, சமூகத் தலைமைகளின் பலவீனமும் இதற்குக் காரணமே. அதேவேளை தமிழ்ச் சட்டத்தரணிகள் பலர் குற்றம் புரிந்தவர்களை எவ்வாறு காப்பாற்றுவது என்பதிலேயே தமது மூளைகளைப் பிசைந்து வருகிறார்கள். இது ஏற்கனவே நொந்துபோயிருக்கும் தமிழ்ச் சமூகத்தை மேலும் அழித்துவிடும் வாய்ப்பையே அதிகப்படுத்தும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழையை களவாடத் திட்டம்...!

மழையைக் காவிச் செல்கின்ற மேகக் கூட்டத்தை அதிர்ச்சியூட்டுவதன் மூலம் அது காவிச் செல்கின்ற மழையைக் களவாட முடியும் என்று திட்டம் ஒன்றைத் தீட்டி அதை நடைமுறைக்கிடவும் துணிந்துள்ளார்கள் மனிதர்கள். மழையே கிடைக்கப் பெறாத பாலைவனத் தேசங்களில் ஒன்றான ஐக்கிய அரபு இராச்சிய மனிதர்களின் முயற்சிதான் இது. இந்த முயற்சி ஊடகங்களில் கசிந்துள்ளது. மழையைக் காவிக் செல்கின்ற கருமேகங்களுக்கு எப்படி அதிர்ச்சியூட்ட முடியும்...? மேலும் வாசியுங்கள்....!

மழையைக் காவிச் செல்கின்ற கருமேகக் கூட்டங்கள் மீது உப்பு தூவி அந்த மேகம் காவிச் செல்கின்ற மழையைத் தரையில் இறக்கும் வித்தையான கிளவுட் சீடிங் (மழைக் கருவூட்டல்) தொழில் நுட்பம் ஐக்கிய அரபு இராச்சியத்துக்குக் கைவந்த கலை. ஏற்கெனவே பயன்படுத்தி வருகிறது. அதில் அந்த நாடு நன்கு பரீட்சயம் கண்டும் விட்டது. ஆனால், அந்த முறையில் கிடைக்கின்ற மழை அரபு இராச்சியத்துக்குப் போதாமல் உள்ளதால் அது இப்போது அதிக மழையைத் திருடப் புதிய உத்தி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளது. அந்தப் புதிய உத்தி என்னவென்றால், மழை மேகத்துக்கு ட்ரோன் மூலம் மின் அதிர்ச்சியைக் கொடுத்து (கரண்ட் அடிக்க வைத்து) அதன் மூலம் அதிக மழையை பெய்ய வைப்பதே. மழைமுகிற்கூட்டங்களுக்குள் ட்ரோன்களை அனுப்பி மின்னதிர்ச்சியைக் கொடுத்து மழையைப் பெய்யவைக்கும் இந்தப் புதிய தொழில்நுட்பத்தை அரபு இராச்சியம்; பரிசோதிக்கவுள்ளது. ட்ரோன் மூலம் மேகங்களுக்கு மின் அதிர்ச்சியை வழங்கினால், மேகங்கள் காவித்திரிகின்ற நீர்த் திவளைகளின் மின் சுமையின் சமநிலையை மாற்றும்போது மழை தரையை அடையும். அரபு இராச்சியத்தில் உள்ள ஏராளமான மழைமேகங்களில் உள்ள நீர்த் திவளைகளை ஒன்றோடு ஒன்று ஒட்டிக்கொள்ளும்படி தூண்டுவதே இந்த திட்டம். நிலையான மின்சாரத்தை அவை எதிர்கொள்ளும்போது, ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொள்ளும். இதனால் பாரமடைந்த அவை தரையைக் குளிர்விக்கும். மழை பெய்ய வேண்டிக் கோவில்களில் திருவிழாக்களையும், யாகங்களையும் நம்மவர்கள் நடத்த ஐக்கிய அரபு இராச்சியத்தின் புதிய தொழில்நுட்ப யோசனையைப் பார்த்தீர்களா...?





# சம்பந்தர் கடையடிச் சமா...

“அடுத்தவன் பிள்ளைக்கு அப்பன் ஆகிறதெண்டா இங்க கனபேர் இருக்கினம் என்னண்னே?” என்றவாறே கடையடிக்கு வந்திறங்கினான் சுப்பன்....

“ன்னடா சொல்லிறாய்..... சுத்தம் பத்தமான குடும்பத்தில அப்பிடி எல்லாம் நடக்குமே? எங்கட சமூகத்தில அப்பிடி எல்லாம் இருக்காது.... நீ என்ன சொல்ல வாறாய் எண்டு விளப்பமாச் சொல்லடாப்பா.... நீ சொல்லிறதைப் பாத்தா... ஆரோ பெத்த பிள்ளைக்கு இனிசலாத் தன்ரை பேரை வைக்கிறாங்கள் எண்டெல்லோ சொல்லிறாய்....”

“ஓமண்ணை.... அவனவன் கஸ்டப்பட்டு... ஏதோ செய்ய வெளிக்கிட... நோகாம நிண்டு போட்டு கடைசியில் தாங்கள்தான் செய்யுறது மாதிரி காட்டுற எங்கட இந்திரன்களைப் பற்றித்தான் அண்ணை சொல்லிறன்....”

“எப்பப் பார் அவங்களை இழுக்காட்டி உங்களுக்கு நித்திரை வராது.... அவங்கள் யாரெண்டு நினைக்கிறியள்.... காலங் காலமா கட்டி வளத்த கட்சியின்ற ரெண்டு பெரிய தூண்கள்...” வேணுமெண்டே அவன்ற வாயைக் கிளறினன்.

“சும்மா போண்ணை! அங்கால ஊரில உள்ளவன் எல்லாம் அடிபட வேணும்.... சாகவேணும்.... நாங்கள் கிண்டி விட்டுட்டுக் கூத்து பாப்பம்... இதுதானே பாரம்பரியமாக் கட்சி நடத்திறவயின்ற லட்சணம்?”

“என்னடாப்பா சொல்லுறாய்...? விசியத்தைச் சொல்லு... நேரம் போகுது....”

“அண்ணை.... இப்ப அங்கால ஜெனிவாக் கூட்டங்கள் நடக்குதெல்லே.... அதை வைச்சு இங்க வயிறு வளகிறவங்களைத்தான் சொன்னன்.... நான் தெரியாமத்தான் கேக்கிறன் ...... இங்க நடக்கிற போராட்டங்கள் எதிலயாவது... உந்தக் கட்சிக்காரர் ஆராவது எப்பவாவது நான் இருக்கிறன் எண்டு தண்ணி, வென்னி இல்லாம இருந்திருக்கினமே.....

கம்பஸ் பெடியள் பாவங்கள்... ஆர் என்ன சொன்னாலும் எடுபட்டுப் போய் நிக்குதுகள்... அவங்களைக் கிண்டி விட்டுட்டு.... அவங்கள் பட்டினி கிடக்கிறமெண்டும்... அது இதெண்டும் போராட்டங்களைத் தொடங்குவாங்கள்... கடைசியில பாத்தா.... தங்கடை அல்லக்கைகளைக் கூட்டிக் கொண்டு வந்து வொயிஸ் குடுக்கிறம் எண்டு ஏதோ தாங்கள்தான் எல்லாம் நட்டு, நிமித்தினாங்கள் எண்ட மாதிரி வீடியோக்கு போஸ் குடுக்கினம்”

“அட சுப்பா...! உன்னைவிட உதில நான் கனக்க அறிஞ்சனானடா - ஏன் நேரில அனுபவிச்சனடா.... போன கிழமை பெரியாஸ்பத்திரி கிளினிக்குக்கு போகக்கதானே பாத்தனான்... நல்லூர் ஆதினத்துக்கு பக்கத்தில கொட்டில் போட்டிருந்த இடத்தில.... நான் போகேக்க ஒரு எட்டு மணி இருக்கும்... ஒரே ஒரு பெடி படுத்துக் கிடந்து ஃபோனை நோண்டிக் கொண்டு இருக்குது... ஆனால் எந்த வெப் சைட்டைப் பாத்தாலும்... அவர் வந்தார்... அவர் வந்தார் எண்டு போடுறதும், நள்ளிரவையும் தாண்டியும் களத்தில் நாங்கள் எண்டு தங்கட முகப் புத்தகங்களில புழுகுறதும்தானே சனத்துக்குத் தெரியிறது.... போய்ப் பாத்தாத்தானே உண்மை என்னவெண்டு தெரியுது...

ஏன் உதைச் சொல்லுறாய்... வளாகத்தில தூபியை உடைக்கிறாங்கள்.... நாங்கள் இல்லாட்டி... நாலு தூபியையும் உடைச்சிருப்பாங்கள் எண்டு நிமிசத்துக்கு ஒரு லைஃப் குடுத்துக் கொண்டிருந்த ஒருத்தரும் - ஏன் நான் அவரைச் சந்திக்கிறன் : இவரைச் சந்திக்கிறன், இப்பிடி, அப்பிடி எண்டு அறிக்கை விட்டுத் திரிஞ்ச ஒருத்தர்கூட இப்ப பெடியள் கட்டுற தூபிக்கு என்ன நடக்குது எண்டு எட்டிப்பாக்கவும் இல்லயாம் தெரியுமே.... ஆளும் பேருமாச் சேந்து தங்களால முடிஞ்சதைக் குடுத்திருந்தா.. இப்ப அந்தத் தூபி கட்டுப்பட்டு, திறப்பு விழா முடிஞ்சிருக்கும்.....

நான் எங்கை இருந்து சொல்லுறன் எண்டு பார்.... பெடியள் அரிச்சுப் பொரிச்சு.... அவை... இவையிட்ட பல்லைக் காட்டிக் காசு சேர்த்து தூபி கட்டி முடிய திறந்து வைக்கிறதுக்கு அது எனக்குத் தான் உரிமை... இதுக்குள்ள அவர் வரக்கூடாது இவர் நிக்கக்கூடாது எண்டு முண்டிக் கொண்டு நிக்காட்டி....

இவ்வளவும் ஏன்... இப்ப தூபி உடைச்சது பிழை எண்டு தேர்தலுக்காகக் கத்தினதில ஒருத்தராவது தூபி கட்ட விட்டதால தான் முந்தின துணைவேந்தரை வீட்டுக்கு அனுப்பிறம் எண்டு தெனாவெட்டா அறிக்கை விட்டு அந்தாள அந்தக் கதிரையை விட்டுத் தூக்கிக் கடாசேக்க எங்க போனவை? அந்த நேரம் தேர்தல் ஒண்டும் வரையில்ல... அதால அந்த நேரம் உவையள் ஒருத்தருக்கும் தூபியும் தெரியேல்ல.... தூபி கட்டினதுக்காகத் தூக்கியெறியப்பட்டவரையும் தெரியேல்ல.... உண்மையா... உணர்வுள்ளவையா இருந்தா... இந்த நேரமே கெம்பி இருக்க வேணுமெல்லே.....

இன்னொண்டைச் சொல்லுறன் கேள் போன கிழமை சுகாதாரத் தொண்டர்கள் போராடிக் கொண்டிருந்த இடத்துக்குப் போன கஜாக்களில இளையவர், உப்பிடியே போனியள் எண்டா ஒண்டும் நடக்காது தீக்குளியுங்கோ.... எண்டு சொன்னவராம்.... அதாவது தீ குளிக்கிற மாதிரி நடியுங்கோ... நாங்க காப்பாத்துற மாதிரி காப்பாத்துவம் எண்டு சொன்னவராம். அந்த மனுசனை உடம்பு முழுக்க மண்ணெண்ணை ஊத்த வைச்சுப் போட்டு எப்ப அந்தாள் கொளுத்தும் எண்டு இவையள் பத்துக் கொண்டு நிண்டதில போராட்டக்காருக்குக் கடும் கடுப்பாம்.... அடுத்த நாளும்.... அமைச்சர் ஒராள் வந்து அதுகளோட கதைக்க... இவையின்ற சட்டம்பி ஒருத்தர் மூக்கை நுழைச்சு வாங்கிக் கட்டிக் கொண்டவராம்.... அவரை ஆர் கூப்பிட்டது.. நாங்களே பாத்துக் கொள்ளுறம்... நீங்க போங்கோ எண்டு இந்தச் சனமே அடிக்காத குறையாக் கலைச்சுப் போட்டுதுகளாம்....

அவர் கூட்டிக் கொண்டுபோன அவற்றை வீடியோக்காரர் அந்தக் கட்டங்களை வெளியில விடயில்லையாம்....”

“அப்பப் பாரணண்ன்னை... நான் சொன்னதில என்ன பிழை இருக்கு? ஆர் எப்பப் பிள்ளைப் பெறுவான்.. அதுக்கு நாங்கள் கிளெய்ம் பண்ணுவம் எண்டு திரியுறாங்களோ... இல்லையோ?”

- ஆதிரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குதிப்போடும் குதூகலப் பருவம்

> “ அடை மழை அல்லது தொடர் மழைக் காலத்தில் அதாவது ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங் களில் நாட்டின் வடபகுதிக்கு வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்று மூலம் கிடைக்கின்ற மழையே ஆழ்கடலில் மாத்திரம் வாழ்க்கை நடத்துகின்ற இந்தக் குதிப்பு மீன்களைக் கரையோரக் கடல்ப டுக்கைகளை நாடி வரவழைக்கின்றது.



என்ன அது குதிப்பு...? குதிப்பு என்பது உங்களுக்குப் புதுவிதச் சொல்லாக இருக்கலாம். ஆனால், கரையோர மக்கள் பலருக்கும் பழக்கப்பட்ட சொல் இது. ஒரு வகையான ஓரா மீன் வகையே இந்தக் குதிப்பு. ஓரா மீனின் வடிவத்தி லிருக்கின்ற இந்தக் குதிப்பு மீன்களின் வால் பகுதி மஞ்சள் நிறத்தில் இருப்பதால் ஒரு சிலர் இதை மஞ்சள் வால் ஓரா என்றும் சொல்கின்றனர். வால் பகுதியில் மாத்திரமன்றி அதன் சிறகுப் பகுதி முட்டாடைகளும் மஞ்சள் வண்ணத்தில் தான் காணப்படுகின்றன. மற்றப்படி அச்சு அசலாக ஓரா மீனின் வடிவத்தில் இருக்கின்ற இந்தக் குதிப்பு மீன்களின் ருசி ஓரா மீன்களில் இருந்து வித்தியாசமானது. அதிக சுவையுடையது.



மழைக்காலத்தில் மாத்திரம் கரைகளை வந்தடைந்து கரைகளில் அதிகம் உலாவுவதாலோ (குதித்துத் திரிவதால்) என்னவோ இதற்குக் குதிப்பு என்று பெயர். இப்படியாக மழைக் காலத்தில் கரையோரக் கடற்படுக்கைகளை நாடுகின்ற இந்தக் குதிப்பு மீன்களைப் பிடித்துச் செல்வமீட்டித் தமது தொழிலில் கொடி கட்டிப் பறக்கின்ற மீனவர்கள் பலருளர்.

மழைப் பருவத்தில் மாத்திரம் பிடிபடுகின்ற இந்த மீன்களை அதிகம் பிடித்து விடவேண்டும் என்கிற முனைப்பில் தொழில் செய்து அந்தப் பருவத்தில் செல்வந்தர்களாகின்ற மீனவர்களும் அதிகம். இதனால் இந்தக் குதிப்போடும் பருவத்தில் மீனவக் குடும்பங்கள் பலவற்றின் வாழ்வும் செழிப்படைகிறது.

இந்த மழைப் பருவக் குளிரில் கடும் மழைக்கு மத்தியிலும் உடல் நடுங்க குதிப்புப் பிடிப்பில் ஈடுபடுகின்ற மீனவர்களின் ஊக்கம் ஆச்சரியம் அளிக்கும் சங்கதி. அவர்களில் பலர் தொழில் நிமித்தம் தமது மேலாடைகளைக் களைந்து விட்டுக் கடலுடனும் மழையுடனும் உறவாடித் திரிவது பார்ப்பவர்களைப் புல்லரிக்கச் செய்யும் புதுவித அனுபவம். தொழில் அதிகம் நடக்கின்ற அந்தப் பொழுதில் அவர்களின் முகங்களில் தோன்றும் வெளித்தெரியாத புன்முறுவலும் அற்புதமானதே.

**குதிப்போடும் பருவம்**

அடை மழை அல்லது தொடர் மழைக் காலத்தில் அதாவது ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் நாட்டின் வடபகுதிக்கு வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்று மூலம் கிடைக்கின்ற மழையே ஆழ்கடலில் மாத்திரம் வாழ்க்கை நடத்துகின்ற இந்தக் குதிப்பு மீன்களைக் கரையோரக் கடல்படுக்கைகளை நாடி வரவழைக்கின்றது. இந்தப் பருவமழை தொடர்ச்சியாகச் சில நாள்கள் வரை பெய்கின்றபோது ஆழ்கடலில் குளிர் அதிகமாவதால் இந்த ஆழ் கடல் மீன் கரையை நாடி வருகிறது என்று விளக்கமளிக்கிறார் வேலணையைச் சேர்ந்த குமாரு.

குமாருவுக்கு 55 வயதிருக்கும். ஆனால் குமாருவைவிட கடற்றொழிலில் அதிக அனுபவம் கொண்ட 60 வயதுடைய துரைச்சாமி இப்படிச் சொல்கிறார், ‘‘தொடர்ச்சியா மழை பெஞ்சாப்போல குதிப்பு ஓடிராது... நல்ல இடியோட கூடின கடும் மழை அடைச்சுப் பெய்யவேணும்... அப்பதான் ஆழ் கடலுக்க கல்லுகளுக்க பதுங்கிக் கிடக்கிற குதிப்புகள் வெளியால வரும். அதோடை அதுக்குச் சரியாகக் காத்தும் நிற்க வேணும்...’’

● றியாக்குட்டி

குமாரு சொல்வது போலத் தொடர்ச்சியான அடை மழையால் கடல்குளிராவதால் மாத்திரம் கரையோரத்தைத் தேடி ஆழ்கடல் மீனான குதிப்பு வந்துவிடாது. அந்தக் கடும் குளிரால் ஒரு சில குதிப்பு மீன்கள் கரைக்கு வந்தாலும் கரையோரத்தை நோக்கிய அவற்றின் அள்ளை கொள்ளையான நகர்விராது. ஆனால், துரைச்சாமி சொல்வது போல கடும் மழையும் அதனால் குளிரும் உண்டாகிய சமயத்தில் இடி முழக்கங் கள் ஏற்பட்டால் திக்குத் தெரியாமல் குதிப்பு மீன்கள் கூட்டம் கூட்டமாகப் புலம்பெயரும்.

மீன்கள் காற்றுக்கு எதிர்த்திசையில் நீச்சலடிப்பது இயல்பாகையால் அந்த நேரத்தில் கரையிலிருந்து கடலைத் தேடியதாகக் காற்றும் வீசுமாக இருந்தால் குதிப்புகளின் கரையோரத்தைத் தேடிய படையெடுப்பு அதிகமாகவிருக்கும்.

**குதிப்பு மீன்களை எப்படிப் பிடிக்கிறார்கள்...?**

குதிப்பு மீன்களைப் பிடிப்பதற்கென்று புதுவித தொழில் முறைகள் எவற்றையும் மீனவர்கள் பயன்படுத்துவதில்லை. களங்கட்டி அல்லது பட்டி என்றழைக்கப்படுகின்ற வீடு அல்லது கூடு போன்ற வடிவத்தில் கம்புகள் கம்பிகளைப் பயன்படுத்திக் கடலில் வடிவமைக்கப்படுகின்ற வலைகளின் மூலமே இந்தக் குதிப்புகளை அதிகம் பிடிக்கிறார்கள். அத்தோடு சில மீன் வலைகளைப் பயன்படுத்தியும் பிடிக்கிறார்கள். இந்தப் பருவத்தில் கரையோரத்தில் குவிகின்ற வீச்சு வலைத் தொழிலாளர்களில் சிலரது வலைகளிலும்கூட அரிதாக இந்த மீன் பிடிபடுகிறது. ஆனால், இதை அதிகம் பிடிப்பது களங்கட்டிக்காரர்கள்தான்.

**களங்கட்டிக்காரர்களின் தயார்ப்படுத்தல்...!**

வருடத்தில் ஒரு தடவை ஒரு பருவத்தில் மாத்திரம் பிடிபடுகின்ற இந்த மீன்களுக்கிருக்கின்ற மவுசு காரணமாக அந்த ஒரு தடவை மாத்திரம் கரையை நாடுகின்ற குதிப்புகளைப் பிடித்துவிடுவதற்குத் தம்மைப் பல மாத காலங்களுக்கு முன் னரே மீனவர்கள் பலரும் தயார்ப்படுத்தி வைத்தி ருக்கிறார்கள் என்பது பலரறியாத சங்கதி.

வேலணை - புங்குடுதீவுக் கடற்பாதைக்குக் கிழக்குப் பகுதிக் கடலில் மாத்திரமே இந்த மீன்களின் நடமாட்டம் அதிகம் இருக்கும். இதனால் தலைமுறை தலைமுறையாக அந்தப் பகுதிக் கடலில் தமக்கென்று எல்லையமைத்து களங்கட்டித் தொழிலில் ஈடுபடுகிறார்கள் அந்தப் பகுதி மீனவர்கள். சாதாரண பருவங்களில் நிலவுகின்ற சாதாரண மீன்பிடியுடன் கழிந்தாலும் அவர்களில் தொழில் இந்தக் குதிப்புப் பருவத்தைக் குறிவைத்தே நகர்வதாக இருக்கும். குதிப்புப் பருவம் அண்மித்ததும் தமது வலைக ளைச் சுத்தம், துப்புரவு செய்து அடைமழை அண் மிக் கின்ற பருவத்தில் அடுத்தடுத்துக் கடலில் ஊன்றுவதன் மூலம் அதிக குதிப்பு மீன்களைப் பிடித்துவிடுகிறார்கள்.

கிட்டத்தட்ட 3 தொடங்கி 4 நாள்கள் வரையோ அல்லது ஒரு வாரம் வரையோ நீள்கின்ற அடை மழைப்பருவத்தில் நாளொன்றுக்குச் சில பத்தாயிரங்களில் தொடங்கிச் சில லட்சம் ரூபா வரையில் உழைக்கும் வாய்ப்பு இந்தப் பருவத்தில் அவர்களுக்குக் கிடைக்கிறது. இதனால் இந்தக் குதிப்போடும் பருவம் மீனவர்களுக்குக் குதூகலமளிக்கிறது. இந்தக் குதூகலப் பருவத்தில் மீனவர்கள் மத்தியில் சில முரண்கள் தோன்றி மறை வது தவிர்க்கவியலாதவையாகவிருப்பினும் அவை யனைத்தையும் மறைத்து மகிழ்வளிக்கிறது இந்தப் பருவம்.



இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ, கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.03.2021 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு: 0214927781

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org